விலை : 20.00

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

பக்கங்கள் :இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 23 வியாழக்கிழமை (08.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 264

கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144,

பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## மீண்டும் மோடி இலங்கை வருவார்

(கொழும்பு)


இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த வருடம் மே மாதமளவில் இலங்கைக்கு வரவுள்ளதாக, அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை வரும் அவர், இந்திய உதவியில் ஹட்டன் நகரில் நிர்மாணிக்கப்படும் வைத்தியசாலையொன்றை திறந்து வைக்கவுள்ளதோடு கொழும்பில் இடம் பெறவுள்ள நிகழ்வொன்றிலும் கலந்து கொள்வார் என அமைச்சர் குறிப்பிட்டார். (செ-11)

## போராட்டம் நடத்திய மாணவிகள் மீது தாக்குதல்

### உடுவில் மகளிர் கல்லூரியில் நேற்று பதற்றம்






23ஆம் பக்கம் பார்க்க....

# தமிழர் மனோநிலை அறிந்த அரசியல் யாப்பே அவசியம்

### அமெரிக்க குழுவிடம் முதலமைச்சர் எடுத்துரைப்பு



தனித்துவமான ஓர் இனம் தனக்கான சுயநிர்ணய உரிமையை கோருவதற்கு உரித்துடையது. அந்த வகையில் மக்களது மனோநிலையை அவர்களது சரித்திர பின்னணியை புரிந்து கொண்டு அதனடிப்படையில் அரசியல் யாப்பு மாற்றங்கள் இடம்பெற வேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் இதனை மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இலங்கைக்கான அமெரிக்காவின் பிரதித் தூதுவர் றொபேர்ட் ஹில்ரன் தலைமையிலான குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பாரத கொலை; தீர்ப்பு இன்று

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர கொலை வழக்கில் இன்று தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. விசேட ட்ரயல் அட் பார் முறைமூலம் பாரத லக்ஸ்மன் கொலை வழக்கு விசாரணைகள் நடைபெற்றிருந்ததுடன் கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதியுடன் அனைத்து விசாரணைகளும் முடிவுக்கு வந்திருந்தன.

கடந்த ஜூலை மாதம் இறுதியாக வழக்கு விசாரணை நடைபெற்ற போது ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் பாரத லக்ஸ்மன் கொலை தொடர்பான எழுத்து மூல ஆவணங்களை சமர்ப்பிக்க வேண

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் 24ஆம் திகதி மாபெரும் பேரணி

பொது அமைப்புக்கள் பலவும் போராதரவ

## பிரபாகரனுடன் மோதிய 45 நிமிட இறுதிச் சமர்



### விபரிக்கிறார் இராணுவ மேஜர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க குழுவிடம் முதலமைச்சர் எடுத்துரைப்பு



தனித்துவமான ஓர் இனம் தனக்கான சுயநிர்ணய உரிமையை கோருவதற்கு உரித்துடையது. அந்த வகையில் மக்களது மனோநிலையை அவர்களது சரித்திர பின்னணியை புரிந்து கொண்டு அதனடிப்படையில் அரசியல் யாப்பு மாற்றங்கள் இடம்பெற வேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் இதனை மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இலங்கைக்கான அமெரிக்காவின் பிரதித் தூதுவர் றொபேர்ட் ஹில்ரன் தலைமையிலான குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. விசேட ட்ரயல் அட் பார் முறைமூலம் பாரத லக்ஸ்மன் கொலை வழக்கு விசாரணைகள் நடைபெற்றிருந்ததுடன் கடந்த ஜுலை மாதம் 14 ஆம் திகதியுடன் அனைத்து விசாரணைகளும் முடிவுக்கு வந்திருந்தன.

கடந்த ஜுலை மாதம் இறுதியாக வழக்கு விசாரணை நடைபெற்ற போது ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் பாரத லக்ஸ்மன் கொலை தொடர்பான எழுத்து மூல ஆவணங்களை சமர்ப்பிக்க வேண

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் 24ஆம் திகதி மாபெரும் பேரணி

### பொது அமைப்புக்கள் பலவும் பேராதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாபெரும் பேரணி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு நடத்தப்படும் பௌத்த சிங்களக் குடியேற்றம், தமிழ் மக்களின் மீள்குடியமர்வுக்கு செய்யப்படும் தடை, தமிழ் அரசியல் கைதிகளை இது வரை விடுதலை செய்யாமை, காணாமல்போனவர்கள் விடயத்தில் காட்டப்படும் அசமந்தப் போக்கு, இனப்பிரச்சினை

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாகரனுடன் மோதிய 45 நிமிட இறுதிச் சமர்



### விபரிக்கிறார் இராணுவ மேஜர்

(கொழும்பு)

போரின் இறுதிக்கட்டத்தில் நடந்த 45 நிமிடச் சண்டையிலேயே, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டார் என்றும், அதற்கு முதல் நாள் நடந்த சண்டையில், புலிகளின் புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டம்மானும் கொல்லப்பட்டார் என்றும், மேஜர் ஜெனரல் கமால குணரத்ன தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## மோ.சைக்கிள் விபத்து;

### குடும்பஸ்தர் பலி; இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று பி.ப 1.30 மணியளவில் கே.கே.எஸ் வீதி சுன்னாகம் சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## இணைந்த நேர அட்டவணை இறுதி நேரத்தில் ஒத்திவைப்பு

### ஒத்துழையாதோர் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

இன்னும் சில தினங்களில் அமுல்படுத்தப்படவுள்ள இணைந்த நேர அட்டவணைக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் அறிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் போக்குவரத்து சபைகளுக்கிடையிலான இணைந்தநேர அட்டவணை நேற்றைய தினம் தொடக்கம் அமுல்படுத்தப்ப

24ஆம் பக்கம் பார்க்க....

## தாஜுதீன் கொலை

### அனுரவுக்கு தொடர் விளக்கமறியல்

(கொழும்பு)

முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ மா அதிபர் அனுர சேனாநாயக்க மற்றும் நாரஹேன்பிட்ட குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோரின் விளக்கமறியல் எதிர்வரும் 21ஆம் திகதி வரை

24ஆம் பக்கம் பார்க்க....




## மாணவர்களின் உரிமைகளை அரசாங்கம் முடக்குகிறது!

### ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம்பல்கலைக்கழக மாணவர்களின் உரிமைகளை முடக்கி வருவதாக மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று நாடாளுமன்றம் கூடிய போது கருத்து தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அனுரகுமார திசாநாயக்க அரசாங்கம் பலகலைக் கழக மாணவர்களின் போராட்டங்களை முடக்கி வருவதாக குற்றம்

24ஆம் பக்கம் பார்க்க....

## முப்படைகள், பொலிஸ் துறைகளில் தமிழர்களுக்கு கூடுதலான நியமனம்

### பிரதமர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கை முப்படைகள் மற்றும் பொலிஸ் துறைகளில் தமிழர்களை கூடுதலாக இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.



24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையானின் விளக்கமறியல் 21ஆம் திகதி வரை நீடிப்பு



(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும், மாகாண சபை உறுப்பினருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இவர் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வழக்கு கடந்த மாதம் 24ஆம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பிள்ளையானை நேற்று 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி எம்.கணேசராஜா உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்நிலையில், இவ்வழக்கு நேற்று புதன் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிள்ளையானை இம்மாதம் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையில், பிள்ளையான் பிணை கோரி தாக்கல் செய்திருந்த மனு கடந்த 2 ஆம் திகதி நிராகரிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

கடந்த 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம திகதி மட்டக்களப்பு மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் ஈடுபட்டிருந்த ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# தேசிய அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வெட்டுகுளம் ஒழுங்கை அரியாலை யாழ்ப்பாணம் என்னும் முகவரியை கொண்ட அமிர்தலிங்கம் ஜெனீதா என்பரது தேசிய அடையாள அட்டை (746581181V) கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள முடியும். (செ-11)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

# பகிரங்க ஏல அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை - மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட காக்கைதீவு பொதுச் சந்தைக்கான வாகன தரிப்பிடம் 2016.09.15 ஆம் திகதி பி.ப 03.00 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. மேற்படி ஏலம் கோரலில் பங்கு பற்ற விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத தொகையாக ரூபா 102.00 இனையும் (NBT 2% உள்ளடங்கலாக) மீளளிப்புத் தொகையாக ரூபா 5000.00 இனையும் மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் பி.ப 03.00 மணிக்கு முன்னர் வைப்புச் செய்து ஏலத்தில் பங்கு கொள்ளலாம். குத்தகைக்காலம் 2016.09.15 - 2016.12.31 வரையான மூன்றரை மாத காலம் ஆகும். குத்தகை பெறுபவர் குத்தகைத் தொகையினை ஒரே தடவையில் முழுமையாக செலுத்துதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 021 300 3552 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**திரு.கு. சற்குணராசா, செயலாளர்**
07.09.2016 **வலிதென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**
(சி-5691)

# நீங்காத நினைவலையில்
# 6ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18.06.1929 — விண்ணில் 08.09.2010



(ஓய்வுநிலை ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி J.S. இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவி)

அமரர் திருமதி. **சிசிலியா குணமணி இராசரத்தினம்**

(ஓய்வுநிலை பிரதி அதிபர் J/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)


அன்பின் உறைவிடமான அம்மா
உங்கள் உள்ளக்கிடக்கை எம்மை
ஆண்டவன் யேசு பிரானை விசுவாசிக்க
ஜெபிக்க வழி வகுத்தது. நீங்கள்
குடும்பத்தின் குல விளக்காய்
எம்மை வழி நடத்தி இறைபதம்
அடைந்து 6 வருடங்கள்
ஓடினாலும் உம் உருவம் அழிந்தாலும்
உம் நினைவுகள் எம் இருதயத்தில்
என்றும் நிலைக்கும்.

குடும்பத்தினர்

பெதனி
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

(சி-5689)


# 7-ம் ஆண்டு நினைவலைகள்



தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோயில்
நெல்லண்டை வீரமாகாளி அம்மன்,
வடபத்திரகாளி அம்மன் கோவில், தும்பளை பருத்தித்துறை.

## சண்முகநாதன் சந்துதன்

திரு.திருமதி சண்முகநாதன் அருள்நங்கை
அவர்களின் செல்வத்திருமகன் தெய்வமணம் கமழும்
சந்துதன் அவர்கள்



உலகறிய உவப்பான சந்துதனே நிதம் நிதம் நினைப்பான
உன் முகம். சலிக்காத தவமான தவமச்சே உன்னைத் தந்த
பெற்றோர்கள் உறவுகள் அனைத்தையும்
ஒரு நொடியில் துறந்தாயே!
அன்னை தந்தை நித்தமும் கலங்காத நெஞ்சை
உயிரோடு கலங்க வைத்துச் சென்றாயே...!

இங்ஙனம்
**சோமையா மாமா குடும்பத்தினர்,**
**சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் – புவனேஸ்வரியம்மா**
(ஆதீனகர்த்தா தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில்),

**சிவஸ்ரீ இராமசுந்தரலிங்கக் குருக்கள் பிரபாலினி குடும்பம்**
(பிரதம குரு நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்),

**சிவஸ்ரீ திருஞான. திருஞானசம்பந்தக் குருக்கள் ஜீவிதா குடும்பம்**
(பிரதம குரு முல்லைத்தீவு குமுழமுனை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்.),

**சிவஸ்ரீ சண்முக பிரசன்னன் குருக்கள் சங்கீர்த்தனி குடும்பம்**
(பிரதம குரு திருக்கோணேஸ்வரர் சிவன் தேவஸ்தானம், திருகோணமலை.)

(சி-5692)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லசந்த விக்ரமதுங்கவின் மரணச் சான்றிதழில் முரண்பட்ட தகவல்



(கொழும்பு)

**சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு ஏழு வருடங்கள் கடந்துள்ள போதிலும் கொலையாளிகளுக்கு இன்னும் தண்டனை கிடைக்க வில்லை.கொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் தற்போது வரையில் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் லசந்தவின் கொலை தொடர்பாக வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை முரண்பட்ட வகையில் வழங்கப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது.**

பிரேத பரிசோதனை முடிவுரை பிழையானதொன்றென சாட்சியுடன் உறுதி செய்யப்பட்டுள்ளது.

லசந்த விக்ரமதுங்கவின் பிரேத பரிசோதனையின் முடிவுரையில் அவர் துப்பாக்கி பிரயோகத்தினால் (Gun shot injuries) உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின போது கூர்மையான ஆயுதம் ஒன்றில் தாக்கப்பட்டு அவர் உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

துப்பாக்கி பிரயோகம் மற்றும் கூர்மையான ஆயுதத்தில் தாக்கியமையினால் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என விக்ரமதுங்கவின் பிரேத பரிசோதனையை மேற்கொண்ட கொழும்பு தெற்கு நீதிமன்ற வைத்திய அதிகாரி சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உள்ள கருத்து வேறுபாடுகளை தீர்ப்பதற்காக விசாரணை குழு, லசந்த விக்ரமதுங்கவின் உடலை தோண்டி எடுத்து பரிசோதனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி இரத்மலானை உயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தப் படுகொலை முன்னைய ஆட்சியாளர்களின் தூண்டுதலின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# மலேசியாவில் இடம்பெற்ற சம்பவம் இலங்கையிலும் நடைபெறக்கூடும் நாமல் எம்.பி.கூறுகிறார்

(கொழும்பு)

மலேசியாவில் புலம்பெயர தமிழர்களால் கடந்த வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்கள் இலங்கையிலும் ஏற்படலாம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனவே மலேசியாவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அரசு அதிக அவதானம் செலுத்துவது சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

மலேசியாவில் மகிந்தவிற்கு எதிராக தாக்குதல் இடம்பெற்றது. அவருக்கு பலத்த எதிர்ப்புக்கள் காணப்பட்டது என்று தினமும் கூறி சந்தோசமடையும் விடயம் அல்ல இது எனக் குறிப்பிட்டுள்ள அவர்.

இந்த சம்பவத்தின் பின்னர் நாம் மேலும் எமது தேசிய பாதுகாப்பை பற்றி சிந்திக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவளி விடுதலைப்புலி ஆதரவாளர்கள் மலேசியாவில் இந்தத் தாக்குதலை மேற்கொள்ள முடியுமெனில், இலங்கையில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுவதற்கு அதிக காலம் செல்லப் போவதில்லை.

ஏனெனில் 32 கிலோ மீற்றர் தூரத்திலேயே இந்தியாவிலிருந்து இலங்கை அமைந்துள்ளதாகவும் அவர்கள் இங்கு வருவதற்கு சில மணி நேரங்களே போதும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7-10)

## நாட்டில் தண்ணீர் பஞ்சம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வெப்பத்துடனான காலநிலை மாற்றங்களினால் நாட்டின் பல பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவிவருவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

குறிப்பாக, தென் மாகாணத்திலேயே இந்த நிலைமை அதிகம் காணப்படுவதாகவும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொதுமுகாமையாளர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பெப்ரவரி மாதம் இடம்பெறும்

## உள்ளூராட்சி அமைச்சர் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெறும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இந்த மாதம் 15ஆம் திகதியுடன் எல்லைநிர்ணயங்கள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதாகவும், இதைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2017 இல் நடைபெறும் என்று இறுதியான முடிவை அறிவித்தார்.

தேர்தல் அணையாளர் மகிந்த தேசப்பிரிய நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் சந்திப்பை நடத்தி தேர்தல் பற்றிய பல விடயங்களைக் கூறினார்.

இதில், தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு 65 நாட்கள் வேண்டும், புதிய தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான இறுதி முடிவு எதிர்வரும் 15ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் கூறியிருந்தார்.

இதற்கமைவாக உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் எதிர்வரும் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடத்த இருப்பதை தேர்தல் அணையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## இலங்கையில் 20 வகையான ஆக்கிரமிப்புத் தாவரங்கள்

(கொழும்பு)

இலங்கையில் 20 வகையான ஆக்கிரமிப்புத் தாவரங்கள் காணப்படுவதாக சூழலியலாளர்கள் அமைப்பொன்று பட்டியலிட்டுள்ளது.

பார்த்தீனியம், சீமைக் கருவேல மரம், சல்வீனியா பூண்டு, ஆகாயத்தாமரை உள்ளிட்ட 20 வகையான தாவரங்களே இவ்வாறு ஆக்கிரமிப்புத் தாவரங்களாக பெயரிடப்பட்டுள்ளன.

குறித்த தாவரங்களின் மூலம் இலங்கையின் வனப் பிரதேசங்கள் மாத்திரமன்றி நீர்நிலைகளும் அழிவுக்கு உள்ளாகி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான ஆக்கிரமிப்புத் தாவரங்களின் பரம்பல் காரணமாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒரு பசுமை போர்வை நிலை தோன்றியுள்ளபோதிலும், பயன்தரு மரங்களின் வளர்ச்சி தடுக்கப்பட்டு நிலம் மலட்டுத்தன்மைக்கு மாறி வருகின்றது.

மேற்குறித்த 20 தாவரங்களுக்கு மேலதிகமாக 17 வகையான தாவரங்கள் எதிர்காலத்தில் சிக்கல்களை ஏற்படுத்துவனவாக அமையலாம் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-7-10)

## இலங்கையில் வங்கப்புலிகள்

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலைக்கு இரண்டு வங்கப்புலிக்குட்டிகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கப்புலி இனம் வேகமாக அழிவடைந்து வரும் ஓர் இனம் என்பதுடன், இது பாலூட்டி இனத்தைச் சேர்ந்த பழங்குடி விலங்கு வகையை சேர்ந்ததுவும்.

இந்தப் புலிக்குட்டிகளின் நிறை 109 தொடக்கம் 227 கிலோ கிராம் என தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் கடமை நேர பணிப்பாளர் ஜெனரல் தம்மிகா மல்சிங்க தெரிவித்துள்ளார்.

காடுகளில் வசிக்கும் போது இவைகளின் ஆயுட்காலம் 15 வருடங்கள் என்பதுடன் மிருகக்காட்சிசாலைகளில் வசிக்கும் போது இவற்றின் ஆயுள் காலம் 18 வருடங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மிருகங்களை பரிமாறிக் கொள்ளும் வேலைத்திட்டத்தின் கீழ் சீனாவின் சியங்பியங் மிருகக் காட்சிசாலையில் இருந்து குறித்த வங்கப்புலி ஜோடிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# 'நந்திக்கடலுக்கான பாதை'யை வெளியிட்டு வைத்தார் மகிந்த







இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன எழுதிய 'நந்திக்கடலுக்கான பாதை' நூல் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஆனந்தா கல்லூரில் நடந்த இந்த வெளியீட்டு விழாவில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நூலின் முதல் பிரதியை, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன கையளித்தார்.

இந்த நிகழ்வில், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், கலாநிதி றொகான் குணரத்ன, கலாநிதி தயான் ஜெயதிலக உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் அனுபவங்களை மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, தனது 800 பக்க நூலில் விரிவாக விபரித்துள்ளார்.

இவர் இறுதிக்கட்டப் போரில், 53ஆவது பிரிவின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## கிராமத்தை காணவில்லை

(கொழும்பு)

புதிய எல்லை நிர்ணயத்தின் அடிப்படையில் கண்டியில் கிராமசேவை பிரிவு ஒன்றைக் காணவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு ஆணையாளர் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கிராமசேவை பிரிவு ஒன்று காணாமல் போனமை குறித்து விசாரணை நடத்தப்படும் என மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. பின்னர் அசோக பீரிஸ் தலைமையில் நடத்தப்பட்ட எல்லை நிர்ணய நடவடிக்கைகளின் போது கிராமசேவை பிரிவு காணாமல் போயுள்ளது.

தேர்தல் நடத்தப்படாமையுடன் எனக்கு எவ்வித தொடர்பும் கிடையாது.

கிராமசேவை பிரிவு ஒன்று காணாமல் போன விடயம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேலணை வடக்கு இலந்தைவனம் விநாயகனுக்கு இன்று மகா கும்பாபிஷேகம்



வேலணை இலந்தைவனம் சித்தி விநாயகர் ஆலயம் இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுச் சிறப்பு டையது.

ஆரம்ப கால அறங்காவலரான திரு. சிதம்பரநாத முதலியார் காலத்தில் சிறு குடிலாக இருந்து படிப்படியாக வளர்ச்சி கண்டு அமரர் கா.த. வேலாயுதபிள்ளை அறங்காவ லராக இருந்த காலத்தில் மிகப் பிரமாண்ட மான ஆலயமாக விளங்கியது.

ஆயினும் இராஜகோபுரம் இல்லாத குறை யொன்று இவ் ஆலயத்திற்கு இருந்து வந்தது. அக்குறையும் அறங்காவலர் திரு.பா. மதியழகன் காலத்தில் தீர்ந்து 08.09.2016 இன்று இடம்பெறுகின்ற கும்பாபிஷேகம் இராஜகோபுரத்துடனான பூரண கும்பாபி ஷேகம் என்பதில் பூரிப்படைகின்றோம்.

ஒரு மனிதனின் உடலமைப்பை ஒத்ததாக ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. அந்நி லையில் மனிதனது பாதங்களுக்கு ஒப்பான தாக கோபுரங்கள் விளங்குகின்றன.

இராஜகோபுரத்தின் வடிவம் ஒரு லிங்கத் தை போன்றிருப்பதால் இதனை ஸ்தூல லிங்கம் எனப் போற்றுவர். இராஜகோபுரத்தில் இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து அம்சங் களும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பர். இத்தகைய இராஜகோபுரத்துடன் கூடிய சித்தி விநாயகர் ஆலயமாக எம் ஆலயம் புதுப பொலிவு பெற்று இன்று கும்பாபி ஷேகம் காண்கின்றது.

உலகில் உள்ள ஜீவராசிகள் எல்லாம் உய்வடையும் பொருட்டு பார்க்கும் இடமெ ல்லாம் நீக்கமற நிறைந்துள்ள இறைவனைப் ஆலயத்தில் எழுந்தருளச் செய்து திருக்குட முழுக்காட்டி வழிபடுவதே கும்பாபிஷேக மாகும்.

இறைவன் பஞ்சபூதங்கள் முதலாய எட்டு இடங்களில் வியாபிக்கின்றார் எனப்படுகின்றது. அவையாவன நிலம்,நீர்,தீ,காற்று,ஆகாயம், சூரியன்,சந்திரன்,ஆன்மா இந்த எட்டு நிலை களில் செய்யப்படுவதுதான் கும்பாபிஷேகம். இது குடமுழுக்கு அல்லது பெருஞ்சாந்தி என்றும் சொல்லப்படும்.

மண் வடிவமாக குடம், நீர் வடிவமாக தீர்த்தம், தீ வடிவமாக ஓமம், காற்று வடிவமாக வேத உச்சரிப்பு, ஆகாய வடிவமாக ஒலி, சூரியன் வடிவமாக ஒளி, சந்திரன் வடிவமாக மனோலயம், ஆன்மா வடிவமாக உயிர்களின் ஒட்டு மொத்த கூட்டு வழிபாடு.

இந்த எட்டையும் ஓர் இடத்தில் நிலை நிறுத்துவதே கும்பாபிஷேகம் எனபடும். இக் கும்பாபிஷேகம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படும். இதைக்கண்டு களிப்பது 12 ஆண்டுகள் தினந்தோறும் ஆலயம் சென்று வழிபடுவதற்கு சமமாகும் என்று ஆன்றோர் கூறுவர்.

கும்பாபிஷேகம் காண்பது கோடி புண்ணிய மாகும் என்பர். எமக்கு இன்று இராஜகோபுரத் துடனான கும்பாபிஷேகம் காணக்கிடைத்தமை கோடான கோடி புண்ணியம் எனலாம்.

ஓம் எனும் பிரணவ மந்திர சொரூபியாக விளங்குபவர் விநாயகர். அவரது ஆனை முகத்தோற்றம் அப்பிரணவாட்சரத்தின் வடிவமாக அடைந்தது. தம்மை வழிபட் டோரது இன்னல்களைப்போக்கி அவர்களு க்கு எல்லாம் அருள் புரிபவர் விநாயகப் பெருமான். அவர்தம் திருவடிகள் சரண டைந்தோரை காக்கும் திருவடிகள்.

எனவேதான் ஔவைப்பிராட்டியார் "சீதக் களபச் செந்தாமரைப் பூம்பாதம்" என சிறப் பித்து வினைகழல் சரணே என்றார். நாமும் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் அந்த விநாயகனை சரணடைந்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்வோமாக.

அன்னை, பிதா இருவருமே உலகமெ ன்றவன, அவர்களையே சுற்றிவந்து கனி யைப் பெற்றவன், வண்ணமயில் வாகன ர்க்கு வள் ளிக் குறத்தியை வனத்திடையே வந்தருளி வதுவை செய்வித்தவன். மாங்கை சத்தி புத்தியரை மருவி அணைத்தவன். மங்கலம் சேர் வேலணைப் பதியிலுறை பவன் .

அன்னவனை எந்நாளும் ஏற்றி போற்று வோம். பண்ணவனே என துதித்து பாடி ஆடு வோம்.

**கோ.பரமானந்தன்**
வேலணை

# சாவகச்சேரி தற்கொலை அங்கி கைதான இருவர் நேற்று விடுவிப்பு

சாவகச்சேரியில் தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவத்தை அடுத்து கைதுசெய்ய ப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐவரில் இருவர் நேறறைய தினம் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்ற நீதிபதி அருண ஆட்டிக்கல முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போதே இருவரையும் விடுதலை செய்யு மாறு நீதிபதி உத்தரவிட்டிருக்கின்றார்.

பயங்கரவாத தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 21 பேரின வழக்குகள் நேற்றைய தினம் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இவர்களில் சாவகச்சேரி பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐவர் உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிரான வழக்கு விசாரணையும் நேற்று இடம்பெற்றிருந்தது.

குறித்த வழக்கு விசாரணையில் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்ட நீதிபதி, ஏனைய நால்வரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவு பிறப்பித்தார். (செ-9)

# பதவியைத் துறப்பேன் ரம்புக்வெல சவால்

ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனுடன், போர்க்குற்ற விசாரணை தொடர்பில் இணக் கப்பாடு காணப்பட்டதை உறுதிப்படுத்தினால் தாம் பதவி துறக்கத் தயார் என நாடாளு மன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்வெல சவால் விடுத்துள்ளார். பாராளுமன்றத்தின் குழு அறை 4 இல் இடம்பெற்ற ஊடகவி யலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அவர்,

ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணை ந்து வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில போர்க்குற்ற விசாரணை தொடர்பில் இணக் கப்பாடு தெரிவித்திருந்ததை இந்த நல்லாட்சி அரசாங்கம் உறுதிப்படுத்தினால் அடுத்த நிமிடம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறப்பேன் என்று குறிப்பிட்டார். (செ-11)

# பேடன் பவல் உருவச்சிலை திறப்பு

யாழ் மாவட்டத்தில் முதலாவதாக ஆரம் பிக்கப்பட்ட யாழ். மத்திய கல்லூரியின் முத லாவது சாரணர் குழுவின் நூற்றாண்டு விழா வை முன்னிட்டு உலக சாரணிய தந்தை பேடன் பவலின் உருவச்சிலை இலங்கை சார ணிய அமைப்பின் பிரதம ஆணையாளர் நிமால் டி சில்வாவினால் நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியில் திறந்து வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, யாழ். மத்திய



கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் பழைய மாணவர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (செ-9)

# டெஸ்ட் அணியில் இடம்பிடிப்பேன் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெயில்

உலகின் சிறந்த அதிரடி துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல். மேற்கிந்தியாவைச் சேர்ந்த இவர் 20 ஓவர் போட்டியில் பந்துவீச்சாளர் களை கலங்கடித்து வருகிறார்.

36 வயதான கிறிஸ் கெய்ல் 20 ஓவர் போட்டியில் மட்டுமே விளையாடி வருகிறார். 2014-ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்துக்கு பிறகு டெஸ்டிலும் 2015-ம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு பிறகு ஒருநாள் போட்டியிலும் அவர் விளையாடவில்லை.

சென்னை வந்த அவர் செய்தியாளர் களிடம் பேசிய போது, டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடி ஓட்டங்களை குவிக்கும் வீரர் 20 ஓவர் போட்டிக்கு ஏற்ற வகையில் இருப்பார். சரியான முறையில் ஷொட்களை தேர்வு செய்வார்.

உதாரணத்துக்கு ஜெயவர்த்தன சிறந்த டெஸ்ட் வீரர். 20 ஓவர் போட்டியிலும் அவர் அபாரமாக ஆடியவர். மனநிலையில்தான் வேறுபாடு இருக்கிறது. விளையாட்டில் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண் டும்.

என்னால் மீண்டும் டெஸ்டில் விளையாட முடியும். டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இடம்பெறுவேன் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

இந்திய அணியின் ராகுலின் துடுப்பாட்ட



ஸ்டைல் நேர்த்தியாக இருக்கிறது. டெஸ்ட், ஒருநாள் போட்டி, 20 ஓவர் ஆகிய 3 நிலை களிலும் அவர் வெற்றிகரமாக துடுப்பாட்டம் செய்கிறார். அவர் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரராக ஜொலிக்கிறார். தனது ஆட்டத்திறனை அவர் ஏற்கெனவே நிரூபித்துவிட்டார். (க)

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் ஜோகோவிச்

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் முதல் நிலை வீரரும், நடப்பு சம்பியனுமான ஜோகோவிச் (செர்பியா) கால் இறுதியில் பிரான்சைச் சேர்ந்த 9-ம் நிலை வீரர் சோங்காவை சந்தித்தார்.

இதன்முதல்செட்டை 6-3 என்றகணக்கிலும், 2-வது செட்டை 6-2 என்ற கணக்கிலும் ஜோகோவிச் எளிதில் வென்றார்.

3-வது செட் ஆட்டத்தில் சோங்கா போட்டி யில் இருந்து காயத்தால் விலகினார். இதனால ஜோகோவிச் வெற்றி பெற்று தொடர்ந்து 10-வது முறையாக அரை இறுதிக்கு தகுதி பெற்றார்.

அவருக்கு எதிராக இந்த போட்டித் தொடரில் விலகும் 3-வது வீரர் சோங்கா ஆவார். ஜோகோவிச் அரை இறுதியில் மான்பில்சை சந்திக்கிறார்.

10-ம் நிலை வீரர் மான்பில்ஸ் (பிரான்ஸ்) கால் இறுதியில் சக நாட்டைச் சேர்ந்த லுகாஸ் பவுலியை எதிர்கொண்டார்.

இதில் மான்பில்ஸ் 6-4, 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று அரை இறுதிக்கு முன்னேறினார். அவர் 8 ஆண் டுக்கு பிறகு கிராண்ட்சிலாம் அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். கடைசியாக 2008-ம் ஆண்டு பிரெஞ்சு ஓபனில் முன்னேறி இருந தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணைத் தாக்க இதுதான் காரணம்

குருநாகல் பகுதியில் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் பெண் ஒருவர் மீது இளைஞர்கள் சிலர் கொடூரமாக தாக்குதல் மேற்கொண்டுள்ள காணொலி ஒன்று சமூக வலைத்தளங்களில் தீயாக பரவி வருகின்றது.

குறித்த பெண் மாத்திரமின்றி அவருடன் இருந்த மற்றுமொரு நபரும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண் மீது எதற்காக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்ற காரணம் தற்போது வெளியாகியுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான பெண் தனது காதலனுடன் குருநாகல் பகுதியில் வீதியில் நடந்து சென்றுள்ளார்.

இதன்போது வீதியில் இருந்த யாசகர் ஒருவர் தனக்கு பண உதவி செய்யுமாறு குறித்த பெண்ணிடம் கேட்டுள்ளார். இதன்போது குறித்த பெண் யாசகம் கேட்ட நபர் மீது எச்சில் துப்பி தரக்குறைவாக பேசியுள்ளார்.

இதனை அவதானித்த சில இளைஞர்களே இவ்வாறு யுவதியின் மீதும் அவருடைய காதலன் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இருப்பினும் நடு வீதியில் பெண்ணொருவர் மீது மூர்க்கத்தனமான தாக்குதல் மேற்கொண்டமைக்கு சமூக வலைத்தளங்களில் கடும் எதிர்ப்புகள் வெளிவந்தவாறு உள்ளன. (இ-7-10)

# கொழும்பு மாவட்டத்திற்கு புதிய அமைப்பாளர்



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராக பீ.எச்.ரசிக மஞ்சுல புத்ததாஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோக பூர்வ இல்லத்தில் வைத்து நேற்று நியமனக் கடிதத்தை பெற்றுக் கொண்டார் என ஜனாதிபதியின் ஊடகம் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கடுவளை மாநகர சபையின் முன்னாள் மேயர் ஜி.எச். புத்ததாஸவின் மகனே பீ.எச். ரசிக மஞ்சுல புத்ததாஸ என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## ஜோதிடத் தகவல்

**திருமணம் சொர்க்கமாகும் நிலை**

ஒருவரின் ஜாதகத்தில் 7,8 ஆம் இடங்கள் பலமற்று இருந்தாலும் கூட 9 ஆம் இடம் அதன் அதிபதி பலமாக இருந்தால் அவர்கள் வாழ்க்கையில் வசந்தம் மட்டுமே வீசும்.


Proud to be a Centralite

# மத்தியத் தாயின் அகவை 200 நிறைவு நாள் நிகழ்வினை சிறப்பிக்க மத்தியின் மைந்தர்கள் நாம் ஒன்று கூடுவோம்

- காலம்:-09.09.2016 (வெள்ளிக்கிழமை)
- இடம்:- கல்லூரி மைதானம்
- நேரம்:- 11 மணி

## காலை நிகழ்வுகள்

தலைமை
எஸ்.கே.எழில்வேந்தன் (கல்லூரி முதல்வர்)
பிரதம விருந்தினர்
அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன
தபால் தலை வெளியிடல்

## மாலை நிகழ்வுகள்-பொன்.விபுலானந்தன் அரங்கு-பழைய மாணவர் நிகழ்வுகள்

நேரம்:- மாலை 05 மணி
தலைமை
திரு.N.தமிழழகன் (தலைவர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்)

- ✦ நாடகம்:- பழைய மாணவன் திரு. தே.தேவானந்தின் நெறியாள்கையில்
- ✦ சிறப்பு பட்டிமன்றம்:- பழைய மாணவன் திரு.நா.விஜயசுந்தரம் தலைமையில்
- ✦ கவி அரங்கு:- முன்னாள் ஆசிரியர் திரு.சரா.புவனேஸ்வரன் தலைமையில்
- ✦ வானவேடிக்கை
- ✦ இசை நிகழ்வு:- பழைய மாணவர்களின் பங்குபற்றலுடன்

**நிகழ்வின் நிறைவில் இராப்போசனத்தில் கலந்து சிறப்பிக்கவும்.**

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

ஊடக அனுசரணை

யாழ்ப்பாணப் பழைய மாணவர் சங்கம்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

எஸ். மயூரன் (பழைய மாணவர்)
மயூரன்ஸ் நகை மாளிகை
95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எஸ். வாகீசன் (பழைய மாணவர்)
விஷ்ணு ஜுவல்லறி
181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கே.பிரகாஸ் (பழைய மாணவர்)
மானேஸ் நகையகம்
A 220, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# இராசி பலன்

08.09.2016
(ஆவணி 23, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சப்தமி பின்னிரவு 1.59 மணிவரை
அனுசம் பின்னிரவு 3.10 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி | | |
| | | | சூரி ராகு புத |
| | சனி,செவ் சந் | | குரு சுக் |

**மேடம்:** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், உடல் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்,காரிய அனுகூலமுண்டு, தேகநலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், கௌரவமான நாள்.

**கடகம்:** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**சிம்மம்:** அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், வார்த்தைகளால் மற்றவர்களைக் கவர்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உடன்பிறப்புகள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** கடின வார்த்தைகளைத் தவிர்ப்பது நல்லது, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வழிபாடு மகத்துவம் தரும், கற்பனை மிகுதியான நாள், நண்பர்கள் சந்திப்புண்டு.

**தனுசு:** பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், திட்டங்களில் முன்னேற்றமுண்டு, உறவினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம்.

**கும்பம்:** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மீனம்:** உறவினர்களை உபசரிப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதார திடக்கழிவு நிலநிரப்புத் திட்டம் கீரிமலையில்



கீரிமலையில் சுண்ணாம்புக்கல் அகழ்வால் ஏற்பட்டிருக்கும் பாரிய குழியைக் கொண்ட பிரதேசத்தில் சுகாதாரமான திடக்கழிவு நிலநிரப்புத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.பொது நூலக வளாகத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் கேட போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் பிரதேசசபை செயலாளர்களுக்கும் விளக்கம் அளிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக் கலந்துரையாடலில் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிநிதிகள் விளக்கங்களை வழங்கியிருந்தனர்.

கலந்துரையாடலின் முடிவில் வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருந்தார்.

இதன்போது, யாழ்.குடாநாட்டில் அன்றாடம் மலை போல் குவியும் திண்மக் கழிவுகளின் பிரச்சினைகளுக்குக் கீரிமலையில் அமையவுள்ள நிலநிரப்புத்திட்டம் ஒரு தீர்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. பிரதேசசபைகளின் ஊடாகச் சேகரிக்கும் திண்மக் கழிவுகளில் இருந்து உக்கக்கூடிய கழிவுகளும், மீள்சுழற்சி செய்யக் கூடிய பிளாஸ்ரிக் கழிவுகளும் பிரித்தெடுக்கப்பட்ட பின்னர் எஞ்சிய திடக்கழிவுகளே கீரிமலைக் குழியில் நிரப்பப்பட உள்ளது. தினமும் 50 தொன் கழிவுகள் என்ற அடிப்படையில் 15 வருடங்களில் இந்நில நிரப்புத்திட்டம் முடிவுக்கு வரும்.

கழிவுகளினால் நிலத்தடிநீர் மாசடையாமல் இருப்பதற்காகக் கற்குழியின் அடிப்பகுதியில்செயற்கைத் தரைவிரிப்பு மற்றும் பென்ரோனைற்களியினால்மூன்று அடுக்குகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. இத்திட்டத்துக்கு கொரிய அரசாங்கம் 34 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், இலங்கை அரசாங்கம் 8 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்க உள்ளது. 2018ஆம் ஆண்டின் இறுதியில் இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாணசபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா, மாகாணசபை உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், அ. பரஞ்சோதி, க.சர்வேஸ்வரன், கி.அகிலதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்,மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் கே.எச். முத்துக்குட ஆராச்சி, திடக்கழிவகற்று வசதிகள் திட்டத்தின் இயக்குநர் சறோஜினி ஜெயசேகரா, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வடமாகாணப் பணிப்பாளர் எம். ஏ.சி. நஜீப், பிரதிப்பணிப்பாளர் விஜிதா சத்தியகுமார், வடக்கு விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் விஜயலட்சுமி கேதீஸ்வரன் ஆகியோருடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (இ-7-10)




## சந்நிதியான் ஆலயச் சூழலில் இன்று

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 4 மணி தொடக்கம் 6மணிவரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

இந்நிகழ்வில் இன்று 8 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யாவின் சத்சங், செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை நிகழ்வு என்பன இடம் பெறவுள்ளன. (இ-3)

## முன்பள்ளிச் சிறார்களின் கல்விநிலை!



மீள்குடியேறிய வள்லாய் வடக்கில் அமைக்கப்பட்ட மடு மாதா முன்பள்ளியில்அடிப்படை வசதிகளற்ற நிலையில் தளபாடவசதிகள் எதுவும் இல்லாத நிலையில் முன்பள்ளி மாணவர்கள் நிலத்தில் இருந்து கல்விகற்று வருகின்றார்கள். இதனை நேற்று முன்தினம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச நிர்வாகச் செயலாளர் இராமநாதன் ஐங்கரன் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார். (இ-134)

## நினைவுநாள் பேருரை

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவுநாளும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் பி.ப ஒரு மணிவரை சுன்னாகத்திலுள்ள வாழ்வக செல்லா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்,வடமாகாணக் கல்வி அமைச்சின் உள சமூகவள நிலைய நிபுணத்துவ ஆலோசகர் நினைவுப்பேருரையாளர் கலாபூஷணம் திருமதி கோகிலா மகேந்திரன்,சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ந.பகீரதன்,இலங்கை மின்சார சபை ஓய்வுநிலை மின் அத்தியட்சகர் சி.குமாரலிங்கம், மட்டக்களப்பு விவேகானந்த மகளிர் வித்தியாலய ஆசிரியரும் வாழ்வக பழைய மாணவனுமாகிய நா.இருதயராஜன்,யாழ்ப்பாணம் நியூ மைதிலி ஜுவலர்ஸ் உரிமையாளர் ந.கஜந்தன்,அகில இலங்கை சமாதான நீதவானும் செரண்டிப் சிறுவர் இல்லத் தலைவருமான அ.கந்தசாமி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

'தாங்கொணாத் துன்பம்' (நினைவுக் குறிப்பு)நூல் அறிமுகவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். பொதுநூலக தேநீர்ச்சாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அறிமுக உரையினை சி.ஞானசக்தி, ஆய்வுரையினை றெங்கன்தேவராஜன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். இ-3

## யோகாசன தியான வகுப்புக்களின் புதிய பிரிவுகள் 10ம் திகதி ஆரம்பம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் இலவச யோகாசன தியான வகுப்புக்களின் புதிய பிரிவுகள் நாளை மறுதினம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இவ்வகுப்புக்கள் ஆண்கள், பெண்களுக்கு தனித் தனியாக நடைபெறவுள்ளன.

வார இறுதி நாட்களில்நடைபெறவுள்ள இவ்வகுப்புக்கள் மூன்று மாதங்களைக் கொண்டதாகவும் இறுதியில் சான்றிதழும் வழங்கப்படும். எனவே இவ்வகுப்புக்களில் இணைந்து கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இந்து சமய கலாசார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சுதாகரன் அறிவித்துள்ளார். (இ-3)

## ஆண்டு நிறைவு விழா

(கரணவாய்)

கரவெட்டி மெதடிஸ்த திருச்சபையின் 45 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நன்றி செலுத்தும் ஸ்தோத்திர வழிபாடும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு திருச்சபை மண்டபத்தில் நடைபெறும்.

சிறப்பு அருளுரையினை புத்தூர் மெதடிஸ்த திருச்சபை குரு ஜெயரட்ணசிங்கம் நிகழ்த்துவார். மக்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)





கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழக அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு கொடுக்கிளாய் இயக்கச்சி இணைந்த பாலத்தினூடான வீதி திறப்பு விழா (கொடுக்கிளாய் அபாய வெளியேற்றப்பாதை ) கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. (படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு வடக்கிலிருந்துதான் 80 வீதமான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது

## உதய கம்மன்பில கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு வடக்கிலிருந்தே 80 வீதமான அச்சுறுத்தல் செயற்பாடுகள் வந்துள்ளன. எனவே வடக்கில் தொடர்ந்தும் இராணுவத்தினை நிலை கொள்ளச் செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

தூய்மையான ஹெல உறுமயவின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கை விஜயத்தின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் நடமாட்டத்தினை குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அதற்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மூன்று மாதங்களுக்குள் அந்த செயற்பாட்டினை விரைந்து முன்னெடுப்பதாக வாக்களித்துள்ளார்.

ஆனால் தெற்கில் இனவாதிகளினால் இராணுவத்தை அகற்றும் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படக்கூடும். அதனால் படிப்படியாக அந்தச் செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கைக்கு வடக்கு பகுதியிலிருந்தே 80 வீதமான எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன.

எனவே வடக்கில் இராணுவம் நிலைகொள்ள வேண்டியது மிக அவசியமானது. அத்துடன் வடக்கில் மக்கள் தொகையும் குறைவாக உள்ளதால் இராணுவ முகாம்கள் அமைக்க வடக்கே பொருத்தமான பகுதியாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# யாழ்.சர்வதேச திரைப்பட விழா செப். 23-27 வரை நடைபெறும்

குடாநாட்டில் சுயாதீன திரைப்படங்களைக் கொண்டாடுதல் எனும் தொனிப்பொருளில் யாழ். சர்வதேச திரைப்பட விழா எதிர்வரும் செப்டெம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை யாழில் நடைபெறவுள்ளதாக யாழ். சர்வதேச திரைப்பட விழாக்குழு தலைவர் பாக்கியநாதன் அகிலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். சர்வதேச திரைப்பட விழாவானது சினிமாவில் புத்தாக்கமான வெளிப்பாட்டின் சமகால வடிவங்களினைக் கண்டடைவதற்கான ஓர் பாகுபாடற்ற ஓர் அடித்தளமாக அமையும்.

எமது பிரதான நோக்கம் குடாநாட்டில் சுயாதீனமாக திரைப்படத்தினைக் கொண்டாடுகின்ற அதேவேளை, திரைப்படங்களினூடாக மற்றைய பண்பாடுகளினைப் பற்றிய புரிந்து கொள்ளலையும், ஒருங்கிசைவுத் தன்மையை மேம்படுத்தலாகும்.

இந்த விழாவானது இளந்தலைமுறையினரது அறிமுகத் திரைப்படங்களினையும், குறுந்திரைப்படங்களினையும் காட்சிப்படுத்துவதன் மூலம் இளந்தலைமுறையினரை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும் முனைகிறது.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை, சிலோன் தியேட்டர்ஸ் மற்றும் அஜன்டா 14 ஆகியன இணைந்து இந்த இரண்டாவது யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழா வானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விழாவின் இயக்குநராக அனோமா ராஜகருணா செயற்படவுள்ளார். யாழ். சர்வதேச திரைப்பட விழா சர்வதேச ரீதியாக பாராட்டப்பட்ட உலகில் எங்குமுள்ள தமிழ்த்திரைப்பட தயாரிப்பாளர்களினை, அவர்களது திரைப்படங்களினை யாழ்ப்பாணத்தில் காட்சிப்படுத்துவதற்கும் அழைக்கின்றது.

இந்த விழாவில் ஏறக்குறைய 25 நாடுகள் பங்குபற்றவுள்ளதோடு, விருதினை வென்ற மற்றும் விமர்சன பூர்வமாக பாராட்டப்பட்ட சுமார் 70 ஐரோப்பிய, ஆசியத் திரைப்படங்களினைக் காட்சிப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். சர்வதேச திரைப்பட விழாவின் விருதுகளாக மூத்தவர்களினைக் கௌரவித்தல் மற்றும் இளந்தலைமுறையினை ஊக்குவித்தல் என்ற வகையில் மூன்று விருதுகளினை தொடர்ச்சியாக இம்முறையும் வழங்கவுள்ளது.

அந்த வகையில் வாழ்நாள் சாதனை விருது, மிகச்சிறந்த அறிமுக திரைப்படத்துக்கான விருது, படத்துக்கான் திறனாய்வு விருது, மிகச்சிறந்த குறும்படத்துக்கான பார்வையாளர் விருது என்பன வழங்கப்படவுள்ளது.

இளந்தலை முறையினரின் சுயாதீனமான திரைப்படங்கள் உருவாக்கும் அனுபவங்களினைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை மற்றும் சர்வதேசத்தினை திரைப்பட ஆர்வலர்களை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து இவ் விழாவில் கலந்து கொள்ள முடியும்.

இவ் விழா தொடர்பான மேலதிக தகவல்களை www.jaffnaicf.lk என்ற இணையத் தளத்திலும் 94777879911 என்ற தொலைபேசி இலக்கத்துடனும், directorShjaffnaicf.lk, infoShjaffnaicf.lk என்ற மின்னஞ்சல் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மகிந்தவுடன் சம்பந்தன் பாராளுமன்றில் சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட எம்.பி.யுமான மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும்நேற்று முன்தினம்பாராளுமன்ற சபா மண்டபத்தில் அருகருகே அமர்ந்திருந்து உரையாடினர்.

மலேசியாவில் இலங்கை உயர்ஸ்தானிகர் தாக்கப்பட்டமை மற்றும் அங்கு மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக சென்ற மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக மலேசியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக மகிந்த அணி ஆதரவு எம்.பி.யான தினேஷ் குணவர்த்தன 23 இன் கீழ் 2 இல் விசேட கேள்வியொன்றை பிரதமரிடம் எழுப்பி உரையாற்றினார். அதன் பின்னர் ஆளுந்தரப்பிற்கும் எதிர்த்தரப்பிற்கும் இடையே ஏற்பட்ட கடும் வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில்முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிற்பகல் 2.20 மணியளவில் சபைக்குள் வந்து அமர்ந்தார்.

இதன்போது தினேஷ்குணவர்தன. எம்.பி. கடும் தொனியில் புலிகள் முன்னாள் ஜனாதிபதியை இலக்கு வைத்துள்ளனர்.

எனவே.அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டுமென சபையில் வாதிட்டுக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் சபா மண்டபத்தில் முன்வரிசையில் அருகருகே கதிரைகளில் அமர்ந்திருந்த மகிந்த ராஜபக்ஷவுக்கும் சம்பந்தனுக்கும் இடையே உரையாடல் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. மகிந்த ராஜபக்ஷ தனது கைகளை அசைத்தவண்ணம் எதிர்க்கட்சித் தலைவரிடம் எதனையோ விளக்குவதை காணமுடிந்தது.

தினேஷ் குணவர்தன எம்.பி.யின் கேள்விக்கு பிரதமர் பதிலளிப்பதற்கு முன்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சபையில் எதனையாவது கூற விரும்பினால் கூறலாம். அதன் பின்னர் நான் பதிலளிக்கிறேன் என்றார். இதற்கு கைகளை விரித்து எதுவுமே கூறுவதற்கில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை நிகழ்த்துவதை நிராகரித்தார்.(இ-7-10)


உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்

வண. கலாநிதி சு.ஜெபநேசன்

இலக்கியத்துறையில் அதிஉயர் விருதான சாகித்திய ரத்னா விருதை இன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் தென்னிந்திய திருச்சபை முன்னாள் ஆயரும் தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் தலைவருமான

வண. கலாநிதி சு.ஜெபநேசன்

அவர்களை

உளமார வாழ்த்தி பாராட்டுவதுடன் கல்வித் துறைக்கும் இலக்கியத் துறைக்கும் அன்னார் ஆற்றிவரும் அளப்பரிய பணி மேலும் சிறந்து ஓங்க ஆசிக்கின்றோம்.



தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு. (5846)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பாகம்:16<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:NCT/ தனியார் தொழில்<br>தொ.இ: B/6156 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 44 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/6183 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 13<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில் எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6159 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 17<br>உயரம்: 159cm<br>தகைமை/தொழில்:BCA<br>தொ.இ: G/6189 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம் திருவோணம்<br>கி.பா: 18<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L பிரான்ஸ் PR<br>தொ.இ: B/6160 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 6 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/6192 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 44 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Nursing/ அரசதொழில்<br>தொ.இ: B/6161 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 32 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:GAQ/ஆசிரியர்<br>தொ.இ: G/6195 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005,021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊற்றுப்புலம் கிராமத்தின் குறைபாடுகள் முன்னுரிமை அடிப்படையில் தீர்க்கப்படும்

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் காணப்படும் பல்வேறு குறைபாடுகள் தீர்க்கப்படவேண்டியுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி செயலர் பிரிவின் கீழ் உள்ள ஊற்றுப்புலம் கிராமத்தில் தற்போது 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

குறித்த கிராமத்தின் பிரதான வீதி முதல் ஏனைய குடியிருப்பு வீதிகள் வரை புனரமைக்கப்படாமல் உள்ளது.

பொதுமக்களுக்கான மலசலகூட வசதிகள், போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுவதாகவும் இதனால் பின்தங்கிய பகுதியில் உள்ள தாங்கள் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக மாவட்ட அரச அதிபரிடம் கேட்டபோது, ஊற்றுப்புலம் கிராமம் மிகவும் பின் தங்கிய கிராமமாகக் காணப்படுகின்றது.

அண்மையில் மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்ற வீட்டுத் திட்டத்தில் கூடுதலான வீட்டுத்திட்டங்கள் இந்தக் கிராமத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

அதை விட முக்கியமாக போக்குவரத்து தடையாக இருந்த பாலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் கூடுதலான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கின்ற போது இவ்வாறான கிராமங்களை முதன்மைப்படுத்தி அதனை முன்னுரிமைப்படுத்தி வருகின்றோம்.

அடிப்படை வசதிகள் இல்லை என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் அங்கு குறைபாடுகள் இருக்கலாம் அதனை அடையாளம் கண்டு தேவைகளை நிறைவேற்ற முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# மோட்டார் சைக்கிள் - பேருந்து விபத்து; இளைஞன் மரணம்!

## அறிவியல் நகரில் சம்பவம்





(பரந்தன்)

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் மோட்டார் சைக்கிள் - பேருந்து நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியைச் சேர்ந்த பொன்னையா விஜயேந்திரன் (வயது - 26) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார் என கிளிநொச்சி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப இளைஞர் தான் வேலை செய்த இடத்தில் காயமடைந்த மற்றுமொரு நபரை ஏற்றிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு சென்றவேளையில் குறித்த பகுதியில் அமைந்துள்ள பல்கலைக்கழகம் ஒன்றுக்கு மாணவர்களை ஏற்றிப் பயணித்த பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞரே உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தகவலறிந்த கிளிநொச்சி பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சடலத்தை மீட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (2-15-312)




# மாற்றுத்திறனாளிகளின் நலன்கருதி கிளிநொச்சி செயலகத்தில் சக்கர நாற்காலி




கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல்வேறு தரப்பட்ட மக்களும் தமது சேவைகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு மாவட்ட செயலகத்தை நாடி வருகின்றனர்.

இந்நிலையில் மாவட்ட செயல கத்தின் தேவைகளைப்பெற்றுக்கொள்வதற்கு வருகைதரும் மாற்றுத்திறனாளிகளின் நன்மை கருதி மாவட்ட செயல்கத்தில் சக்கர நாற்காலி ஒன்று வைக்கப்பட்டுள்ளது என்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வருகைதரும் மாற்றுத்திறனாளிகள் இதனை பயன்படுத்திக் கொள்ள முடியும் என மாவட்ட செயலக நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2-15)

# வடக்கு மாகாண கைத்தொழில் கண்காட்சி வவு. நகரசபை மண்டபத்தில் 3 தினங்கள்

கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் வடக்கு மாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும்முகமாக வடக்குமாகாண தொழிற்றுறைத் திணைக்களமானது தேசிய அருங்கலைகள் பேரவையுடனும் மற்றும் புடவைக்கைத்தொழில்திணைக்களத்துடனும் இணைந்து வருடாவருடம் கண்காட்சியும் போட்டியும் நடத்தி வெற்றியாளர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வருகின்றன.

அதற்கமைவாக இவ்வாண்டும் மாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும் எமது திணைக்களத்தினால் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற ஆக்கங்கள் தேசிய மட்டப்போட்டிக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் மாகாண மட்டத்தில் பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.


இக்கண்காட்சியானது வவுனியா நகரசபை மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை, நாளை வெள்ளிக்கிழமை, நாளை மறுதினம் சனிக்கிழமை ஆகிய மூன்று தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.

இன்று ஆரம்பமாகவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி பி.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், முதலமைச்சரின் அமைச்சின் செயலாளர் திருமதி வி.கேதீஸ்வரன், வவுனியா மாவட்ட செயலர் எம்.பி.ஆர்.புஷ்பகுமார ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

பாரம்பரிய கைத்தறி நெசவுப்பொருட்கள், கைவினைப் பொருட்களின் உற்பத்தி செயன்முறைகூடங்களும் விற்பனைக் கூடங்களும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் கைப்பணியாளர்களின் கண்கவர் கைவண்ணங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பாலூட்டும் தாய்மாருக்கு அறை



(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல்வேறு தரப்பட்ட மக்களும் தமது சேவைகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு வருகை தருகின்றனர்.

இந்நிலையில் மாவட்ட செயலகத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தரும் பாலூட்டும் தாய்மாரின் நலன்கருதி தாய்மார்களுக்கான பாலூட்டும் அறையொன்றும் மற்றும் முதலுதவி அறையொன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக நிர்வாகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மகசீன் சிறைச்சாலைக்கு சென்று கைதிகளை பார்வையிட்டார் சாந்தி எம்.பி.



(பனிக்கன்குளம்)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா மகசீன் சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்துள்ளார்.

நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு மதிய உணவை எடுத்து சென்று வழங்கி அவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

அங்கு தம்முடன் கலந்துரையாடிய அரசியல் கைதி கள் கடந்த பாராளுமன்ற அமர்வில் தமது விடுதலை தொடர்பாக ஒத்திவைப்பு பிரேரனை கொண்டு வந்தமைக்கு நன்றி தெரிவித்ததோடு இந்த அரசாங்கத்தை தாம் நம்புவதாகவும் ஏதாவது ஒரு பொறிமுறையூடாக அனைவரையும் விடுதலை செய்யக்கூடிய ஏற்பாட்டை முன்னெடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (2-281)

# ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்க

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய இந்துபுரம் திருமுறிகண்டியைச் சேர்ந்த தயானந்தராசா சிவராணி என்பவரது ஆவணங்கள் அடங்கிய பொதியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக மேற்படி ஆலய அன்னதான சபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

இப் பொதியினுள் வங்கிப் புத்தகம், தேசிய அடையாள அட்டை, திருமணப் பதிவுச்சான்றிதழ், சமுர்த்தி வங்கிப் புத்தகம் உள்ளிட்ட பல்வேறுபட்ட ஆவணங்கள் அடங்கிய பொதியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எனவே உரியவர் நேரில் வருகை தந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு அன்னதான சபைத் தலைவர் கேட்டுள்ளார். (2-271)

# நிர்வாகத் தெரிவும் கலந்துரையாடலும்

புதுமுறிப்பு சோலைநகர் சேரமான் முன்பள்ளியின் புதிய நிர்வாகத் தெரிவும் விசேட கலந்துரையாடலும் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சேரமான் முன்பள்ளித் தலைவரின் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு கரைச்சி பிரதேச முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.விந்தன், அறிவொளி வலயத்தின் சிறுவர் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. சிவநேசன், சிவில் நிர்வாக முன்பள்ளிகளின் பிரதேச இணைப்பாளர் ச.சகாதேவன், புதுமுறிப்பு கிராம சேவை உத்தியோகத்தர் மஞ்சுளா பாலகுமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-309)



யாழ்.எயிட் நிறுவனத்தினரால் கடந்த 5 ஆம் திகதி கிளிநொச்சி ஊற்றுப்புலத்தைச் சேர்ந்த நரம்பியல் நோயால் பாதிக்கப்பட்ட மாணவனின் சத்திர சிகிச்சைக்கு 74 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது. இதற்கான நிதியுதவியை சுவிஸ்வாழ் புலம்பெயர் உறவுகள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராறு திட்டத்தில் சுவீகரிக்கப்பட்ட

# விவசாயக்காணிகளுக்கு மாற்றுக்காணிகள்

# தருமாறு கோரி விவசாயிகள் கவனயீர்ப்பு

## வவுனியாவில் நேற்று மகஜரும் கையளிப்பு





வவுனியாவில் மேற்கொள்ளப்படும் நகர நீர் விநியோகத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட பேராறு திட்டத்தில் சுவீகரிக்கப்பட்ட வயல்காணிகளுக்கு மாற்றுக்காணிகள் இதுவரை வழுங்கப்படவில்லை என தெரிவித்து விவசாயிகளால் கவனயீர்ப்பு ஊர்வலமொன்று நேற்று நடத்தப்பட்டது.

சாஸ்திரி கூழாங்குளம். பண்டார பெரியகுளம் ஆகியவற்றின் கீழ் செய்கை பண்ணப்பட்ட வயல் காணிகளுக்கு மாற்றுக்காணிகள் தரப்படவில்லை என தெரிவித்து ஊர்வலத்தில் ஈடுபட்ட விவசாயிகள் வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக இருந்து சுலோக அட்டைகள் ஏந்தியவாறு வவுனியா மாவட்ட செயலகம் வரை ஊர்வலமாக சென்றிருந்தனர். இதன் போது மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமாரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நகருக்கான நீர்வழங்கல் திட்டமொன்று 2007 ஆம் ஆண்டளவில் நீர்வழங்கல் சபையால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதற்காக பேராறு ஆற்றுக்கு குறுக்காக நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு நீர் வழங்குவதே அத்திட்டமாக இருந்தது.

இத்திட்டத்திற்காக 65 குடும்பங்களுக்கு சொந்தமான 167 ஏக்கர் வயல் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டது. இதற்கு விவசாயிகள் ஆகிய நாங்கள் எதிர்ப்புத்தெரிவித்தோம். இதனடிப்படையில் விவசாயிகளினால் முற்தரப்பு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் நிபந்தனையுடன் விவசாயிகள் காணிகளை விட்டுக் கொடுத்திருந்தனர்.

இதனடிப்படையில் சுவீகரிப்பட்ட காணிகளின் தரத்துக்கு ஏற்ற காணிகளை ஒரு வருடத்திற்குள் காடுகள் அழிக்கப்பட்டு புதிய இடத்தில் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டிருந்தது. எனினும் மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் 14 குடும்பங்களுக்கு 37 ஏக்கர் வயல் நிலங்கள் மாத்திரமே கடந்த மாதம் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் சுவீகரிக்கப்பட்ட வயல்களுக்கு சமமான தரத்தில் இல்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இத்துடன் அண்மையில் விவசாயிகளுக்கு சிறு தொகைப்பணத்தை வழங்கி வயல்களை துப்புரவு செய்து எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் தெரிவித்திருந்தனர். எனவே தற்போது கால போகம் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஏனைய பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் காணிகளை வழங்குமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என தெரிவித்துள்ளனர்.

இம் மாதம் 30 ஆம் திகதிக்கிடையில் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் இது விடயத்தில் நீதிமன்றத்தின் உதவியை நாடப் போவதாகவும் விவசாயிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

இந்த மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. நகர அபிவிருத்தி நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தேசிய பணிப்பாளர் எதிர்க்கட்சி தலைவர் ஆர்.சம்பந்தன். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.வன்னி தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள். வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள். நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைத் தலைவர். நகர வலய. நகர நீர்வழங்கல் சுகாதாரத்திட்ட முகாமையாளர். வவுனியா பிரதேச செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.(2-250)




## 'எமது உடல்களையாவது சொந்தக்காணிகளில் புதையுங்கள்'

## பரவிப்பாஞ்சான் மக்கள் 8வது நாளான நேற்று தொடக்கம் உணவுத் தவிர்ப்பு



இராணுவத்தினரின் வசமுள்ள பரவிப்பாஞ்சான் காணிகளை விடுவிக்கக் கோரி காணி உரிமையாளர்களினால் 8ஆம் நாளான நேற்று தொடக்கம் உணவுத்தவிர்ப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் நேற்று வரை தொடர்ந்தது. 7 நாட்களாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் நேற்று முதல் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

தமது பூர்வீகக் காணிகளை விடுவித்து தாம் குடியேறுவதற்கு காணிகளை கையளிக்குமாறு கோரி குறித்த போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். பரவிப்பாஞ்சான் மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், எமது உடல்களையாவது சொந்தக் காணிக்குள் புதையுங்கள்.

கடந்த 7 நாட்களாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டுவந்த எமக்கு எதுவித பதிலும் கிடைக்காத நிலையில் 8ஆம் நாளான நேற்று உணவு தவிர்ப்பு போராட்டமாக மாறியுள்ளது. இன்னும் 15 பேருக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். இந்த காணிகள் விடுவிக்கப்படும் வரை நாம் தொடர்ந்தும் இரவு- பகலாக உணவு தவிர்ப்பில் ஈடுபடவுள்ளோம் என உறுதிபடத் தெரிவித்தனர்.(2-15-312)

## மணவாளன் பட்டமுறிப்பில் மணலுடன் அகப்பட்டார் சாரதி

## உழவு இயந்திரம் கைப்பற்று



(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய பிரிவிலுள்ள மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணவாளன் பட்ட முறிப்பு கிராமப் பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் மணலை ஏற்றிப் பயணித்த சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதோடு சம்பவத்துடன் தொடர்புடைய உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது. முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து. முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழி நடத்தலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் அணியினரின் தேடுதலின் போதே அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணலை ஏற்றிப் பயணித்த சாரதி உழவு இயந்திரத்துடன் அகப்பட்டுள்ளார்.

மேற்படி பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரமும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரான சாரதியும் மேலதிக விசாரணைகளுக்காக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணையின் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முற்படுத்தப்பட உள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

### பள்ளிமுனை 25 வீட்டுத்திட்ட காணியை

## நில அளவை செய்யும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை 25 வீட்டுத்திட்டத்திலுள்ள மக்களின் காணியை கடற்படையினருக்கு வழங்கும் வகையில் மேற்கொள்ளப்படவிருந்த நில அளவீட்டு நடவடிக்கைகளுக்கு மன்னார் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

பள்ளிமுனை 25 வீட்டுத் திட்டத்தில் நிலை கொண்டுள்ள குறித்த காணியினை கடற்படைக்கு வழங்க தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததோடு. நில அளவையை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த நில அளவை செய்யும் நடவடிக்கைக்கு பள்ளிமுனை கிராம மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

குறித்த காணிப்பிரச்சினை குறித்து 25 வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த 19 பேர் மன்னார் நீதிமன்றில் கடந்த 11.02.2013 அன்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவ் வழக்குகள் தற்பொழுது மன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே குறித்த காணி தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், குறித்த காணியை நில அளவீடு செய்யும் நடவடிக்கைக்கு இடைக்காலத்தடை விதித்து கட்டளை பிறப்பிக்குமாறு சட்டத்தரணி த.வினோதன் பள்ளிமுனை 25 வீட்டுத் திட்ட மக்கள் சார்பாக மன்றில் தெரிவித்தார்.

சட்டத்தரணியினால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா குறித்த காணியின் வழக்கு முடிவுக்கு கொண்டு வரும் வரை இரண்டு தரப்பினரும் குறித்த காணியில் எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க இடைக்கால தடையுத்தரவை வழங்கினார். (2-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலமொழிக் கற்பித்தல்; புதிய முறைமைகளின் தேவை



கலாநிதி
கந்தையா ஸ்ரீகணேசன்
சிரேஷ்ட ஆங்கில மொழிக் கற்பித்தல் விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்.

### காலனித்துவவாதிகளின் மேற்கத்தேய கல்வி முறைமைகள்

1505 இல் இலங்கைத் தீவில் காலடி வைத்த போர்த்துக்கீசர் 1656 வரை கரையோர மாகாணங்களான தெற்கு, வடமேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளைக் கைப்பற்றி ஆண்டனர். கிறிஸ்தவ மிஷனரிமார் தொடக்கிய பரிஷ் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் இயங்கின. ஆரம்பக்கல்வியில் எழுத, வாசிக்கவும் மற்றும் சமயக்கல்வியையும் தாய் மொழியில் நடத்தியதோடு உயர் கல்வியை கல்லூரிகளில் லத்தீன் மொழியில் கற்பித்தனர். போர்த்துக்கீசமொழி நிர்வாக மொழியாக இருந்தது.

1656 முதல் 1796 வரை டச் கிழக்கு இந்திய கம்பனி இலங்கையை ஆண்டது. பரிஷ் பாடசாலைகள் தாய் மொழியில் வாசிப்பு, எழுத்து என்பவற்றுடன் உயர் கல்வியை கல்லூரியில் டச் மொழியிலும் பின்னர் லத்தீன் மொழியிலும் கற்பித்தனர். கொழும்பில் அமைந்திருந்த குருமடத்தில் லத்தீன், கிரேக்கம், ஹீப்ரு என்பன போதிக்கப்பட்டன.

1796 இல் டச் கிழக்கு இந்திய கம்பனியிடமிருந்து பிரிட்டிஷ் கிழக்கு இந்திய கம்பனியினர் நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றதோடு கல்வி நிலைமைகள் முன்னேற்றம் கண்டன.

அரசியல் அதிகாரத்தையும் பொருளாதார ஸ்திரத்தையும் நிலைநிறுத்த கல்வியில் மக்களை முன்னேற்ற வேண்டும்என நினைத்தனர். பரிஷ் பாடசாலைகள் மீள் ஒழுங்குக்கு கொண்டுவரப்பட்டன. ஆங்கிலப் போதனை கட்டாயமாக்கப்பட்டது. அரச சேவையில் ஆட்களைச் சேர்த்துக்கொள்ள ஆங்கிலம் தெரிந்த கற்றவர்கள் தேவைப்பட்டனர். Academy ஒன்று நிறுவப்பட்டு ஆங்கில போதனையூடாக உயர்கல்வி வழங்கப்பட்டது. உள்ளூர் இலக்கியங்களுடன் தாய்மொழியில் எழுதி வாசிக்கவும் மற்றும் பாடங்களும் கற்பிக்கப்பட்டன. சுப்பிரியர் (Superior) பாடசாலைகளில் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவம் பேணப்பட்டது.

இலங்கையில் Sir Brownrigg காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிமார் தமது பணியை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. 1812 இல் கொழும்பில் Baptist மிஷனும் 1813 இல் யாழ்ப்பாணத்தில் அமெரிக்கமிஷனும் மிஷன் பாடசாலைகள் தொடங்க அனுமதிக்கப்பட்டனர். பாடசாலைகளில் ஏனைய பாடங்களுடன் ஆங்கிலம்கற்பிக்கப்பட்டது. 1827 இல் தொடங்கப்பட்ட வட்டுக்கோட்டை மிஷனில் உயர்கல்வி ஆங்கிலத்தில் போதிக்கப்பட்டது. ஆங்கில போதனையில் ஒரு புதிய பரிமாணத்தை வட்டுக்கோட்டை மிஷனரி ஏற்படுத்தியது.

1829 இல் இலங்கைக்கு வந்த கோல்புறூக் கமிஷன் நிர்வாகத்தை ஆங்கிலத்தில் நடத்தப்பணித்தது. கொழும்பு கல்லூரி ஒன்றை நிர்மாணித்து ஆங்கிலத்தில் போதனைகள் நடத்தவேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

1835 இல் தோமஸ் மக்கலே தமது அறிக்கை ஒன்றில் ஆங்கிலக்கல்வியோடு ஆங்கிலக்கலாசாரத்தையும் அறிமுகப்படுத்தி அதன் மேன்மையை காலனித்துவ மக்களுக்கு உணர்த்த வேண்டும் எனக் குறிப்பிட்டார். அதேபோல அரச நிர்வாகத்தை நடத்தக்கூடிய ஆங்கிலக்கல்வி பெற்ற உள்ளூர் வாசிகளை வேலைக்கு அமர்த்துவது பொருளாதார ரீதியில் இலாபகரமானது எனவும் குறிப்பிட்டார். அதன் அடிப்படையில் ஆங்கிலக்கல்வி பெற்றவர்கள் அரச உத்தியோகங்களில் அமர்ந்தனர். ஆங்கில மொழிக்கல்வி மேலாதிக்கம் பெற்றது.

20 ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் மூன்று வகையான பாடசாலைகள் (சுதேச பாடசாலைகள், ஆங்கில பாடசாலைகள் மற்றும்



கல்வித் தரிசனம்

ஆங்கில சுதேச பாடசாலைகள்) காணப்பட்டன. இவற்றிலிருந்து 3 வகையான கல்வி பெற்ற சமூகங்கள் உருவாகின. அவர்களில் இடதுசாரி சிந்தனை கொண்டவர்களும் இருந்தார்கள். நிர்வாக மொழியாக ஆங்கிலம் இருந்தமையால் ஆங்கிலக் கல்வி நாட்டம் மிகுதியாக இருந்தது.

1929 இல் ஆரம்பப் பாடசாலைகள், கனிஷ்ட-இடைநிலைப் பாடசாலைகள், சிரேஷ்ட-இடைநிலைப் பாடசாலைகள் என 3 வகைகளாக பாடசாலைகளைப் பிரித்தார்கள். ஆரம்ப நிலையில் 6ஆம் 7ஆம் 8ஆம் வகுப்புக்களில் ஆங்கிலம் போதித்தல் கட்டாயமாக்கப்பட்டது. 1940 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மத்திய பாடசாலைகள் இலங்கைக் கல்வி வரலாற்றில் முக்கிய பங்கை ஆற்றின.

C.W.W. கன்னங்கராவின் அறிக்கை ஆரம்பப் பாடசாலைகளில் தாய்மொழிக்கல்வியைப் பரிந்துரைத்தது. இடைநிலைக் கல்வியை விரும்பிய மொழியில் படிக்க முடியும், செய்ய முடியும். ஆனால் பல்கலைக்கழகக் கல்வி ஆங்கிலத்தில் தொடர்ந்தது.

1945 ஆம்ஆண்டு கொண்டுவரப்பட்ட இலவசக் கல்வி ஆங்கிலக் கல்வியை எல்லோரும் பெற சந்தர்ப்பம் வழங்கியது.

### ஆங்கில மொழிக் கல்வி

இலங்கை சுதந்திரமடைந்த வேளையில் இருந்த ஆங்கில மொழிக் கல்வி 1960 களில் சுய மொழிக் கல்வியாக படிப்படியாக மாற்றம் கண்டது. 1951 இல் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை ஒரு மாணவர் ஆண்டு 8 வரை தனது சொந்த மொழியில் படிக்கவும் ஆண்டு 9இல் இருந்து ஆங்கில மொழிமூலத்துக்கு மாறவும் வழிகாட்டியது. 1956இல் விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேற்கு மொழிகள் ஆங்கிலத்திலும் மற்றையவை அந்த அந்த மொழிகளிலும் போதிக்கப்பட்டன. மற்றைய பாடங்கள் சுய மொழிகளிலும் நடத்தப்பட்டன. 1960 இல் விடுக்கப்பட்ட அறிக்கையின்படி ஆங்கிலப் பாடம் ஆண்டு 8 வரை கட்டாயமாக்கப்பட்டது.

1957 இல் வசதியான மொழி மூலத்துக்கு மாற பாடசாலைகளை அரசாங்கம் அனுமதித்தது. முதன் முதலாக 1960இல் சுதேச மொழி மூலமாக கலைப்பாடங்கள் பல்கலைக் கழகத்தில் படிப்பிக்கப்பட்டன. ஆயினும் மருத்துவம், பொறியியல், சட்டம், விஞ்ஞானம் போன்ற தொழில்சார் கற்கைகள் ஆங்கில மொழியிலேயே தொடரப்பட்டன.

### ஆங்கிலக்கல்வியின் தவிர்க்க முடியாத வகிபாகம்

1960 முதல் படிப்படியாக சுதேச மொழிவழிக் கல்வி பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது. பல்கலைக்கழக மட்டத்தில் கலைப்பாடங்கள் சுதேசமொழியில் கற்பிக்கப்பட்டன. இருப்பினும் உலகளாவிய ரீதியில் ஆங்கிலத்தின் செல்வாக்கு காரணமாக இலங்கையின் கல்விக் கலைத்திட்டத்தில் ஆங்கிலமொழிப் போதனை முக்கிய இடம் பிடித்தது. 1977இல் இலங்கை அரசு திறந்த பொருளாதாரக் கொள்கைகள் கடைப்பிடித்தபோது சர்வதேச நிபுணர்களுடனான தொடர்பாடலுக்கு ஆங்கிலம் தெரிந்த இலங்கை நிபுணர்கள் தேவைப்பட்டார்கள். எனவே ஆங்கிலக் கல்வியில் தொடர்ந்து வந்த அரசினர் கவனம் செலுத்தினர்.

படிப்படியாக கீழ்நிலை நோக்கி சென்ற ஆங்கிலக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு பாடசாலைக்கல்வியில் ஆங்கிலப்பாட கலைத்திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் படிப்பிக்கும் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தவும் கல்வியாளர்கள் முன்னேற்பாடுகளை மொழிந்தனர்.

### பாடசாலைக்கல்வியில் பயன்படுத்தப்பட்ட ஆங்கிலக் கற்பித்தல் முறைகள்

பிரித்தானிய ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்தில் அமெரிக்கமிஷனரியினர் இலக்கண- மொழிபெயர்ப்பு முறைகளைக் கையாண்டனர். இலக்கிய பாடங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக மொழிக் கற்பித்தலை மேற்கொண்டனர். மொழி பெயர்த்து விளக்கப்படுத்துவதுடன் இலக்கண விடயங்களை நேரடியாக படிப்பித்தனர் ஆசிரியர்கள்.

பின்னர் 1960களில் ஆங்கிலத்தை ஆங்கிலத்திலேயே படிப்பிக்க வேண்டும் எனும் கருத்தின்படி நேரடி முறை (Direct Method) பயன்பாட்டுக்கு வந்தது. ஆனால் இதற்கும் பெரிய அளவில் வரவேற்பு இருக்கவில்லை. ஏனெனில் மொழியியல் பின்னணி இல்லாது நேரடி முறை வெற்றி பெற வாய்ப்பு இல்லை என்றார் பேரா சிரியர் டொறிக் டீ.சொய்சா.

1973இல் வெளியிடப்பட்ட லனறோல் அறிக்கையும் ஆங்கில பாடம் கற்பித்தலின் போதாமையை சுட்டி க்காட்டியது. இலக்கியம் போதித் தலையும் சுயவெளிப்பாட்டையும் கைவிட்டு மொழித்திறன்கள் கற்பித்தலில் அழுத்தம் காட்டப்பட்டமையினால் ஆங்கிலக்கல்வி வீழ்ச்சியுற்றதெனவும் இலக்கியம் போதித் தலூடாக சுயவெளிப்பாட்டைக் கொண்டு வரவேண்டும் எனவும் அறிக்கை வலியுறுத்தியது.

Graded–Structural–oral-situational approach எனும் முறைமை அக்காலத்தில் சர்வதேச மட்டத்தில் செல்வாக்கு பெற்றிருந்தது. அதன் பிரகாரம் அம் முறைமை 70களில் இலங்கைக் கல்வித்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு புதிய புத்தகங்களும் வடிவமைக்கப்பட்டன. வசன அமைப்புகள் பற்றிய இலக்கணக்கல்வியும் வாய்மொழி (oral) பயிற்சியும் வலியுறுத்தப்பட்டன.

மொழியியலாளர்கள் Bloomfield மற்றும் Fries ஆகியோர் பேச்சுத் திறனிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

D.Walatara எனும் ஆங்கிலக் கல்வி அதிகாரி C.J.Dodson வடிவமைத்த Bilingnal Method ஐ அடியொற்றி Reconstruction எனும் Method ஐ அறிமுகப்படுத்தினார். ஆனால் அதுவும் வெற்றியளிக்கவில்லை. பேராதனைப்பல்கலைக்கழக பேராசிரியர் கந்தையா Noam Chomsky அறிமுகப்படுத்திய Transformational Generative Grammar Method பரிந்துரை செய்த போதும் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படவில்லை.

1984இல் கல்வி அமைச்சு தொடர்பாடல் அணுகுமுறை (Communicative Approach) இல் எழுதப்பட்ட புத்தகங்களுடன் தொடர்பாடல் முறையை அறிமுகப்படுத்தியது.

### புத்தகங்கள்

1965இல் English Book one Two Three என்பன தரம் 3,4,5 வகுப்புக்களுக்கும் இடை நிலை வகுப்புக்களுக்கு An English Course for Grades six seven eight nine and ten என்பனவும் An Advance English course for Grades Eleven and Twelve ஆகியன உயர்தர வகுப்புக்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு அலகு ஒரு இலக்கண விடயத்தை அறிமுகப்படுத்தி அதனை அடியொற்றி இரு வாசிப்பு கிரகித்தல் பாடங்கள் இணைக்கப்பட்டன. உதாரணமாக நிகழ் காலத்தை விளங்கப்படுத்தும் இலக்கண விடயத்தை அடியொற்றிய பந்திகளும் எழுதப்பட்டன. இதனால் குறிப்பிட்ட இலக்கண விடயத்தை வாசிப்புப் பாடத்தில் புரிந்துகொள்ள வழிகோலியது. வாசிப்புப் பாடங்கள் தர வரிசையில் சேர்க்கப்பட்டன. பல்வேறு இலக்கிய பனுவல்களில் இருந்து எடுக்கப்பட்ட பிரதிகள் புத்தகங்களில் இடம்பெற்றன.

இலக்கியப் பிரதிகளுடன் எல்லா மாணவரும் ஒன்ற முடியவில்லை எனவும் பொறிமுறைத்தனமாக வசன அமைப்புக்களை பயிற்றுவிக்கும் முறைமை, இலக்கணப்பயிற்சிகள் வழக்கமான என்ன எது என்ற பேச்சு முறைமைகள் சரியான முறையில் கையாளப்படாததால் இம்முறை மூலமும் மாணவர் ஆங்கிலக்கல்வியில் மேன்மையுற முடியவில்லை.

ஒரு எல்லைப்படுத்தப்பட்ட சொற்களஞ்சியம் மற்றும் ஒரு குறிப்பிட்ட அடிப்படையான இலக்கண அம்சங்கள் மட்டுமே க.பொ.த. சாதாரணதரம் வரை வரும் மாணவரால் அறிந்துகொள்ளப்பட்டன. இதனால் பேச்சு மற்றும் எழுத்து முறையிலான மொழிப் பயிற்சிகளில் மாணவர் கவனம் செல்லவில்லை. லனறோல் அறிக்கை இம்முறைமைகளை 'யதார்த்தம் அற்றவை' என புறந்தள்ளியது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல 80 களில் தொடர்பாடல் ஆங்கிலம் என அறிமுகப்படுத்தி அதற்கான English Everyday எனும் நூற்தொகுதியும் அறிமுகப்படுத்தப்பட்டது. பாடத்திட்டம் Functional and Notional எனக் குறிக்கப்பட்டது. அதிகளவிலான Role plays, dialogues என்பவற்றோடு இலக்கியப்பகுதிகள்- கவிதைகள், கதைகள், நாவல் பகுதிகள் என்பன வாசிப்புப் பாடங்களாக உள்ளடக்கப்பட்டன.

எழுத்துப்பயிற்சிகளுக்காக கடிதங்கள், அறிவித்தல்கள் என்பவற்றோடு விஞ்ஞான, சமூகக் கல்வி பாடப் பிரதிகளும் இணைக்கப்பட்டன.

வாய்ப்பாடுகளை நெட்டுருவாக்கும் பயிற்சிகள் இங்கு பயன்படுத்தப்படவில்லை. இலக்கணம் Grammar in action ஊடாகப் படிப்பிக்கப்பட்டது. அவை இயல்பான சூழ்நிலைகளை உள்ளடக்கும் பாடங்களுடன் அமைந்திருந்தன. தொடர்பாடல் திறனை வளர்க்கும் விதமாக பல்வேறு அலகுகள் இணைக்கப்பட்டிருந்தன.

உயர்தரத்திற்கும் இதே அடிப்படையில் An Integrated Course in English for G.C.E Advanced Level எனும் புத்தகம் உருவாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்



சண்முகநாதன் அருள்நங்கை
தம்பதியரின் அன்புப் புதல்வன்

## சந்துதன்

| | | |
|---|---|---|
| எம்முடன் | :- | 07.02.2000 |
| எம்மைவிட்டுப் பிரிந்தது | :- | 08.09.2009 |







அன்பின் திருவுருவே அருமை மகனே சந்துதா! நீ எமைவிட்டுப்பிரிந்து 7 ஆண்டுகள் உருண்டோடிவிட்டதையா! ஆனால் உம் நினைவோ எமைவிட்டு கணநேரம் உருளவில்லை மகனே! கண்ணின் மணிபோல் ஒன்பது ஆண்டுகள் கலக்கமின்றி உமைக் காத்து வாழ்ந்த சொர்க்கமான அந்த வாழ்வை எப்படி மறப்பது கண்ணே! காலங்கள் உருள்கின்றன. ஆனால் நினைவலைகள் மாறவில்லை. புத்திரனே எமை பாசமாகப் பற்றி பசுமையான வாழ்வு தந்தாய். இன்று பாலைவன வாழ்வை எமக்குத் தந்து விட்டு மௌனமாய் இருக்கின்றாய் மகனே!

உமை மறக்க முடியாத வேதனையை மட்டும் எமக்குத் தந்துவிட்டு நீர் மட்டும் நிம்மதியாகத் தூங்குகின்றீர். எமை மறந்து தூங்கும் உமை சந்திக்கும் நாள் எப்போ என ஏங்குகின்றோம் ராசா, மகனே நீ எழுந்து வருவாய் என்ற நம்பிக்கையில் உன் தந்தை நீ உறங்கும் இடம்வந்து ஏங்கி நிற்பதை நீ அறியவில்லையா?

நிழற்படத்தை நிஜமாக எண்ணிப் பூஜிக்கும் உன் தாயின் கண்ணீரை நீ காணவில்லையா? பிற நாடு சென்ற அண்ணா எப்போ வருவார் என எண்ணி ஏங்கி நிற்கும் சகோதரர் வாஞ்சையை நீ கேட்கவில்லையா?

யாருக்குமே பதில் சொல்லமுடியவில்லை கண்ணே! அர்த்தத்துடன் வாழ்ந்த நாம் உமை பிரிந்து அர்த்தமற்று வாழ்கிறோம். இயற்கையின் நியதி பிறப்பும் இறப்பும் என்பதனை எமக்கு உணர்த்திய உத்தம பிள்ளை நீ. ஆண்டவன் அடியில் பரிசுத்த வாழ்வு வாழும் உன்னை பாவவாழ்வு வாழும் நாம் வந்து காண்போம் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்...

உன் அருமைத் தந்தை சண்முகநாதன், ஆருயிர் தாய் அருள்நங்கை,
பாச சகோதரர்கள் :- தேவசந்துதன், தேவசாத்வீகன்.

லக்சுமி, சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் ராணுவம் விசவாயுத் தாக்குதல்

(அலெப்போ)

**சிரியாவில் குளோரின் விச வாயுவை பீப்பாயில் அடைத்து ராணுவம் ஹெலிகொப்டர் மூலம் வீசியதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**





சிரியாவில் சில பகுதிகளை புரட்சி படையினரும், சில பகுதிகளை ஐ.எஸ். தீவிர வாதிகளும் கைப்பற்றி வைத்துள்ளனர். இவற்றை மீட்பதற்காக இராணுவம் தீவிரமாக போராடி வருகிறது. அவர்களுக்கு ஆதரவாக ரஷ்ய படைகளும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

அங்குள்ள அலெப்போ நக ரம் மற்றும் சுற்றி உள்ள பகுதிகள் புரட்சி படையினரிடம் உள்ளன. இந்த பகுதியை மீட்பதற்காக இராணுவம் கடுமையாக போரிட்டு வருகிறது.

இந்த நிலையில் குளோரின் விச வாயுவை பீப்பாயில் அடைத்து ராணுவம் ஹெலிகொப்டர் மூலம் வீசியதாக இப்போது தகவல் வெளியாகி உள்ளது.

இதில் 90 பேர் படுகாயம் அடைந்ததாகவும், ஏராளமானோர் மூச்சு திணறலால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்ற குளோரின் வாயுக்களை போரில் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதையும் மீறி சிரியா இராணுவம் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கிறது. இதில் பாதிக்கப்பட்டவர்கள் முகமூடி அணிந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

கடந்த மாதமும் இது போன்ற விசவாயு தாக்குதல் நடந்ததாகவும் இப்போது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதுபற்றி ரஷ்யா வெளியிட்டுள்ள செய்தியில், சிரியா விசவாயு தாக்குதல் நடத்தவில்லை. புரட்சிப் படையினர்தான் விசவாயு தாக்குதல் நடத்தினார்கள் என்று கூறியுள்ளது. (இ-7)




## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தேவையற்ற தலையீடு

### ஹிலாரி கிளின்டன் பரபரப்பு குற்றச்சாட்டு



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தேவையற்ற தலையீடு உள்ளது என ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் குற்றம் சாட்டி இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 8ஆம் திகதி நடக்கிறது. வாக்குப்பதிவுக்கு இன்னும் 2 மாதங்களே உள்ள நிலையில் தேர்தல் களம் சூடு பிடித்து வருகிறது.

ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டனும் (வயது 68); குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்டு டிரம்பும் (வயது 70) கடும் போட்டியில் உள்ளனர்.

இதுவரை வெளியான கருத்துக்கணிப்புகள் பெரும்பாலும் ஹிலாரிக்கு சாதகமாக அமைந்துள்ளன.

ஆனாலும் டிரம்ப் அயர்ந்து போகாமல், பிரசாரத்தில் ஹிலாரி மீது எதிர்ப்புக் கணைகளை வீசி வருகிறார்.

இந்த நிலையில், தனது புதிய பிரசார விமானத்தில் பயணம் செய்தவாறு, ஹிலாரி நிருபர்களுக்கு சிறப்பு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது.

நாம் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். நமது தேர்தல் நடவடிக்கைகளில் இதுவரை ஒருபோதும் வெளிநாட்டு அதிகார சக்தியின் எதிர்ப்பை சந்தித்தது இல்லை. நடந்து முடிந்த ஜனநாயக கட்சியின் தேசிய மாநாட்டில் ஏற்கனவே ஊடுருவல் இருந்தது.

நமது நாட்டின் மிகப்பெரிய கட்சிகளின் வேட்பாளர்களில் ஒருவர், இன்னும் அதிகமாக ஊடுருவுமாறு ரஷ்யர்களை கேட்டுக்கொண்டதெல்லாம் நடந்தது இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது ஒரு நிருபர், "அப்படியென்றால், அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு டிரம்பை தேர்ந்தெடுப்பதற்கு ரஷ்யர்கள் தீவிரமாக முயற்சி செய்து வருகிறார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?" என கேள்வி எழுப்பினார்.

அந்தக் கேள்விக்கு உடனடியாக ஹிலாரி பதில் அளிக்காமல், நிதானமாய் யோசித்த பின்னர், "டிரம்ப் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக தேர்வு செய்யப்பட்டபோதே, இந்த மாதிரி செயல்கள் நடந்ததாக நான் கருதுகிறேன்" என பதில் அளித்தார்.

மேலும், "நீங்கள் ஒரு விடயத்தை பார்க்கலாம். அவர் ஏற்கனவே (ரஷ்ய ஜனாதிபதி) புடினுடைய கொள்கைகளுடன் கூட்டணி வைத்துக்கொண்டு விட்டார் என குற்றம் சாட்டினார்.

அமெரிக்க ஊடகங்கள் பலவும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருப்பது குறித்து, உள்நாட்டு புலனாய்வு அமைப்புகள் விசாரணை நடத்தி வருவதாக செய்திகள் வெளியிட்டு இருக்கின்றன.

இதைச் சுட்டிக்காட்டிய ஹிலாரி, இது நம்பகமான தகவல்கள்தான் எனத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடுகள் இருப்பதாக வெளியான தகவல்கள் குறித்து தேசிய புலனாய்வு அமைப்பின் இயக்குநர் ஒருங்கிணைப்பில் விசாரணை நடப்பதாக 'த வோஷிங்டன்போஸ்ட்' ஏடு செய்தி வெளியிட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வடகொரியா மீதான பொருளாதார தடைகளை வலுப்படுத்த நடவடிக்கை

### அமெரிக்க ஜனாதிபதி உறுதி

(லாவோஸ்)



ஐ.நா. தடையை மீறி ஏவுகணைகளை செலுத்தி வரும் வடகொரியா மீதான பொருளாதார தடைகளை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வோம் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

கிழக்காசிய கண்டத்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கிய நாடான வடகொரியா, கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது.

இருப்பினும், கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பினை பொருட்படுத்தாமலும், சர்வதேச ஒப்பந்தங்களை புறக்கணித்தும் அணு ஆயுத சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

இதன் காரணமாக, வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்பு சபையிலும், அமெரிக்காவும் மிகக்கடுமையான பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

ஆனாலும் அந்த நாடு, தற்காப்பு என்ற பெயரில் தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை விடாமல் நடத்தி வருகிறது.

அந்த வகையில் அடுத்தடுத்து 3 ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்தது. ஹுவாங்ஜு பகுதியில் இருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணைகள் ஜப்பானில் உள்ள கிழக்கு கடலில் போய் விழுந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், ஐ.நா. தடையை மீறி ஏவுகணைகளை செலுத்தி வரும் வடகொரியா மீதான பொருளாதார தடைகளை வலுப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

லாவோஸ் நாட்டில் உள்ள வியட்டியன் நகரில் தென் கொரியா ஜனாதிபதி பார்க் ஜெயின்-ஹை உடனான சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களை சந்தித்த போது ஒபாமா இவ்வாறு தெரிவித்தார்.

'ஒட்டுமொத்த சர்வதேச சமுதாயத்தினரும் வடகொரியா மீதான பொருளாதார தடையை அமுல்படுத்துவது தேவையாக இருக்கிறது என்பதை ஜனாதிபதி பார்க்கும், நானும் ஒப்புக் கொண்டுள்ளோம்.

இருப்பினும் வடகொரியா தனது கொள்கையை மாற்றிக் கொண்டால், அமெரிக்கா பேச்சுவார்த்தைக்கு தயாராகவே உள்ளது' என்றார் ஒபாமா. (இ-7)

## போர்க்குற்ற நடவடிக்கை மூலம் நாள்தோறும் 44 பேர் கொலை

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஜனாதிபதி ரோட்ரிகோ மேற்கொண்டு வரும் போர் குற்ற நடவடிக்கையில் நாள்தோறும் 44 பேர் படுகொலை செய்யப்பட்டதாக அந்நாட்டு பொலிஸ் துறை தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டியுடெர்ட், போதை மருந்து வலைப்பின்னலை அழிப்பதாக சபதம் மேற்கொண்டு கடுமையான நடவடிக்கைகளில் சில ஜனநாயக முறைகளற்ற விதத்தில் சட்ட விரோத கொலைகள், பொலிஸ் துப்பாக்கிச்சூட்டு நடவடிக்கைக்கு உத்தர விட்டார். இது போர்க் குற்ற நடவடிக்கை என்று கருதப்படுகிறது.

இது அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு கவலையை ஏற்படுத்தியது. கடந்த ஜூன் 30 ஆம் திகதி ரோட்ரிகோ ஜனாதிபதியாக பதவியேற்றது முதல் சுமார் 2,000இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பிலிப்பைன்ஸ் நாட்டில் போர் குற்ற நடவ[illegible] நாள்தோறும் சுமார் 44 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி கொலைகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்தை கிட்டத்தட்ட எட்டியுள்ளது.

"கடைசி போதைப் பொருள் கடத்தல்காரர் கொலை செய்யப்படும் வரை, நாங்கள் தொடர்வோம் நான் தொடர்வேன்" என்று ஜனாதிபதி ரொட்ரிகோ தி[illegible] தெரிவித்துள்ளார். (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளேயோ, வெளியேயோ

# பிரிவினைவாதம் குறித்து எவருமே பேசக்கூடாது

## ஹொங்கொங் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சீனா கடும் தொனியில் வாய்ப்பூட்டு

(ஹொங்கொங்)

**ஹொங்கொங்சட்டமன்றத்திற்கு உள்ளேயோ வெளியேயோ பிரிவினைவாதம் குறித்து எவருமே பேசக்கூடாது எனச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கடும் தொனியில் சீன அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

ஹொங்கொங் சட்ட மன்றத்துக்கான தேர்தல் கடந்த 4ஆம் திகதி நடைபெற்றது. எழுபது இடங்கள் கொண்ட மன்றத்தில், சுயாட்சி-சுதந்திரத்தை வலியுறுத்தும் 30 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். சீனாவிடமிருந்து ஹொங்கொங்குக்கு முழு சுதந்திரம் வேண்டும் என்று வலியுறுத்தும் தீவிர நிலைப்பாடுள்ளவர்கள் 5 பேர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், பிரிவினைவாதம் குறித்து சட்டமன்றத்துக்கு உள்ளேயோ, வெளியேயோ எந்த உறுப்பினரும் பேசக்கூடாது என்று சீனா எச்சரித்துள்ளது.

சீன அமைச்சரவையின் ஹொங்கொங்-மகாவ் விவகாரங்கள் துறைக்கான செய்தித் தொடர்பாளரை மேற்கோள்காட்டி, அரசு செய்தி நிறுவனம் ஜின்ஹுவா நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

ஹொங்கொங் பகுதிக்கு சுதந்திரம் கோரும் விதமான பேச்சு சட்டமன்றத்துக்கு உள்ளேயோ வெளியிலோ எழுவதை சீனா ஒருபோதும் சகித்துக் கொள்ளாது. ஹொங்கொங்கின் சுதந்திரத்தை வலியுறுத்தும் பேச்சையும் நடவடிக்கைகளையும் சீனா தொடர்ந்து எதிர்க்கும். சுதந்திரம் குறித்துப் பேசுபவர்களுக்கு எதிராக ஹொங்கொங் அரசு சட்டப்படி எடுக்கப்படும் எந்த நடவடிக்கையையும் சீனா ஆதரிக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் ஹொங்கொங்கில் சீன ஆதிக்கத்தை எதிர்த்து, பல தீவிர போராட்டங்கள் நடைபெற்றன.

இதில் மாணவர்களும் அதிக அளவில் கலந்து கொண்டனர். இந்த நிலையில், சட்ட மன்றத்துக்கான தேர்தல் நடைபெற்றது.

ஜனநாயகம் - சுயாட்சி கோரி போராடி வந்தவர்கள் பல்வேறு சிறு கட்சிகளாகப் போட்டியிட்டனர். இதில் சீனாவிடமிருந்து சுதந்திரம் வேண்டும் என்ற தீவிர நிலைப்பாடு கொண்ட 5 பேர் உட்பட சீர்திருத்தவாதிகள் 30 பேர் வெற்றி பெற்றனர்.

சுதந்திரத்தை வலியுறுத்தி வரும் இளைஞர்கள் சட்ட மன்றத்தில் அது குறித்துப் பிரச்சினை எழுப்புவார்கள் என்று கூறப்படும் நிலையில், சீனாவின் கடும் எச்சரிக்கை வெளிவந்துள்ளது. (இ-7)

# உத்தரகாண்டில் பேருந்து விபத்து

## 10 பேர் உயிரிழப்பு

(டில்லி)

உத்தரகாண்ட் மாநிலம் தராஹர் பகுதியில் நேற்று முன்தினம் பயணிகள் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் அந்த பேருந்து உருக்குலைந்தது.

இதில் 10 பேர் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயம் அடைந்தனர்.

உத்தரகாண்டின் யானி என்ற பகுதியில் இருந்து விகாஸ் நகருக்கு பயணிகள் பேருந்து புறப்பட்டது. அந்த பேருந்து தராஹர் என்ற மலைப்பகுதியில் வந்தபோது கட்டுப்பாட்டை இழந்து 200 மீற்றர் பள்ளத்தில் உருண்டது.

இதில் 10 பேர் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் டேராடூன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

விபத்து குறித்து ஆளுநர் கே.கே.பால், முதல்வர் ஹரிஷ் ராவத் ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.



உத்தரகாண்டில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் மாநிலம் முழுவதும் முக்கிய வீதிகள் சேதமடைந்துள்ளன. மலைப் பாங்கான பகுதிகளில் வீதிகள் கடுமையாக சேதமடைந்திருப்பதால் அதிக விபத்துகள் நேரிடுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. (இ-7)

## சார்க் மாநாட்டில் பங்கேற்க பாகிஸ்தான் செல்வார் மோடி



"பாகிஸ்தானில் நடைபெறும் சார்க் மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார்" என பாகிஸ்தானுக்கான இந்திய தூதர் கவுதம் பம்பா வாலே தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிட்டதால் இருதரப்பு உறவில் தற்போது விரிசல் ஏற்பட்டுள்ளது. சீனாவில் நடந்த ஜி20 மாநாட்டில் கூட தீவிரவாதத்தை பாகிஸ்தான் தூண்டுவதாக மறைமுகமாக தெரிவித்தார்.

பாகிஸ்தானில் வரும் நவம்பர் மாதம் நடைபெறும் சார்க் மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொள்வது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என மத்திய அரசு கூறியது.

இந்நிலையில் வெளியுறவு தொடர்பான கராச்சி தூதுவராலயம் நடத்திய உரையாடல் நிகழ்ச்சியில் இந்திய தூதர் கவுதம் பம்பாவாலே கலந்து கொண்டார்.

அப்போது சார்க் மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொள்வாரா? என அவரிடம் கேள்வி கேட்கப்பட்டது. இதற்கு பதில் அளித்த கவுதம், "எதிர்காலத்தில் என்ன நடக்கும் என என்னால் கூற முடியாது. ஆனால் இப்போது வரை, நவம்பரில் நடக்கும் சார்க் மாநாட்டில் பங்கேற்க பாகிஸ்தான் வர பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார்.

இரு நாடுகள் இடையே பதற்றம் அதிகரித்தாலும், அதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடக்கிறது. இரு நாடுகளிலும் பிரச்சினைகள் உள்ளன. மற்ற நாடுகளின் பிரச் சினைகளை பார்க்கும்முன் தனது பிரச்சினைகளை தீர்ப்பதில் பாகிஸ்தான் கவனம் செலுத்த வேண்டும் என்றார் (இ-7)

## காஷ்மீரில் நேற்றும் மோதல்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரின் ஆனந்த்நாக் மாவட்டத்தில் நேற்று பாதுகாப்பு படையினர் மற்றும் வன்முறை போராட்டக்காரர்கள் இடையே ஏற்பட்ட மோதலகளில் நான்கு பேர் காயம் அடைந்தனர்.

போராட்டம் நடத்தியவர்களை பாதுகாப்பு படையினர் விரட்ட முயற்சித்த போது இருதரப்பு இடையே மோதல் வெடித்தது. கற்களை வீசி வன்முறையில் ஈடுபட்டவர்களை பாதுகாப்பு படையினர் 'பெல்லட்' துப்பாக்கிச் சூடு நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் விரட்டி அடித்தனர். இச்சம்பவத்தில போராட்டக்காரர்கள் 4 பேர் காயம் அடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரில் பயங்கரவாதி பர்கான் வானி கொல்லப்பட்டதை தொடர்ந்து நீடித்து வரும் வன்முறை சம்பவங்களில் பலியானோர் எண்ணிக்கை 75 ஆக உயர்ந்துள்ளது.

மாநிலத்தில் நிலவிவந்த அமைதியின்மை சூழ்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டதை தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு தளர்வு செய்யப்பட்டது. ஒட்டுமொத்த ஸ்ரீநகர் முழுவதும் ஊரடங்கு உத்தரவு தளர்வு செய்யப்பட்டது. காஷ்மீரில் எந்த ஒரு பகுதியும் ஊரங்கு உத்தரவின் கீழ் இல்லை.

இருப்பினும் மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கை காக்கும் வகையில் மக்கள் கூட்டமாக [illegible] (இ-7)

## சொந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்துங்கள்

### பாகிஸ்தானுக்கு இந்தியத் தூதர் அறிவுரை

(சென்னை)

காஷ்மீர் விவகாரத்தில் கவனம் செலுத்துவதைக் கைவிட்டு, தனது சொந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பாகிஸ்தான் கவனம் செலுத்த வேண்டும் என்று அந்த நாட்டுக்கான இந்தியத் தூதர் கௌதம் பம்பாவாலே அறிவுறுத்தினார்.

இதுகுறித்து வெளியுறவு விவகாரங்களுக்கான கராச்சி தூதரகத்தில் கடந்த திங்கட்கிழமை ஏற்பாடு செய்திருந்த கேள்வி-பதில் நிகழ்ச்சியில் அவர் கூறியதாவது,

காஷ்மீர் பிரச்சினை இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் ஆகும்.

பாகிஸ்தான், இந்தியா ஆகிய இரு நாடுகளுமே ஏராளமான பிரச்சினைகளை சந்தித்து வருகின்றன.

இந்தச் சூழலில், இந்தியாவின் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதைவிட, சொந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் பாகிஸ்தான் கவனம் செலுத்த வேண்டும். இல்லையென்றால், அது கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு பிறர் மீது கல்லெறிவதைப் போன்றதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ஸ்தானிகர் மீதான தாக்குதல்

# பயங்கரவாதத்துடன் தொடர்புபடவில்லை

## மலேசிய அரசு விளக்கம்

(கொழும்பு)

**மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இலங்கை உயர்ஸ்தானிகர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், தனிப்பட்ட ஒரு சம்பவம் என அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது. பயங்கரவாத நோக்கத்துடன் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என மலேசிய பிரதி உள்விவகார அமைச்சர் தாக்கூர் ஜஸ்லான் மொஹமட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**



இலங்கையின் உயர்ஸ்தானிகர் இப்ராஹிம் அன்வர் மீதான தாக்குதலை. அமைச்சு அதிக அக்கறையுடன் அணுகுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த தாக்குதலுடன் தொடர்புட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலமர்வு ஒன்றில் பங்கேற்று நேற்று முன்தினம் உரையாற்றிய போது தாக்கூர் ஜஸ்லான் மொஹமட் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை உயர்ஸ்தானிகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் வருத்தம் தெரிவித்து மலேசிய வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்து. குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்துவதாக வெளிவிவகார அமைச்சு உறுதி அளித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதை கருத்தில் கொண்டு கோலாலம்பூரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடன் நெருக்கிப் பணியாற்றி வருவதாக மலேசிய வெளிவிவகார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7-10)

# யாசகர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை பெற்றுத்தரப்படும்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் வீடில்லாமல் வீதியோரங்களிலுள்ள யாசகர்கள் உள்ளிட்டோரை பொலிஸாரின் மூலம் இணங்கண்டு அவர்களையும் வாக்காளர்களாக பதிவு செய்து வாக்குரிமை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். அத்துடன் 2020 ஆம் ஆண்டுக்குள் பிரதான தேர்தல்களின் போது கொழும்பில் பணிபுரியும் தூர பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளை கொழும்பில் ஏற்படுத்தி கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வசன வாக்குரிமை இலங்கையர்களுக்கு முதன் முதலாக கிடைக்கப்பெற்றது. எனவே இந்த வாக்குரிமையை நாம் உரிய முறையில் பிரயோகம் செய்ய வேண்டும். தற்போது இளைஞர்கள் மத்தியில் தேர்தல்கள் மீதும் அரசியல்வாதிகள் மீதும் வெறுப்புணர்வு அதிகரிக்க தொடங்கியுள்ளது. ஆகவே தேர்தல் மீதான ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் நாட்டில் வீடில்லாமல் வீதியோரங்களிலுள்ள யாசகர்கள் உள்ளிட்டோர் பொலிஸாரின் மூலம் இனங்கண்டு அவர்களையும் வாக்காளர்களாக பதிவு செய்து வாக்குரிமை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

மேலும் அங்கொடை மனநோயாளர் வைத்தியசாலையில் குணமடைந்த நோயாளர்களை வாக்காளர்களாக பதிவு செய்யவுள்ளோம்.

அத்துடன் 2020 ஆம் ஆண்டுக்குள் பிரதான தேர்தல்களின் போது கொழும்பில் பணிப்புரியும் தூர பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளை கொழும்பில் ஏற்படுத்தி கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

மேலும்காணமற்போனோர் சான்றிதழ் உள்ளவர்களின் பெயர் வாக்காளர் பட்டியலிருந்து நீக்கப்படமாட்டாது. மரணமான சந்தர்ப்பத்தில் மாத்திரமே பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# லசந்த கொலையுடன் தொடர்புடைய புலனாய்வு அதிகாரிக்கு பிரகீத் கடத்தலுடனும் தொடர்பு

(கொழும்பு)

• சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள. இராணுவப் புலனாய்வு அதிகாரியான சார்ஜன்ட் பிரேமானந்த உடலகம. ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் வழக்கிலும் தொடர்புபட்டுள்ளார் என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர். பிரகீத் எக்னெலிகொட கடத்தலுக்கான குழுவொன்றை ஒருங்கிணைப்பதில் தொடர்புபட்டிருந்தார் என்று. சட்டமா அதிபர் சார்பில் நேற்று முன்தினம் ஹோமாகம நீதிமன்றத்தில் முன்னிலையான மூத்த சட்டவாளர் திலீப் பீரிஸ் தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளின் மூலம். சார்ஜன்ட் பிரேமானந்த உடலகமவே. பிரகீத் எக்னெலிகொட கடத்தலுக்கான குழுவை ஒருங்கிணைத்துள்ளார் என்று கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் நீதவானுக்குத் தெரியப்படுத்தினார்.

"எக்னெலிகொட. 2009 ஒகஸ்ட் மாதமும் 2010 ஜனவரி மாதமும். இரண்டு தடவைகள் கடத்தப்பட்டுள்ளார். இந்த இரண்டு கடத்தல் சம்பவங்களிலும். சார்ஜன்ட் பிரேமானந்த உடலகம தொடர்புபட்டுள்ளார் என்பதற்கான தொலைபேசி பதிவு ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன்.

எனவே. இந்த வழக்கில் சார்ஜன்ட் பிரேமானந்த உடலகமவையும் ஒரு சந்தேக நபராக குறிப்பிட்டு. அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும்" என்றும் அரச சட்டவாளர் நீதவானிடம் கோரியிருந்தார். (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### கற்களும் பூக்களும்

நம்மைத் திட்டுபவர்களும் இருக்கிறார்கள். பாராட்டுகிறவர்களும் இருக்கிறார்கள்.

இவர்களுள் முன்னவர்களை எதிரிப் பட்டியலிலும் பின்னவர்களை வேண்டப்பட்டவர்கள் பட்டியலிலும் சேர்த்து தவறு செய்து விடுகிறோம்.

இத்தவறு பல தொடர்ந்த தவறுகளுக்கு அடிப்படைக் காரணமாகிவிடுகிறது.

எப்படி?

நாம் பேசுவது தவறாக இருந்தாலும் நம்மீது உள்ள அபிமானம் காரணமாக பரவாயில்லை அதனால் என்ன இப்போ? என்று சொல்லி விடுகிறார்கள் நமக்கு வேண்டியவர்கள். சில சமயங்களில் பாராட்டவும் துணிவார்கள். நாம் இதனால் ஊக்கமடைந்து இதைவிட ஒருபடி மேலே போய் அவர்களுடைய கூடுதலான பாராட்டைக்கூடப் பெற முயற்சி செய்வோம். இதற்கு ஓர் உதாரணம் பார்ப்போம்.

நாங்கள் கல்லூரியில் படித்தபோது கல்லூரிக்கு அருகில் இருந்த நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து மின்சார ரயிலைப் பிடித்து மாம்பலம் திரும்புவோம். மறுபடி காலையில் வருவோம். எங்களுடைய அரட்டையடிக்கும் பெரிய கும்பலில் ஒருவன் மட்டும் ரயில் வேகமாக ஓட ஆரம்பித்ததும்தான் ஏறுவான். அதிலே ஓர் இன்பம். நண்பர்கள் எல்லோரும் அவனைப் பாராட்டுவார்கள். நானும் ஒரு சிலரும் மட்டும் டேய் வேண்டாம்டா என்போம். இதனால் நாங்கள் அவனுக்கு எதிரிகள். மற்றவர்கள் மிக வேண்டியவர்கள். ஒருநாள் ரயிலிலிருந்து விழுந்தான். முதுகுத் தண்டுவடத்தில் சரியான அடி. மூன்றுமாத லீவிற்குப் பிறகு கல்லூரிக்கு வந்தான். அவன் பார்வையே மாறியிருந்தது. நாங்கள் மிக வேண்டியவர்களானோம். மற்றவர்கள் வேண்டப்படாதவர்களானார்கள்.

சிலர் எதிரிகளை எரிச்சலூட்டவும் மிக வேண்டியவர்களை மகிழ்விக்கவும் தொடர்ந்து தவறுகளைச் செய்கிறார்கள். இக்கட்டில் சிக்கித் தவிக்கிறார்கள்.

நம்மீது கற்களை வீசுகிறவர்கள் நமக்கு ஒருவகையில் நன்மை செய்கிறார்கள் என்பதையும் பூக்களைத் தூவுகிறவர்கள் ஒரு வகையில் கெடுதலைச் செய்கிறார்கள் என்பதையும் நாம் தாராளமாக நம்பலாம்.

கற்களை வீசுகிறவர்கள், நம் குறைகளை நாம் உணராத போது நம் மனச்சாட்சியாக அவர்கள் செயற்படுகிறார்கள். மேலும் நாம் செய்தது எந்தவகையில் தவறு என்று நம்மை சுய ஆராய்ச்சியில் இறங்கவும் வைக்கிறார்கள்.

இப்போது நாம் நிரந்தரமாக்கிவிட்ட நினைப்புகளைச் சற்று உடைத்தெறிந்து விட்டு பாராட்டுகளையும் திட்டுகளையும் வாழ்த்துகளையும் வசதிகளையும் கற்களையும் பூக்களையும் என்றைக்கும் சமமாகப் பாவிக்கும் மனப் பக்குவத்தை அடைவதற்கான முயற்சிகளில் உடனே இறங்க வேண்டும்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## வரலாறு பகுதி-I பயிற்சிக்குரியது

01. தப்ரபேன் என இலங்கையைத் தன் உலகப்படத்தில் குறிப்பிட்டவர்
    1) தொலமி 2) ரிபைரோ
    3) ரொபேட் நொக்ஸ் 4) அரிஸ்ரோட்டில்
02. இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான மூலாதாரங்கள்.
    1) கல்வெட்டுக்கள் 2) செதுக்கல்கள்
    3) இலக்கியங்கள் 4) நாணயங்கள்
03. பின்வரும் விடைகளில் கற்காலத்தில் மரணச்சடங்கு தொடர்பான விபரங்களை அறிந்து கொள்ள உதவும் இடங்களைக் கொண்ட விடை.
    1) பாகியன்கல. இராவண எல்ல. வலகம்பத்து
    2) இராவண எல்ல. பெல்லன்பதி பெலஸ்ஸ. பாகியன்கல
    3) பெல்லன்பதி பெலஸ்ஸ. பாகியன்கல. நில்கல
    4) பாகியன்கல. திஸ்ஸமகாராமை. கலவானை
04. கைத்தொழில் புரட்சி காலகட்டத்தில் நெசவுக் கைத்தொழில் விருத்திக்கு பங்காற்றிய பொறிகளின் கண்டுபிடிப்பு கால ஒழுங்கினை சரியாகக் காட்டும் விடை
    A. பறக்கும் நூனாழி கண்டுபிடிக்கப்படல்
    B. நூல் நூற்கும் மியூல் இயந்திரம் கண்டுபிடிக்கப்படல்
    C. ஜெனிநூல் நூற்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்படல்
    D. வலுவினால் இயங்கும் நூல் நூற்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்படல்
    1) C,D,A,B 2) A,B,C,D 3) C,D,B,A 4) A,C,D,B
05. பின்வரும் நிகழ்வுகளில் தேவநம்பியதீச மன்னன் காலத்தில் நிகழ்ந்தவை மாத்திரம் உள்ளடக்கிய விடை
    A. முடிசூட்டுவதற்கான ஐந்து பொருட்களைப் பயன்படுத்தல்
    B. நிர்வாக மாவட்டங்கள் ஏற்படுத்தி அதற்கு அமைச்சர்களை நியமித்தல்
    C. முதன்முதலாக இலங்கைத் தீவை ஒன்றுபடுத்தல்
    D. வெள்ளரசு மரக்கிளைகளை நாட்டின் பல பகுதிகளில் நாட்டல்.
    1) D,C 2) D,B 3) A,B 4) A,D
06. வரலாற்று நிகழ்வுகள் சில "அ" நிரலிலும் அவற்றுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்கள் "ஆ" நிரலிலும் காட்டப்பட்டுள்ளன. "அ" நிரலுக்கு அமைவாக "ஆ" நிரலை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடை.

| நிரல் (அ) | நிரல் (ஆ) |
|---|---|
| i. கலிங்க இளவரசி திருலோக சுந்தரியை மணமுடித்தல் | A. ரிஷிகிரி |
| ii. வசப மன்னனின் யாழ்ப்பாணத்துக்கான பிரதேச நிர்வாகி | B. இளநாகன் |
| iii. எல்லாளனிடமிருந்து மாந்தை துறைமுகத்தை மீட்டல் | C. உபதிஸ்ஸ |
| iv. திஸ்ஸ மகாராமை குளத்தை அமைத்தல் | D. முதலாம் விஜயபாகு |
| | E. துட்டகைமுனு |

    1) DABC 2) DBEC 3) BDEC 4) DAEB
07. கற்கால ஈரவலய மக்கள் நத்தையுடன் உப்புக்கலந்து சாப்பிட்டமையினை உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ள இடம்.
    1) கித்துள்கல பெலிலென 2) பாகியன்கல
    2) பெல்லன்பதிபெலஸ்ஸ 4) பட்டதொம்பலென
08. A- கி.பி.1247 இல் சந்திரபானுவின் படையெடுப்பை தோற்கடித்தல்
    B- ஜோதிய இளவரசனின் கிளர்ச்சியை அடக்கல்
    C- தேவபதிராஜ எனும் அமைச்சரின் உதவியுடன் பொருளாதார சமய கல்வித் துறைகளில் வளர்ச்சி ஏற்படுத்தல்
    D- "பன்சிய பனஸ் ஜாதகய" கதை புத்தகம் மொழிபெயர்க்கப்படல்
    மேல்வரும் விடயங்களுள் 2ம் பராக்கிரமபாகு மன்னனுடன் மட்டும் தொடர்புடைய விடயங்கள்
    1) A,B,C 2) B,C,D 3) A,C,D 4) B,A,D
09. 1ம் இராஜசிங்க மன்னனால் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்ற முடியாமல் போனமைக்கான காரணம்.
    1) 1ம் இராஜசிங்கன் சிறந்த ஆட்சியாளனாகச் செயற்படாமை
    2) பொதுமக்களின் ஆதரவு கிடைக்காமை
    3) தர்மபாலன் நன்கொடை பத்திரத்தின் மூலம் கோட்டையை போர்த்துக்கேயருக்கு வழங்கியமை
    4) கடற்படை பலம் இன்மை
10. ஒல்லாந்தரின் கீழைத்தேச நிர்வாகத் தலைநகரமாக விளங்கிய இடம்
    1) அம்பொய்னா தீவு 2) பத்தேவியா 3) கல்கத்தா 4) பாண்டிச்சேரி
11. A- நுனிக்கோபுரங்கள், வில்வளையக் கூரை அமைத்தல்
    B- உலகியலை முதன்மையாகக் கொண்ட கலைப்படைப்புக்களின் தோற்றம்
    C- வட்ட வடிவிலான வில் வளையம். உயர்ந்த தூண் அமைத்தல்
    D- கலைஞர்கள் சுயாதீனமாக தம் படைப்புக்களை நிர்மாணிக்க முடியாமை
    மேற்கூறப்பட்ட விடயங்களில் மறுமலர்ச்சிக்கால இயல்புகளை மட்டும் உள்ளடக்கிய விடையாக அமைவது
    1) B உம் C உம் 2) A உம் D உம்
    3) B உம் C உம் 4) B உம் D உம்
12. "அ" நிரலிலுள்ள கண்டி இராச்சிய நில வகைகளை "ஆ" நிரலிலுள்ள அம்சங்களுடன் முறையாக இணைக்கும் போது பெறப்படும் சரியான விடை

| நிரல் (அ) | நிரல் (ஆ) |
|---|---|
| i. நிந்தகம் | A. கிராமத்தவர்கள் பரம்பரையாய் அனுபவித்தல் |
| ii. கபடாகம் | B. விகாரைகளுக்கு தானமளிக்கப்பட்டவை |
| iii. விகாரகம் | C. அரச மாளிகைக்காக பயன்படுத்தப்பட்டவை |
| iv. பரவேனிகம் | D. பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்டவை |

    1) BCDA 2) DCBA 3) DCAB 4) DCBA
13. இலங்கையில் வெசாக் முழு நோன்மதி தினத்தை விடுமுறையாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டவர்.
    1) அநாகரிக தர்மபால 2) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
    3) மீகெட்டுவத்த குணாநந்த தேரர் 4) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
14. A- கண்டியில் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்தல்
    B- ஆங்கிலேய நீதிமன்ற முறைகளை அமுல்படுத்தல்
    C- பிரதானிகளின் அதிகாரங்கள் குறைக்கப்படல்
    மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மிகப் பொருத்தமான வரலாற்று ஆவணமாக அமைவது.
    1) மியூரன் குழுவின் பரிந்துரைகள் 2) கண்டி உடன்படிக்கை
    2) மலையக வெளியீடு 4) கோல்புறூக் சீர்திருத்தம்
15. ஆப்கானிஸ்தானிலிருந்து வந்து இந்நாட்டில் வாழ்ந்த காம்போஜர்களின் பெரு வர்த்தக அமைப்பு பற்றி குறிப்பிடும் கல்வெட்டு
    1) போவத்தேகல கல்வெட்டு 2) சொரபொர வாவி தூண் கல்வெட்டு
    3) ஹோபிடிகம தூண் கல்வெட்டு 4) பண்டகல கல்வெட்டு
16. பின்வரும் இலக்கிய மூலாதாரங்களையும் அவை எழுதப்பட்ட யுகங்களையும் இணைத்து பொருத்தமான விடையைக் காண்க.

| இலக்கியம் | யுகம் |
|---|---|
| i. கவிசிலுமின | A. கம்பளை |
| ii. தலதாசிரித்த | B. குருநாகல் |
| iii. மயூர சந்தேசய | C. தம்பதெனியா |
| iv. சரசோதி மாலை | D. கோட்டை |

    1) CBDA 2) CBAD 3) BCAD 4) CABD
17. இலங்கையில் அரசாங்க தபால் சேவை 1815 இல் எந்த நகரங்களை இணைத்து ஆரம்பிக்கப்பட்டது?
    1) கொழும்பு. திருகோணமலை. யாழ்ப்பாணம். அம்பாந்தோட்டை
    2) கொழும்பு. திருகோணமலை. காலி. யாழ்ப்பாணம்
    3) கண்டி. காலி. யாழ்ப்பாணம். மன்னார்
    4) திருகோணமலை. கண்டி. நுவரெலியா. பண்டாரவளை
18. பின்வருவனவற்றுள் கைத்தொழில் புரட்சி காரணமாக பொருளாதார துறையில் ஏற்பட்ட முக்கிய நிகழ்வு யாது?
    1) தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு நகரை மையமாகக் கொண்ட சனத்தொகை மிக்க நகரங்கள் தோற்றம்
    2) கைத்தொழில் உற்பத்திகள் விரிவடைந்ததால் ஏற்றுமதி. இறக்குமதி முறைமையின் தோற்றம்
    3) பணத்தை முதலீடு செய்த செல்வந்த வகுப்பினரும். ஊழியத்தை விற்பனை செய்து வாழ்க்கை நடத்தும் தொழிலாளர் வகுப்பினரின் தோற்றமும்
    4) சேரிப்புறங்களின் தோற்றம்
19. நீலப்புத்தகத்துக்கான தரவுகளைச் சேகரித்த தேசாதிபதி
    1) பன் எங்கல் பெக் 2) பிரட்றிக் நோர்த்
    3) தோமஸ் மெயிட்லன்ட் 4) டொரிங்டன்
20. புராதன காலத்தில் A.லைத. B. மஹவெதனா எனும் பதங்களால் குறிப்பிடப்பட்டோர்
    1) சித்திரக் கலைஞர். வைத்தியர் 2) சட்டத்தரணி. வைத்தியர்
    3) நடனமாடுவோர். வைத்தியர் 4) கவிஞர். வைத்தியர்
21. பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.
    A. கம்பளை இராச்சிய காலத்தில் அழகேஸ்வர. சேனாதி லங்கார எனும் இரு குடும்பங்கள் பிரசித்தி பெற்றிருந்தமை
    B. யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னனாக விஜய கூழங்கை கொள்ளப்படுகிறான்.
    C. நிஸங்க அழகக்கோனார் தளபதி சீதாவாக்கை இராசதானியில் கோட்டையைக் கட்டினான்
    D. புவனேகபாகு ஆதிபாதன் உருகுணரட்டை கோவிந்த மலையில் பாதுகாப்பு அரணமைத்து எதிரிகள் தென்பகுதியில் பிரவேசிப்பதை தடுத்தான்.
    இவற்றுள் சரியான கூற்றுக்கள் மட்டும் அடங்கிய தொகுதி
    1) ABC 2) BCD 3) ABD 4) ACD

◆ தரப்பட்டுள்ள இலங்கை தேசப்படத்தை அவதானித்து 22 – 23 வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

22. தேசப்படத்தில் A என்ற எழுத்தினால் காட்டப்படும் நதி.
    1) கலா ஓயா 2) களனி கங்கை
    3) களு கங்கை 4) தெதுறு ஓயா
23. R என்ற எழுத்தினால் காட்டப்படும் தாழ்நில உலர் வலய வெட்டவெளிப் பாசறை
    1) பெல்லன்பதி பெலஸ்ஸ 2) பொத்தான
    2) அலிகல 4) பாகியன்கல




24. சிகிரியாக் குன்றில் தீட்டப்பட்டுள்ள அப்ஸரஸ்களின் உருவங்கள் குறித்து நிற்பது.
    1) அந்தப்புர பெண்கள் 2) இடியும் மழையும்
    3) மின்னலும் முகிலும் 4) பணிப்பெண்கள்
25. நாடுகாண் பயணிகள் நிரல் I இலும், அவர்கள் கண்டுபிடித்த இடங்கள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| i. கொலம்பஸ் | A. புயல்முனை |
| ii. பெர்டினன்ட் மகலன் | B. பிலிப்பைன்ஸ் |
| iii. கபொட் சகோதரர்கள் | C. மேற்கு இந்திய தீவுகள் |
| iv. பர்த்தலோ மேயு டயஸ் | D. கனடா |
| | E. இந்தியா |

    நிரல் I இனை நிரல் II உடன் பொருத்தமாக இணைக்கும்போது வரும் சரியான விடை
    1) CBDB 2) CADE 3) CBDE 4) DCBE
26. அநுராதபுரத்தில் உள்ள புனித இடங்களைப் பாதுகாக்கும் இயக்கத்தை ஆரம்பித்தவர்.
    1) அநகாரிக தர்மபால 2) வலிசிங்க ஹரிச்சந்திர
    3) ஜோன் த சில்வா 4) டி.எஸ்.சேனநாயக்க
27. புராதன காலத்தில் பௌத்த குருமார் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுவதற்காக பயன்படுத்தப்பட்ட கட்டட வகை
    1) பதனாகர 2) புகய 3) பன்னசாலா 4) பிரிவெனா
28. "காலிங்க சக்கரவர்த்திப் பெருமான்" என தன்னை இனங்காட்டிக் கொண்ட மன்னன்.
    1) நிஸ்ஸங்க மல்லன் 2) முதலாம் காசியப்பன்
    3) மகாசேனன் 4) குட்டகண்ண அபயன்
29. நிலக்கரி கைத்தொழிலின் விருத்தியில் பாதுகாப்பு விளக்கினை கண்டுபிடித்தவர்.
    1) தோமஸ் நியூகொமன் 2) ஹம்பிறிடேவி
    3) ஜேம்ஸ் வோட் 4) வில்லியம் சீமன்ஸ்
30. தன் தாயினை நினைவுகூரும் வகையில் பெப்பிலியானே சுனேத்ரா தேவி பிரிவெனாவை அமைத்த மன்னன்
    1) ஏழாம் புவனேகபாகு 2) நான்காம் புவனேகபாகு
    3) ஆறாம் பராக்கிரமபாகு 4) விஜயபாகு

16 ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வரலாறு பகுதி-I தொடர்ச்சி...

31. புராதன இலங்கையின் கிராமங்கள் தொழில்களின் அடிப்படையில் வெவ்வேறாக வகுக்கப்பட்டிருந்தன. அவ்வாறான கிராமங்களின் பெயர்கள் நிரல் I இலும். நிரல் II இல் அக்கிராமத்துக்குரிய தொழிலாளரும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. நிரல் I இனை II உடன் இணைத்து விடையைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| i. கோபால கம | A. மீனவர் |
| ii. கும்பகார கம | B. இடையர் |
| iii. கேவட்ட காம | C. விவசாயிகள் |
| iv. கசீகார காம | D. குயவர் |

1) BDAC 2) BDCA 3) BCAD 4) DBAC

32. இலங்கையில் நிலவிய இராஜகாரிய முறையை நீக்க சிபார்சு முன்வைத்தவர்
1) மியூரன் 2) தோமஸ் மெயிட்லண்ட்
3) கோல்புறூக் 4) டொரிங்டன்

33. வரலாற்று நிகழ்வுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A. 1ம் விஜயபாகு மன்னன் தனது நிர்வாகத் தலைநகராக பொலநறுவையினைத் தெரிவு செய்தல்
B. ஜாவா நாட்டு ஆக்கிரமிப்பாளனான சந்திரபானு இலங்கைமீது படையெடுப்பு நிகழ்த்தல்
C. பண்டுகாபய மன்னன் திட்டமிட்ட அடிப்படையில் அநுராதபுர நகரை அமைத்தல்
D. பராக்கிரமபாகு இளவரசன் பாண்டிய மன்னன் குலசேகரனிடமிருந்த புனித தந்த தாதுவை பெற்றுத் திரும்புதல்
மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை ஒழுங்கு முறைப்படுத்தும் போது வரும் சரியான விடையைத் தெரிவு செய்க.
1) CABD 2) CADB 3) ABCD 4) ADCB

34. தெடிகம கல்வெட்டு தரும் விடயம்
1) பராக்கிரமபாகு மன்னன் தெடிகம யானை விளக்கை அமைத்தமை பற்றிய விடயம்
2) ஐந்தாம்பராக்கிரமபாகு மன்னன் தெடிகமவை தலைநகராக்கொண்டு ஆட்சிசெய்தமை
3) சீன தளபதி செங்ஹோ தெய்வேந்திர முனை ஆலயத்திற்கு வழங்கிய காணிக்கை
4) பஸதுன் கோறளைப் பகுதியில் இடம்பெற்ற சிங்களக் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கியோருக்கு மன்னிப்பு வழங்கியமை

35. தென்கிழக்காசியாவில் வாசனைத் திரவியங்கள் விளையும் தீவாக விளங்கியது.
1) இலங்கை 2) ஜாவா 3) அம்பொய்னா 4) இந்தோனேசியா

36. புராதன காலத்தில் "துனு ஆசார்ய" என்ற பெயரால் அழைக்கப்பட்டோர்
1) குதிரை ஓட்டத்தை கற்பித்தோர்
2) அம்பு எய்தும் கலையைக் கற்பித்தோர்
3) யானை பழக்கும் ஆசிரியர்கள்
4) அறத்தை கற்பித்த பிக்குகள்.

37. இபின் பதூதா வெள்ளை யானை ஒன்றை வைத்திருந்த அல்கோணர் பற்றிக் குறிப்பிடும் பிரதேச ஆட்சியாளரின் ஆட்சிப் பிரதேசம்
1) கோட்டை 2) கம்பளை 3) யாழ்ப்பாணம் 4) குருநாகல்

38. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுள் 1ம் விமல தர்மசூரியனின் ஆட்சிக்காலத்தை சாராத நிகழ்வு.
1) ஒல்லாந்து தூதுவனான வான் ஸ்பில் பேர்ஜன் இலங்கை வரல்
2) தெல்கமுவ விகாரையில் இருந்த தந்ததாதுவை கண்டியில் வைத்து பிரதிஷ்டை செய்தமை
3) லங்காதெனிய. கடலாதெனிய விகாரைகளைப் புனரமைத்தல்
4) கண்ணொருவ யுத்தத்தில் போர்த்துக்கேயரை படுதோல்வியடையச் செய்தல்

39. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிக்கும். அரசின் ஒதுங்கியிருக்கும் கோட்பாடு
1) அரசின் தலையிடாக் கொள்கை 2) தாராண்மை வாதம்
3) பொதுவுடைமை வாதம் 4) ஜனநாயக வாதம்


40. "விண்ணிலிருந்து பொழியும் ஒரு துளி நீரையேனும் மனிதனுக்கு பயன்படாது கடலில் கலக்க விடமாட்டேன்" என்ற கூற்றின்படி செயற்பட்ட மன்னன்.
1) நிஸங்கமல்லன் 2) வசபன்
3) மகாசேனன் 4) மகாபராக்கிரமபாகு

## வரலாறு பகுதி - II நேரம்:- 3 மணித்தியாலம்

### பகுதி I

01.
(அ) - உமக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் வினா
(i) இல் உள்ள எல்லா வரலாற்று இடங்களையும் குறித்துப் பெயரிடுக.
- உலகப் படத்தில் வினா (ii) இல் உள்ள எல்லா வரலாற்று இடங்களையும் குறித்துப் பெயரிடுக.
i. கலாஓயா. பாகியன்கல. ஜம்புகோளப்பட்டினம். பெட்ரிக்கோட்டை. மல்வானை. தேவநகரம். மினிகாகல் கந்த. இரணைமடு. அரிப்பு. மாகம.
ii. கொன்ஸ்தாந்திநோபிள். கல்கத்தா. சுமாத்திரா. வங்கக்கடல். சீனா. ஆங்கிலக் கால்வாய். மத்திய தரைக்கடல். பக்தாத்

(ஆ) i. A,B,C,D எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.
A. "An Historical Relation of the Island Ceylon" எனும் நூலின் ஆசிரியர்.
B. 1ம் இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிக்க உதவிய கண்டிப் பிரதானி.
C. படுகொலைச் சட்டத்தை இயற்றிய முதல் மன்னன்.
D. 1ம் விஜயபாகு மன்னனால் பரிசுகளும். சலுகைகளும் வழங்கப் பெற்ற தண்ட நாயக்க.
தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.



ii. A. படத்தில் காணப்படும் உருவத்தினால் குறிக்கப்படுவோர் யாவர்?
B. இவ் ஓவியம் அமையப்பெற்றுள்ள தேவாலயம் எது?
C. இவ் ஓவியத்தினை வரைந்தவர் யார்?
D. நீர் குறிப்பிட்ட கலைஞரின் ஏனைய ஓவியம் ஒன்றின் பெயரினை எழுதுக?



iii. A. படத்தில் காணப்படும் கட்டடத்தின் பெயரை எழுதுக?
B. அது எந்த நாட்டில் அமைந்துள்ளது?
C. இக்கட்டடத்தில் தங்கியிருந்தவர் யார்?
D. இக்கட்டடத்திலிருந்தவரால் எழுதப்பட்ட ஆவணம் யாரிடம் வழங்கப்பட்டது?

### பகுதி (II)

02.
i. கீழே தரப்பட்டுள்ள A,B,C என்ற எழுத்துக்களால் குறிப்பிடப்படும் நூல்களின் ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
A. இண்டிகா B. நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா
C. பூகோள சாஸ்திரப் பிரவேசம்
ii. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுக்கான கல்வெட்டுக்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
A. களவு. கொலை போன்றவற்றில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகள்.
B. போயா தினங்களில் வியாபாரம் செய்வோரிடமிருந்து எண்ணெய் அறவிடல்.
C. குளங்களில் இருந்து நீர் பெறப்படும் வயல்களில் நெல் தவிர. பாசிப்பயறு விதைத்தல் ஆகாது.
D. தீர்ப்பு மண்டபத்திலிருந்து பெறப்பட்ட அபராதப் பணம். பிரதேச விகாரை பிக்குகளின் தேவையின் பொருட்டு வழங்கல்.
(சித்துள் பவ்வ. மிகிந்தலை. பதுளை தூண். கல்பொத்த. வெஸ்ஸகிரி. வேவல்த்கட்டிய)
iii. இலங்கையின் புராதன இலக்கிய மூலாதாரம் என்ற வகையில் மகாவம்சம் தொடர்பாக
A. மூலநூல்கள்
B. மகாவம்ச சிறப்புக்கள்
என்பவை பற்றி மூன்று விடயங்கள் கொண்டு விளக்குக.
iv. தொல்பொருள் மூலாதாரங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவங்கள் மூன்றினை விளக்குக.

03.
i. A) ரஜமொஹால்
B) வஜ்ரசும்பட்ட
C) அடிக
எனும் பெயர்களால் குறிக்கப் பெறுபவை யாவை என எழுதுக?
ii. A,B,C,D என்ற எழுத்துக்களால் குளம் ஒன்றினது கூறுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அச்செயற்பாடுகளுக்கான குளத்தின் கூறுகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
A. நீர் அலைகளின் மூலம் ஏற்படும் அழுத்தத்தால் அணைக்கட்டு அரிப்புறுவதைத் தடுத்தல்.
B. மழைக்காலத்தில் குளத்தில் சேரும் சேற்றினை அகற்றுதல்.
C. பாரிய நீர்ப்பரப்பைத் தாங்கி நிற்றல்.
D. குளங்களுக்கும் வயல்களுக்கும் நீரைக் கொண்டு செல்லல்.
(கலிங்கல் தொட்டி. ஈரக்கலிங்கல். மடைக்கதவு. கால்வாய். குளக்கட்டு. அலைதாங்கி. உயர் அணை)
iii. இலங்கையின் புராதன கால மக்களிடம் காணப்பட்ட தொழில்நுட்ப அறிவினை அடிப்படையாகக் கொண்டு
A. கட்டடங்களில் செங்கோணம் பேணப்பட்டமை.
B. கட்டடங்களுக்கு அத்திபாரமிடல்
என்பவற்றின் சிறப்புக்களை ஒவ்வொரு எடுத்துக்காட்டுகள் மூலம் விபரிக்குக.
iv. தெடிகம யானை விளக்கின் அமைப்பு முறைகள் மூன்றினை குறிப்பிட்டு. அவ் விளக்கில் அசையா நீர் விஞ்ஞான முறை பிரயோகிக்கப்பட்ட முறையினை விளக்குக.

04.
i. கீழே A,B,C எனும் எழுத்துக்களால் குறிக்கப்பெறும் வரலாற்று இடங்களின் தற்போதைய பெயர்களை எழுதுக.
A. கோகண்ண தித்த
B. கந்துரு கொட
C. நுருபுரம்
ii. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை. அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து எழுதுக.
A. கர்ப்பிணித் தாய்மாரின் தேவைகளுக்காக பிரசவ விடுதிகளை கட்டியமை.
B. பத்தினி தெய்வ கோயில் திறப்புவிழா ஒன்றுக்கு சேர இராச்சியம் சென்றமை.
C. பிராமணர்களின் வழிபாட்டிடமான சொத்திசாலாவை நிறுவல்.
D. இருபது சீன இராஜதந்திரிகள் இலங்கை வந்தமை
(பண்டுகாபயன். 6ம் அக்ரபோதி. உபதிஸ்ஸ. 1ம் கஜபாகு. கனிட்ட திஸ்ஸ. 4ம் காசியப்பன்)
iii. வசப மன்னன் சிறந்த ஆட்சியாளன் எனக்கொள்வதற்கு அவனால் மேற்கொள்ளப்பட்ட
A. சமயப் பணிகள்
B. நீர்ப்பாசனப் பணிகள் இவ்விரண்டு வீதம் விபரிக்குக.
iv. மன்னர்களின் செயற்பாடுகளும் அவர்கள் தோற்றம் தர விரும்பிய விதத்தினையும் அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை மூன்று எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

05.
i. இரண்டாவது நகரமயமாக்க காலகட்டத்தில் பின்வரும் இடங்களை தலைநகராக்கிய மன்னர்களின் பெயர்களை எழுதுக.
(A- கம்பளை B-தம்பதெனியா C- கோட்டை)
ii. A. யாப்பகூவ மலைக்குன்றின் உச்சியில் கோட்டை கட்டி அப்பகுதியை பாதுகாத்தல்
B. சீன தளபதி செங்ஹோ. கைதியாக சீனாவுக்கு கொண்டு செல்லல்
C. பஸ்துன் கோறளைப் பகுதியில் சிங்களக் கிளர்ச்சியை அடக்கல்.
D. மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு புகழ்பெற்ற அம்பக்க முருகன் கோயிலை அமைத்தல்.
மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
(புவனேகபாகு ஆதிபாதன். வீர அழகேஸ்வரன். 3ம் விக்கிரமபாகு. சுப தளபதி. அம்புலுகல குமாரன். போசத் விஜயபாகு. ஜயபாகு)
iii. இரண்டாம் பராக்கிரமபாகுவின் செயற்பாடுகளை
அ) இலக்கிய பணி
ஆ) அரசியல் பணி என்பனவற்றின் அடிப்படையில் இவ்விரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.
iv. பொலநறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

06.
i. A. கோட்டை ஆட்சியாளனான 6ம் விஜயபாகுவைக் கொன்றவன்.
B. சீதாவாக்கை இராச்சியத்திற்கு எதிரான முல்லேரியா போரினை வெற்றி கொண்ட இளவரசன்.
C. போர்த்துக்கேயர் இலங்கை வரும்போது. யாழ்ப்பாண ஆட்சியாளனாக இருந்தவன்.
மேற்கூறப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை எழுதுக.

மிகுதி நாளை வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிவரும் தேர்தல்களின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்

# புதிய தலைமுறைக்கே கூடுதல் முக்கியத்துவம்

## ஜனாதிபதி மைத்திரி வாக்குறுதி

(கொழும்பு)

**இனிமேல் நடைபெறவுள்ள தேர்தல்களின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் புதிய தலைமுறையினருக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**



அவ்வாறே மக்களுக்கு விசுவாசமானதும் பொது மக்களின் இதயத் துடிப்பினைப் புரிந்துகொள்ளக்கூடியதுமான மக்கள்நேயக் கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்பி இனிமேல் நடைபெறவுள்ள தேர்தல்களில் வெற்றிபெறச் செய்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தை நேற்று முன்தினம் பிற்பகல் திறந்து வைத்த போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் தேர்தல்கள் எதிர்வரும் ஆண்டு நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளதுடன் இத் தேர்தல்களைப் போன்றே நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடியவாறு கட்சியைப் பலப்படுத்துவதாகவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

கடந்த ஒருசில தசாப்த காலங்களுக்குள் அரசியல்வாதி தானாகவே தன்னுடைய பிரதிவிம்பத்தை சீர்குலைத்ததன் விளைவாகவே இன்று புதியதோர் அரசியல் கலாசாரத்தின் தேவை எழுந்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, ஒரு சில அரசியல்வாதிகள் அதிகாரத்தைப் பயன்படுத்தி பாரதூரமான குற்றச்செயல்களைப் புரிந்து அவை மறைமுகமாக மேற்கொள்ளப்பட்டவைகளென நினைத்தபோதும் மக்கள் அவற்றை அறிந்து வைத்திருந்தார்களெனத் தெரிவித்தார்.

அரசியலுக்கு வரும் எந்தவொரு நபரும் சுகம் அனுபவிப்பதற்கு எதிர்பார்க்கக்கூடாதெனவும் அவ்வாறு செய்யும் போது அவர்களை மக்கள் நிராகரிப்பார்களெனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி அரசியல்வாதி ஒருபோதும் தனது இஷ்டத்திற்கு பணியாற்றக் கூடாதெனத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காக பாடுபட்ட கோட்டே தொகுதியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இதன் போது ஜனாதிபதி நினைவுச் சின்னங்களை வழங்கி வைத்தார்.

மேல்மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, கோட்டே தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாட்டாளர் ஜனக ரணவக்க உள்ளிட்ட நகர சபை உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர்.(இ-7-10)

## ஆண்டு விழாவுக்கு வராதவர்களுக்கு எதிராக நடவடிக்கை இல்லை-துமிந்த

(கொழும்பு)



குருநாகலில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ளாத பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கட்சியினால் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என, அக் கட்சியின் பொதுச் செயலாளர், அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எது எவ்வாறு இருப்பினும், கட்சியின் ஆண்டு விழாவில் அவர்கள் கலந்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என, சுட்டிக்காட்டிய துமிந்த திஸாநாயக்க, அவ்வாறு வராதவர்களுக்கான தீர்ப்பை வழங்க தகுதியானவர்கள் கட்சியுடன் இணைந்திருக்கும் மக்களே எனவும் தெரிவித்தார்.


மேலும், மலேசியாவில் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் தாக்கப்பட்டமை மற்றும் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் போன்றவை தொடர்பில் கண்டனம் தெரிவிப்பதாகவும் துமிந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 829


சங்கர்





ரொகான்




அமல்ராஜ்




விமல்




ரஜீவ்




சங்கர்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆட்டுக்கார ஆண்டியப்பன்



...இப்போது நீ வளர்த்து வரும் ராமுதான் அதற்கு ஏற்றது! அதை இன்று மாலை ஓட்டிக் கொண்டு கங்காபுரம் போகப் போகிறேன். ஏனெனில், அதிகாலையில் கிடா வெட்டி பூஜை போடுவாராம்! நிறையப் பணம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்" என்றதும் லட்சுமி ஆயிரம் தேள்கள் கொட்டியது போல் துடித்தாள். "ஐயோ! வேணடாம்! நான் செல்லமாக வளர்த்த ஆட்டுக்குட்டி அது!" என்று லட்சுமி அலறித் துடித்தும், ஆண்டியப்பன் கேட்கவில்லை. அன்று இருட்டும் நேரத்தில், ராமுவைத் தரதரவென இழுத்துக் கொண்டு போய் விட்டான். லட்சுமி அழுது அழுது சிவந்த கண்களுடன் தன் ராமுவை எப்படியாவது காப்பாற்றுமாறு கடவுளிடம் வேண்டிக் கொண்டாள்.

ஆண்டியப்பன் இரவு நேரத்தில் ஆட்டை இழுத்துக் கொண்டு கங்காபுரம் செல்லுகையில் திடீரென மின்னல் மின்னி இடி இடித்து மழை பெய்யத் தொடங்கியது. மழையில் நனையாமல் இருப்பதற்காக ஆண்டியப்பன் ஆட்டை இழுத்துக்கொண்டு ஓட முயற்சிக் கையில், இருட்டில் கண் தெரியாமல் கைபபிடிச் சுவரற்ற ஒரு கிணற்றுக்குள் விழுந்துவிட்டான். நல்ல வேளையாக, கிணற்றினுள் ஒரு மரத்தினுடைய உறுதியான வேர் நீட்டிக் கொண்டிருக்க அதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நீரில மூழ்காமல் தப்பினான். "காப்பாற்றுங்கள்!" என்று கிணற்றுக்கு உள்ளிருந்தபடியே பல முறைகத்தியும், அவனுடைய குரல் வெளியே சிறிதும் கேட்கவில்லை. ஆனால் தன் எசமானின் நிலையை உணர்ந்த ராமு "மே" "மே" என்று உரக்கக் கத்திக் கொண்டே இரவு முழுவதும் அங்குமிங்கும் திரிந்தது.

பொழுது புலரும் நேரத்தில் ராமுவின் குரலைக் கேட்ட சில வழிப்போக்கர்கள் நின்று கவனிக்க, ராமு வேகமாக கிணற்றுக் கருகே ஓடி மீண்டும் கத்தியது. ஆட்டின் குட்டிதான் கிணற்றினுள் விழுந்து விட்டது என்று நினைத்து வந்தவர்கள், உள்ளே கத்தக்கூட சத்தமின்றி சோர்ந்திருந்த ஆண்டியப்பனைக் கண்டு அவனை அங்கிருந்து வெளியே தூக்கி வந்தனர்.

வெளியே வந்ததும் தன்னைக் காப்பாற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்தபின், ஆணடியப்பன் ராமுவை அன்புடன் தழுவிக்கொண்டு கண்ணீர் வடித்தான. உடனே, ராமுவை அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

இந்நேரம் ராமு பலியிடப் பட்டிருக்கும் என்று எண்ணி அழுதுகொண்டிருந்த லட்சுமிக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. "லட சுமி! நான் என் முடிவை மாறறிக் கொணடு விட்டேன். உனனுடைய ராமுவை உன்னிடமே அழைத்து வந்து விட்டேன்.

அதுமட்டு மல்ல! இந்தத் தொழிலுக்கு இன்றுடன் ஒரு முழுக்குப் போடப் போகிறேன். நீ சொன்னது போல் பசுமாடு வாங்கி பால் வியாபாரம செய்வோம்!" என்று கூறியதை அவளால் நம்பவே முடியவிலலை. அவனுடைய முடிவிற்குக் காரணம் என்ன என்பது, பிறகு ஆண்டியப்பன் விளக்கிய பிறகே அவளுக்குப் புரிந்தது.

(முற்றும்)

## 09.2016 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 70 - டைட்டஸ் தலைமையிலான ரோமப் பேரரசின் படையினர் ஜெருசலேம் நகரைக் கைப்பற்றினர்.
- 1514 - லித்துவேனியா, மற்றும் போலந்துப் படைகள் ஓர்ஷா என்னுமிடத்தில் ரஷ்யாவைத் தோற்கடித்தன.
- 1655 - சுவீடனின் காரெல் பத்தாம் குஸ்டாவ் மன்னன் போலந்தின் வார்சா நகரைப் பிடித்தான்.
- 1727 - இங்கிலாந்து, கேம்பிறிட்ஜ்ஷயர் என்னுமிடத்தில் குழந்தைகள் பொம்மைக் களியாட்ட விழா ஒன்றில் இடம்பெற்ற பெருந்தீ விபத்தில் 78 பேர் கொல்லப் பட்டனர். கொல்லப்பட்ட பெரும்பாலானோர் குழந்தைகளாவர்.
- 1796 - பிரெஞ்சுப் படையினர் ஆஸ்திரியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1831 - 4ம் வில்லியம் பிரித்தானியாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1888 - லண்டனில் கிழிப்பர் ஜேக்கினால் கொலலப்பட்ட இரண்டாவது நபரான அன்னி சப்மனின் உடல் கண்டெடுக்கப் பட்டது.
- 1900 - டெக்சாசை சூறாவளி கால்வெஸ்டன் தாககியதில் 8,000 பேர் கொல்லப்படடனர்.
- 1923 - கலிபோர்னியாவில் 7 அமெரிக்கக் கடற்படைக்கப்பல்கள் மூழ்கின.
- 1926 - நாடுகளின் கூட்டமைப்பில் செருமனி சேர்ந்தது.
- 1930 - ஸ்கொட்ச் நாடா முதன் முதலாக விற்பனைக்கு விடப்பட்டது.
- 1934 - நியூ ஜேர்சிக் கரையில் பயணிகள் கப்பல் தீப்பற்றி எரிந்ததில் 135 பேர் கொல்லப் பட்டனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: லெனின்கிராட் நகரை ஜேர்மனி முற்றுகையிட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி போரில் சரணடைந்ததை அமெரிக்கத் தளபதி டுவைட் டி. ஐசனாவர் அறிவித்தார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: வி2 ராக்கெட் மூலம் முதல் தடவையாக லண்டன் நகரம் செருமனியினால் தாக்கப்பட்டது.
- 1945 - சோவியத் படைகள் வட கொரியாவை ஒரு மாதத்திற்கு முன்னர் கைப்பற்றியமைக்குப் பதிலடியாக அமெரிக்கப் படைகள் தென் கொரியாவில் தரையிறங்கின.
- 1951 - பசிபிக் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு 48 நாடுகள் சான் பிரான் சிஸ்கோவில் ஜப்பானுடன் அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்தின.
- 1959 - ஆசியத் தொழில்நுட்பக் கழகம் பாங்கொக் நகரில் நிறுவப்பட்டது.
- 1991 - யூகொஸ்லாவியாவிடம் இருந்து மசடோனியக் குடியரசு விடுதலை அடைந்தது.
- 2006 - ஆப்கானிஸ்தான், காபூலில் அமெரிக்கத் தூதரகத்தின் முன் நடத்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 2 அமெரிக்க வீரர்கள் உள்பட 16 பேர் கொல்லப் பட்டனர்.
- 2006 - இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் மாலேகான் நகரில் மசூதி, மற்றும் சந்தைப் பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் 40 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

**பிறப்புக்கள்**

- கி.மு.20/19 - கன்னி மரியா, இயேசு கிறிஸ்துவின் தாய்.
- 1913 - ஆர். மகாதேவன், தமிழக நகைச் சுவை எழுத்தாளர். (இ. 1957)
- 1933 - ஆஷா போஸ்லே, இந்தித் திரைப்படப் பின்னணிப் பாடகி.

**இறப்புகள்**

- 1980 - வில்லார்ட் ஃபிராங்க் லிப்பி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் . (பி. 1908)
- 1995 - நா. முத்தையா, ஆத்மஜோதி இதழாசிரியர். (பி. 1918)
- 2008 - குன்னக்குடி வைத்தியநாதன், வயலின் இசைக்கலைஞர் . (பி. 1935)

**சிறப்பு நாள்**

- மசடோனியக் குடியரசு - விடுதலை நாள். (1991)
- உலக எழுத்தறிவு நாள்.
- அன்னை வேளாங்கண்ணி தேர்த்திருவிழா.
- இயேசு கிறிஸ்துவின் அன்னை மரியாள் பிறப்பு.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 80 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 95 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 70 | 80 | 70 | 120 | 100 |
| தக்காளி | 60 | 50 | 30 | 60 | 40 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 80 | 100 | 90 | 60 | 80 |
| கோவா | 80 | 50 | 50 | 80 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 50 | 80 | 120 | 120 | 120 | 100 |
| பூசணி | 50 | 20 | 20 | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 20 | 20 | 50 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 100 | 60 | 60 | 100 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 100 | 60 | 160 | 70 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 30 | 100 | 60 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | — | 120 | — | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 30 | 120 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 80 | 100 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 20 | 30 | 50 | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 80 | 100 | 90 | 100 | 80 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 100 | 160 | 110 | 160 | 150 |
| போஞ்சி | 180 | 200 | 150 | 160 | 180 | 200 | 180 |
| கத்தரிதம்பள்ள | 40 | 20 | 30 | 50 | 50 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 10 | 20 | 30 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 280 | 300 | 200 | 300 | 200 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-30 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 120 | — | 100 | 200 | 90 | 120 | 120 |
| முள்ளங்கி | 60 | — | 25 | 60 | 40 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 15 | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 20 | 30 | — | 30 | 80 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ஸ்தானிகர் மீதான தாக்குதலின் போது மகிந்த ஏன் மௌனமாக இருந்தார்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க கேள்வி



உயர்ஸ்தானிகர் மீது தாக்குதல் நடத்திய சந்தர்ப்பத்தில் அவர் மௌனம் சாதித்ததை அவர் மறந்துவிடக் கூடாது என்று திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மலேசியா சென்றிருந்த போது அவரை இலக்கு வைத்ததாக குறிப்பிடப்படும் கும்பல் ஒன்று அந்நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அன்சார் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இதை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அன்சாரின் மீதான தாக்குதல் எமது நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அவரின் ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்த முன்னாள் எம்.பி. ஒருவர் முன்னாள் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மீது தாக்குதல் நடத்திய சந்தர்ப்பத்தில் அவர் மௌனம் சாதித்ததை அவர் மறந்துவிடக் கூடாது.



மலேசியாவுக்கான இலங்கை தூதுவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இலங்கை மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனால் அவரின் ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்த முன்னாள் எம்.பி. ஒருவர் முன்னாள் பிரித்தானிய

எவ்வாறாயினும் மலேசிய அரசாங்கம் தற்போது தாக்குதல் நடத்திய சந்தேக நபர்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. இது தொடர்பிலான உண்மை தன்மை விரைவில் வெளிவரும் என்றார். (இ-7-10)

# இலங்கையை கண்ணிவெடிகள் அற்ற நாடாக மாற்றுவதற்கு ஜப்பான் உதவி

இலங்கையை கண்ணிவெடிகள் அற்ற நாடாக மாற்ற ஜப்பான்பூரண ஒத்துழைப்பை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 2020 ஆம் ஆண்டளவில் கண்ணிவெடிகள் முற்றாக இலங்கையில் இருந்து அப்புறப்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு கடந்த 2003 ஆம் ஆண்டு தொடக்கம் ஜப்பான் இலங்கைக்கு உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த உதவியானது எதிர்வரும் வருடங்களிலும் வழங்கப்படவுள்ளதாகவும், இதற்காக 28.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி ஜப்பானால் வழங்கப்பட்டுள்ளது எனவும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் கெனிச் சுகனுமோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள ஜப்பான் தூதுவராலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது வடக்கில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக 864 இலட்சங்கள் நிதியுதவி வழங்குவதற்கு ஜப்பான் இணங்கியுள்ளதோடு, அதற்கான ஒப்பந்தமானது ஜப்பானின் தூதுவர் கெனிச் சுகனுமோ மற்றும் ஹலோ ட்ரஸ்ட் அமைப்பின் நிர்வாகி எட்வட் ரொபட் சைபிரட் ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஜப்பானின் நிதியுதவியுடன் இதுவரை 26 ஹெக்டயருக்கு அதிகமான நிலப்பரப்புகளில் கண்ணி வெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளதாக ஹலோ ட்ரஸ்ட் அமைப்பின் நிர்வாகி எட்வர்ட் ரொபட் தெரிவித்தார்.

குறித்த பிரதேசங்களில் இருந்து 8ஆயிரத்து 183 கண்ணி வெடிகள் மற்றும் வெடி பொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் 800 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புடன் இங்கு மீள்குடியேற அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகவும் எட்வர்ட் ரொபட் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

# பாடசாலை போக்குவரத்து சேவைகளுக்கு கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

பாடசாலை போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் வாகனங்களின் கட்டணங்களை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

10 வீதமாக இந்தக் கட்டணங்களை அதிகரிக்குமாறு அனைத்து இலங்கை பாடசாலை போக்குவரத்து சேவை சங்கத்தின் செயலாளர் கித்சிறி அமரசிங்க தெரிவித்துள்ளார்.

வாகன உரிமக் கட்டணம், எரிபொருள், புகை பரிசோதிப்பதற்கான கட்டணம் உள்ளிட்டவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பாடசாலை போக்குவரத்து சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலை போக்குவரத்து சேவைகளுக்காக அரசினால் எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படுவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

# இலங்கையில் அமைக்கப்படும் சீனாவின் முதலாவது விகாரை

இலங்கையில் சீனாவின் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

பொலனறுவை மாவட்டத்தின் பொத்துஹெர பிரதேசத்திலேயே 3 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது.

சீன பௌத்த குரல் மத்திய நிலையம் என்ற பெயரில் குறித்த விகாரை அமைக்கப்பட்டு வருவதுடன், இதன் விகாராதிபதியாக கின்னலியே சீலவன்ஸ தேரர் பொறுப்பாக இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது நாடு அழகான நாடு என்பதால் சீன மக்கள் சிறந்தவற்றை எமது நாட்டுக்கு கொண்டு வந்து வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

குறித்த விகாரையும் சீன [illegible] அமைக்கப்பட்டு வருவதுடன், இதற்காக யாரும் பயப்பட தேவையில்லை என்றும், எம்முடைய பௌத்த கலாசாரத்தை பாதுகாக்கும் நோக்குடனே இவை அமைக்கப்பட்டு வருவதாக இந்த விகாரையின் விகாராதிபதி [illegible] தேரர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## செய்தித்துளிகள்

### மகிந்தவிற்குப் பாதிப்பு ஏற்பட இடமளிக்கமாட்டோம் - ரணில்

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படுவதற்கு இடமளிக்கப்போவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும், அவருடைய வாழ்க்கையை பாதுகாப்பது அரசின் கடமை, பொறுப்பு எனவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

### 9 மாத குழந்தையை 2000 ரூபாவிற்கு விற்பனை செய்ய முயன்ற தாய் கைது

9 மாத குழந்தையை விற்க முயன்ற தாய் ஒருவர் கண்டி பொலிஸ் பிரிவின் பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த பெண் வெளிநாடொன்றில் தொழில் புரிந்து வந்த நிலையில் அங்கேயே குறித்த குழந்தையையும் பிரசவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்பே இந்தப் பெண் குழந்தையுடன் இலங்கை வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆட்டோச் சாரதி ஒருவர் ஊடாக 2000 ரூபாவிற்கு குறித்த குழந்தையை விற்கும் போதே குறித்த பெண்ணும், ஆட்டோச் சாரதியும் கட்டுகஸ்தோட்ட பொலிஸ் பிரிவில் வைத்து நேற்று முன் தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர். (இ-7-10)

### கல்லெறிவோருக்கு எச்சரிக்கை

புகையிரதங்களின் மீது கல்லெறிந்து பயணிகளின் வாழ்க்கையோடு விளையாடும் நபர்களுக்கு ஆகக் கூடிய தண்டனை வழங்கப்படவுள்ளதாக புகையிரத பொது முகாமையாளர் பீ.ஏ.டீ.ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த கல்லெறித் தாக்குதல் மூலம் அண்மைக் காலங்களில் பயணி ஒருவர் பலியாகியுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல் மேற்கொள்பவர்களை பொலிஸார் மற்றும் புகையிரத அதிகாரிகளால் மட்டும் அடையாளம் காண முடியாது, இவர்களை கைது செய்ய பொது மக்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

### பாடல் இறுவெட்டு வெளியீடு

சுதர்சன் இரட்ணம் இயக்கிய எனக்கானவள் பாடல் வெளியீடு இன்று வியாழக்கிழமை யாழ்.செல்லா திரை அரங்கில் மாலை 4 மணிக்கு இடம்பெறும். இப் பாடல் இறுவெட்டில் சிந்து மற்றும் காசினியும் நடிகர்களாக பங்கேற்றுள்ளனர். பாடலுக்கான இசையினை பிரசாத்தும், பாடல்வரிகளை ரவிகஜனும் வழங்க பாடலை அருள்தாசன் பாடி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மாகாண மட்டத்திற்கு தெரிவானது



மாணவர்களிடையே கணித அறிவினை வளர்க்கும் பொருட்டு கல்வி அமைச்சினால் நடத்தப்படுகின்ற கணித நாடகப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக அணி கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு ஆகிய இரு பிரிவுகளிலும் வலய மட்டத்தில் முதல் இடத்தினை பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கனிஷ்ட பிரிவில் "நேரம்" எனும் நாடகத்தில் ஜெ.ஜெயகபிலன், கு.கௌதம், பூ.திலக்சன், ம.தினேஸ், க.சதுர்யன், சி.பிரசித், ப.பிரவீன், கு.சாரண்யன், சு.பிரதீபன், ரா.பானுஜன், ர.தவரூபன், லோ.லோகிதன், கு.குலக்சன், அ.துவாரகன் (பாடகர்), எஸ்.டெனிஸ் (டொல்கி) ஆகியோர் பங்குபற்றினர்.

சிரேஷ்ட பிரிவில் "சாயூவர்மன்" எனும் நாடகத்தில் யே.சானுஜன், தி.தனுஜன், ச.குபேரன், த.டிபேர்டன், ஜீ.திவ்வியன், யே.யதுசன், சி.சிவானுஜன், எஸ்.கிதுர்சன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இசையினை கல்லூரியின் கணித ஆசிரியர் திருமதி கிருபா மேரி - வசீகரன், எண்ணக்கருவாக்கம் மற்றும் ஆலோசனை கணித ஆசிரியர் கு.பஞ்சலிங்கம், யே.சானுஜன், காட்சியமைப்பு தி.திஸ்னுகன், எஸ்.அனோஜன், ஒப்பனை எஸ்.ரி. அருள்குமரன். யே.சானுஜன். தி.தனுஜன் உதவி நெறியாள்கை ஜெ.ஜெயகபிலன், தி.திஸ்னுகன், பிரதியாக்கம்-நெறியாள்கை நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி. அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டனர்.(இ-7-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காவிரியிலிருந்து தமிழகத்துக்கு 15 ஆயிரம் கன அடி நீர் திறப்பு

## கர்நாடக விவசாயிகளின் போராட்டத்தால் எல்லையில் பதற்றம்







உச்ச நீதிமன்றத்தின் ஆணைக் கிணாங்க தமிழகத்துக்கு கே.ஆர். எஸ். அணையில் இருந்து 10 ஆயிரம் கன அடி தண்ணீர், கபினி அணையில் இருந்து 5 ஆயிரம் கன அடி தண்ணீர் என மொத்தம் 15ஆயிரம் கன அடி தண்ணீரை கர்நாடக அரசு திறந்து விட்டுள்ளது. நேற்று நள்ளிரவு 12 மணியளவில் தண்ணர் திறந்து விடப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கர்நாடக விவசாயிகள் சங்கத்தினரால் மாநிலம் முழுவதும் பரவலாக போராட்டம் நடைபெற்று வருகிறது.

மைசூர், மாண்டியா பகுதியில் விவசாயிகள் வீதி மறியலில் ஈடுபட்டுள்ளனர். வீதியோரங்களில் பந்தலிட்டு சமைத்து வீதியில் அமர்ந்து சாப்பிட்டு நூதன போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கே.ஆர்.எஸ். அணைப் பகுதியில் பிரம்மாண்ட பேரணிக்கு கன்னட ரக்ஷன வேதிக, ஜெய் கர்நாடகா சங்கங்கள் ஏற்பாடு செய்துள்ளன. போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் கைது செய்யப்பட்டனர்.

ஒசூரில் தமிழக - கேரள எல்லையில் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளன. தமிழகத்திலிருந்து செல்லும் பேருந்துகள் எல்லையில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கர்நாடக பதிவு எண் கொண்ட வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. அதே போல் கர்நாடகாவிலிருந்தும் தமிழகத்துக்குள் பேருந்துகள், வாகனங்கள் அனுமதிக்கப்படவில்லை. போக்குவரத்து முடங்கியதால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

காவிரியில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டதற்குமாநில அரசே காரணம் எனக்கூறி பா.ஜ.க., மதச்சார்பற்ற ஜனதாதள கட்சியினர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். முதல்வர் சித்தராமையா உருவ பொம்மையை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கர்நாடக பா.ஜ.க. பிரமுகரும் மேலவை எதிர்க்கட்சித் தலைவருமான ஈஸ்வரப்பா கூறுமபோது, "கர்நாடக அரசு காவிரி விவகாரத்தை திறமையாக கையாளவில்லை. இந்த வழக்கில் அரசு சார்பில் ஆஜரான சட்டத்தரணி பாலி எஸ் நாரிமனும் சிறப்பாக செயறபடவில்லை. உச்ச நீதிமன்றத்தில் யாருடைய ஒப்புதலைப் பெற்று அவர் 10 ஆயிரம் கன அடி தண்ணீர் தமிழகத்துக்கு திறந்து விடுவதாக ஒப்புதல் அளித்தார என்பது தெரியவில்லை. காவிரி வழக்கில் கர்நாடகா சார்பில் இனியும் நாரிமன் வாதிட அனுமதிக்கக் கூடாது" என்றார்.

கர்நாடகாவில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளான சிவாஜி நகர், விவேக் நகர், அல்சூர், கிழக்கு பெங்களூர் முழுவதும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாண்டியா, மைசூர் திரையரங்குகளில் தமிழ்ப்படங்கள் திரையிடல் நிறுத்தப்பட்டன. பெங்களூர் நகருக்குள் மட்டும் ஓரிரண்டு அரங்குகளில் தமிழ்ப்படஙகள் திரையிடப்பட்டுளளன. அதுவும் இன்றைக்கு நிறுத்தப்படும் எனத் தெரிகிறது.

### முதல்வர், உள்துறை அமைச்சர் வேண்டுகோள்

மாநிலம் முழுவதும் அரசுக்கு எதிராக போராட்டங்கள் வலுத்து வரும் நிலையில், காவிரி விவகாரத்தில் பொதுமக்கள், விவசாயிகள் அமைதி காக்க வேண்டும் என முதல்வர் சித்தராமையா கோரிக்கை விடுத்துள்ளார். பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கக்கூடாது, மக்கள் வன்முறையை விடுத்து அமைதி காக்க வேண்டும் என மாநில உள்துறை அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## ஸ்ரீதர் இயக்கத்தில் ஜெமினிகணேசன் 246

எஸ்.எஸ்.வாசன் இயக்கிய இப்படத்தில் ஜெமினி கணேசனின் நடிப்பு சிறப்பாக அமைந்தது.

மிகப்பெரிய வெற்றிப்படமான வஞ்சிக்கோட்டை வாலிபன் இந்தியில் ராஜ்திலக் என்ற பெயரில் படமாக்கப்பட்டது. இந்திப்படத்திலும் ஜெமினிகணேசன் தான் ஹீரோ.

### கல்யாணப்பரிசு

09-04-1959இல் வெளிவந்த கல்யாணப்பரிசு தமிழ்த் திரை உலகில் திருப்புமுனை ஏற்படுத்திய படம். ஸ்ரீதர் இயக்கிய முதல் படம்.

முக்கோண காதல் கதையை எதிர்பாராத திருப்பங்களுடனும் இயல்பான வசனங்களுடனும் உருவாக்கிய ஸ்ரீதர் அருமையான முறையில் படமாக்கியிருந்தார். வின்சென்ட்டின் ஒளிப்பதிவு உயர்தரமாக இருந்தது.

உயிருக்கு உயிராக காதலித்து பிறகு சந்தர்ப்ப சூழ்நிலையால் காதலை தியாகம் செய்யும் ஜோடியாக ஜெமினிகணேசனும் சரோஜா தேவியும் இயல்பாக நடித்து ரசிகர்களைக் கவர்ந்தனர்.

ஏ.எம். ராஜா முதன் முதலாக இசை அமைத்திருந்தார். கருத்தாழம் மிக்க பாடல்களை பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் எழுதியிருந்தார்.

கல்யாணப்பரிசு வெள்ளி விழாப்படம் மட்டுமல்ல தமிழ்த்திரை உலகத்தில் திருப்புமுனை ஏற்படுத்திய படம்.

இந்தப் படத்தின் மூலம் ஸ்ரீதர் சகாப்தம் தொடங்கியது என்று கூறலாம்.

### கட்டபொம்மன்

பத்மினி பிக்சர்ஸ் தயாரித்த வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில் வெள்ளையத் தேவனாக ஜெமினி நடித்தார்.

முதலில் இந்த வேடத்தில் எஸ்.எஸ்.ராஜேந்திரன் நடிப்பதாக இருந்தது. சிவகங்கைச் சீமையில் நடித்துக் கொண்டிருந்த எஸ்.எஸ்.ஆர்., கட்டபொம்மனில் நடிக்க இயலாமல் போனதால் ஜெமினிக்கு அழைப்பு வந்தது.

என்னால் நடிக்க இயலவில்லை என்று எஸ்.எஸ். ராஜேந்திரனிடம் கடிதம் வாங்கி வந்ததால் தான் நடிக்க முடியும் என்று இயக்குநர் பி.ஆர்.பந்துலுவிடம் கூறிவிட்டார் ஜெமினி. அப்படி கடிதம் வாங்கிக்கொண்டு வந்த பிறகு தான் நடிக்க சம்மதித்தார்.

அப்போது சாவித்திரி நிறைமாத கர்ப்பிணி. அவரை விட்டு விட்டு செல்ல ஜெமினிக்கு மனம் இல்லை. எனி



புது வீட்டு கிரகப்பிரவேசத்தின்போது, மனைவி பாப்ஜியுடன் ஜெமினிகணேசன்.

னும் கட்டபொம்மனில் நடித்தே தீர வேண்டும் என்று சிவாஜிகணேசனும் பி.ஆர். பந்துலுவும் வற்புறுத்திக் கூறியதால் சாவித்திரியை கவனித்துக்கொள்ள தகுந்த ஏற்பாடுகளை செய்து விட்டு கட்டபொம்மன் படப்பிடிப்புக்காக ஜெய்ப்பூருக்கு சென்றார். தினமும் சென்னைக்கு போன் செய்து சாவித்திரியுடன் பேசி வந்தார்.

ஆனால் படப்பிடிப்பு முடிந்து ஜெமினிகணேசன் சென்னைக்கு திரும்பிய பிறகுதான் சாவித்திரிக்கு குழந்தை (விஜய சாமுண்டீஸ்வரி) பிறந்தது.

நடிகை புஷ்பவல்லியின் மகளும் இந்திப் பட உலகின் முன்னணி நடிகையுமான ரேகா, ஜெமினிகணேசன் தான் என் தந்தை என்று அறிவித்து பட உலகில் பெரும் பரபரப்பை உண்டாக்கினார்.

புஷ்பவல்லி பலதெலுங்குப் படங்களில் நடித்துப் புகழ் பெற்றவர். பின்னர் 1947இல் ஜெமினியின் மிஸ் மாலினியின் கதாநாயகியாக தமிழுக்கு அறிமுகமானார். சக்ராதி, சம்சாரம் முதலான ஜெமினி படங்களில் நடித்து புகழ் பெற்றார்.

ஜெமினி ஸ்ரூடியோவில் நட்சத்திரங்களை தேர்வு செய்யும் அதிகாரியாகப் பணியாற்றிய ஜெமினிகணேசன் மிஸ்மாலினி படத்தின் மூலம் தான் நடிகராக அறிமுகமானார்.

### ரேகா

புஷ்பவல்லியின் மகளான ரேகா இந்திப்பட உலகில் புகுந்து சில படங்களில் நடித்தார். கவர்ச்சி கலந்த வேடங்களில் புகழ் பெற்றார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சியவர்க்கு சத மரணம். அஞ்சாத நெஞ்சத்து ஆடவர்க்கு ஒரு மரணம். உலகில் துஞ்சுவர் என்ற றிந்தும் சாதலுக்கு நடுங்கும் துன்மதியாளரைக் கண்டால் புன்னகை செய்வன்யான். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எதிரியும் பாராட்டக்கூடிய தலைவன் தமிழனாகவே இருந்தான்

முற்றத்து மல்லிகைக்கு வாசமில்லை என்றொரு பழமொழி தமிழ் மொழியில் உண்டு. நம்மிடம் இருக்கக் கூடிய திறமைகளை நாம் தெரிந்து வைத்திருப்பதில்லை. அந்தத் திறமையை நாம் உரக்கச் சொல்வதுமில்லை.

ஆனால் திறமைகள் ஒரு போதும் மழுங்கப் போவதில்லை என்பதுதான் உண்மை.

அந்தவகையில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் ஒரு பெரும் சிறந்த – ஒழுக்கமான – கண்ணியமான தலைவன் என்று இராணுவ மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன புகழாரம் சூட்டியுள்ளார்.

இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் கமால் குணரட்ன தனது சேவையின் சிறப்புப்பற்றியோ, அல்லது விடுதலைப் புலிகளை தோற்கடித்த பெருமை பற்றியோ கூறவில்லை.

மாறாக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு பெரும் வீரத்தலைவன் என்று புகழாரம் சூட்டினார் எனில் அது, அவரின் இதயத்திலிருந்து எழுந்த உண்மையான வார்த்தை என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

ஒழுக்கமான – நேர்மையான ஆளுமைமிக்க தலைவன் பிரபாகரன் என்று அவரை எதிர்த்துப் போராடிய இராணுவ அதிகாரி ஒருவர் கூறுவது என்பது இந்த உலகில் எவருக்கும் கிடைக்காத புகழும் பெருமையும் எனலாம்.

ஆக, எதிரிகூட புகழாரம் சூடக்கூடிய தலைவன் தமிழனாகவே இருந்தான் என்றால் அது இந்த உலகம் இருக்கும்வரை எவரும் அழிக்க முடியாத – எம் இனத்திற்கான மதிப்புயர்ந்த சொத்து என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தோல்வி, வெற்றி என்பது வேறுவிடயம். போர் நெறிமுறைக்கு மாறாக – உலகில் தடைசெய்யப்பட்ட நச்சுக் குண்டுகளை வீசி, உலக நாடுகளின் உதவியைப் பெற்று ஒரு போராட்ட அமைப்பை தோற்கடிப்பதென்பது சாத்தியப் படக்கூடியதே.

ஆனால், அந்தப் போராட்ட அமைப்பை முன்னெடுத்த தலைவன் எப்பேறபட்டவன் என்பதை அவன்சார்ந்த இன மக்கள் புகழ்ந்துரைப்பதைவிட எதிரி தரப்பில் இருக்கக் கூடிய இராணுவ அதிகாரி புகழ்வதென்பது வித்தியாசமானது.

இது தமிழினத்திற்கு ஏற்பட்ட போர்த் தோல்விகளை உடைத்தெறிந்து ஒரு விடுதலை போராட்டத்தின் தலைவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான பாடமாக உலகிற்கு தரப்படுகிறது.

ஒரு தலைவனின் வாக்குப்பலம், ஒழுக்கம், கட்டுக்கோப்பு என்பன எதிரியால் புகழப்படுகிறது எனும் போது, ஒரு தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பது உலகிற்கு அடையாளப்படுத்தப்படுகிறது என்பதே உண்மை.

அந்தவகையில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உலகிற்சிறந்த தலைவனாக எதிரிகளால் கூட அடையாளப்படுத்தப்படுகிறார் எனும் போது,

அந்த உன்னதமான – உதாரணத்துக்குரிய தலைவன் எம் தமிழனாகவே இருந்தான் என்ற செய்தி எங்கள் நெஞ்சை உயர்த்தச் செய்கிறது.

ஓ உலகமே! தமிழினம் துடிதுடித்தபோது நீ பார்த்து நின்றாய். ஆனால் உன்னதமான தலைவன் யார் என்பதை இப்போது நீ கண்டுகொண்டாயா என்று கேட்கத் துடிக்கிறது.

கூடவே பிரபாகரனின் பெயரைச் சொன்னாலே தமிழர்களை கைது செய்த பேரினவாத ஆட்சியாளர்கள் நாணித் தலைகுனியும் வகையில் இராணுவ அதிகாரி ஒருவர், தலைவர் பிரபாகரனை மிகப் பெருந் தலைவனாக புகழ்ந்துரைத்துள்ளார் என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கதாகும்.

# கல்வி அமைச்சரின் அறிவிப்பை மறுபரிசீலனை செய்யவேண்டும்

## தொண்டராசிரியர்கள் வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை

வடக்கு மாகாண தொண்டராசிரியர்கள் உள்ளீர்ப்பு பரீட்சை மூலமே நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கப்படுவார்கள் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கூறியுள்ளதனை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சரிடம் தொண்டராசியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அலுவலகத்தில்.முதலமைச்சரினை சந்தித்த இருபதுக்கு மேற்பட்ட தொண்டராசிரியர்கள் தமது கோரிக்கைகளை கடிதம் மூலம் முதலமைச்சரிடம் முன்வைத்துள்ளனர். அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்ப்ட்டுள்ளதாவது.

தொண்டராசிரியர்களாகிய நாம் பலவருடங்களாக எவ்வித கொடுப்பனவும் இன்றி பணியாற்றி வருகின்றோம்.

2011, 2013 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நேர்முகத்தேர்வில் நாம் பங்கு பற்றிய போதிலும் அரசியல் பழிவாங்கல்களால் எமது நியமனம் நிராகரிக்கப்பட்டுள்ளமை வேதனையளிக்கின்றது.

நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் நீண்டகாலமாக எமது மாணவர்களுக்காக கடமையாற்றி எமது நிரந்தர நியமனம் தொடர்பில் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

நாம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கடந்த ஏப்ரல் மாதம் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு நிரந்தர நியமனத்திற்காக எமது பெயர் பரிந்துரை செய்யப்பட்டது. எனினும் இதுவரை எந்த நியமனமும் வழங்கப்படவில்லை. 01.08.2016 அன்று ஆளுநர் செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது. இவ்வருட இறுதிக்குள் நிரந்தர நியமனம் பெற்றுத் தருவதாக உறுதியளிக்கப்பட்டது.

எனினும்வடக்குமாகாண தொண்டர் ஆசிரியர்கள் உள்ளீர்ப்பு பரீட்சை மூலமே நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கப்படுவார்கள் என வடக்கு கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளமை எமக்கு வேதனை அளிக்கின்றது. எம்மோடு, 2013 ஆம் ஆண்டு பணியாற்றியவர்கள் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியையும் முடித்துள்ள நிலையில் எமக்கு மட்டும் பரீட்சை நடத்துவது எந்த வகையில் நியாயமானது?

பரீட்சை வைப்பது எமது நியமனத்தை கேள்விக்குள்ளாக்குவதோடு, எமது தகைமையையும் சந்தேகிப்பதாகவே நாம் கருதுகின்றோம். தொண்டர் ஆசிரியர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக இருந்தால், 2010 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதிகளில் பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாக இணைக்கப்பட்டுள்ளவர்களுக்கு நியமனம் வழங்க முடியும் என கல்வி அமைச்சின் செயலாளர் கூறியதை நினைவூட்டுகின்றோம்.

எனவே தொண்டர் ஆசிரியர்களின் உண்மைத் தன்மையை நேர்முகத்தேர்வின் மூலம் உறுதிப்படுத்தி நியமனத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# யாழில் அமெரிக்க பிரதித்தூதுவர் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்காவின் பிரதி தூதுவர் ராபர்ட் ஹில்டன் யாழ்ப்பாணம் வருகைதந்து பல்வேறு முக்கிய சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ளார். நேற்று முன்தினம் வருகை தந்த பிரதி தூதுவர், முன்னதாக வலி. வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு தற்போது மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள இடங்களையும், அவர்கள் தோட்டம் செய்துள்ள இடங்கள் மற்றும் தொழில முயற்சி செய்யும் இடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டு மக்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

யாழில் அமைந்துள்ள அமெரிக்க கோர்னரில் ஆங்கில டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கும் சான்றிதழ்களை வழங்கி வைத்துள்ளார்.

நேற்றைய தினம் முகமாலை சென்ற ரொபேர்ட் ஹில்ரன் அங்கு கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஹலோ ட்ரஸ்ற் பணியாளர்களையும் சந்தித்து கண்ணிவெடி அகற்றும் இடங்களை யும் பார்வையிட்டிருந்தார். இதன் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சரினை அவரது அலுவலகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப், அமெரிக்க விமானப் படையினரால் யாழில் நடத்தப்பட்ட மருத்துவ முகாம்களில் கலந்து கொண்டிருந்ததோடு, கட்சி தலைவர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் ஊடகத் தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மூன்று தினங்களுக்கு முன்னர் வருகை தந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான அமைச்சர்களையும் மற்றும் ஆளுநர் ஆகியோரினை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் பின்னரே இந்த திடீர் விஜயத்தை இலங்கைக்கான அமெரிக்காவின் உதவி தூதுவர் ராபர்ட் ஹில்டன் நேற்று முன்தினம் மேற்கொண்டுள்ளார்.

இவர் தனது விஜயத்தின் போது, வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள் இருவர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள், ஊடகத்தரப்பினர் உட்பட பலரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பிற்கான காரணம் குறித்து உத்தியோக பூர்வமான தகவல்கள் எதுவும் வெளியிடப்படாத போதிலும், இலங்கை அரசினால் அமைக்கப்படவுள்ள காணாமற்போனோர் அலுவலகம் மற்றும் புதிய அரசியலமைப்பு ஆகியவை தொடர்பிலேயே ராபர்ட் ஹில்டன் அதிகளவு கவனம் செலுத்தியுள்ளதாக அறிய முடிகின்றது. (இ-4)

## சத்திய தரிசனம்



### பொறுமையே உயர்ந்த செல்வம்

❖ கணத்துக்கு கணம் மாறிக் கொண்டே இருக்கும் இந்த பிரபஞ்சத்தில் மாறாமல் இருக்கும் சக்தி ஒன்று உள்ளது. இந்த ஆதாரமான தெய்வசக்தியை உணர்ந்தால் தான் ஆனந்தம் பெற இயலும். எந்தப் பாதையில் சென்றாலும் இந்தத் தெய்வீக அடிப்படையை மறக்காமல் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் இந்நாளைய மனிதர்கள் தனம், பதவி, அதிகாரம் போன்றவற்றில் நாட்டம் கொண்டு செயற்படுகின்றனரேயன்றி குணத்தில் நாட்டம் கொள்வதில்லை.

❖ குணமில்லாமல் அதிகாரம் செலுத்தியோ, உயர் பதவி வகித்தோ, பணம் சம்பாதித்தோ பயனில்லை. மனிதருக்கு முக்கியமான தகுதி குணமே. இதற்கு தெய்வத்துவத்தை உணர முயல வேண்டும். இயல்பை விட்டு விட்டால் வாழ்க்கை வீணாகிவிடும்.

❖ நல்லதற்கும், கெட்டதற்கும் எண்ணமே காரணம். எல்லாமே சத்தியத்திலிருந்து வந்தவை. சத்தியமே தெய்வஸ்வரூபம். சத்தியமே எல்லாவற்றிற்கும் ஆதாரம். சத்தியத்தைவிட மேலான தர்மம் வேறு இல்லை. படைப்பனைத்தும் சத்தியத்தில் பிறந்து சத்தியத்திலேயே இணைகின்றன. சுத்தசத்துவமே அதன் துணை. இதில் குணத்திற்கே முக்கியத்துவம் உள்ளது.

❖ எவ்வளவு தனவந்தராயினும் குணமே பிரதானமானது. தெய்வத்துடன் கூடிய நற்குணமே மனிதத் தன்மையை வெளிப்படுத்தக்கூடியது.

❖ இந்தத் தெய்வீக உணர்வினைப் பற்றிப் பாரத மக்கள்தான் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார்கள். இன்று இப்படிப்பட்ட உயர்ந்த கலாசாரத்தை மறந்து விட்டனர். இந்த தெய்வீக உயர்வினை மறந்துவிட்டது மிகுந்த துர்பாக்கியமே.

❖ எல்லா தனங்களையும்விட மிகவும் உயர்ந்த தனம் பொறுமையே. எல்லா விரதங்களையும்விடச் சிறந்த விரதம் சத்தியமே. தாய்மையை விடச் சிறந்த பாக்கியம் ஏதுமில்லை.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில மறவன்புலோ - கேரதீவு வீதி, கோகிலாக்கண்டி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில சாம்பல்தோட்டம் கிராமம், தோணிக்கல் சிவன்கோவில் பிரதேசம், குட்செட்வீதி, குருமன்காடு சந்தியிலிருந்து குருமன்காடு பிள்ளையார் கோவில் வரை, சமணன்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முதலைக்குத்தி பிரதேசம், சிறுநாவற்குளத்திலிருந்து நறுவிலிக்குளம் வரைக்கும், வங்காலை, தோமஸ்புரி, பாஸ்திபுரி, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு விழாவை முன்னிட்டு மரதன், கயிறு இழுத்தல் போட்டி

குரும்பைகட்டி சனசமூக நிலைய ஆண்டு விழாவை முன்னிட்டு வெளிக்கழகங்களுக்கான மரதன், கயிறு இழுத்தல் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றுவோர் உடனடியாக 077 8217853, 077 712 8754, 077 226 7562 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

## துடுப்பாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

சென்.சாள்ஸ் பாடசாலை பழைய மாணவர்கள் நடத்தும் யாழ்ப்பாணத்தின் மாபெரும் துடுப்பாட்ட போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை சென்.றோக் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற அனைத்து விளையாட்டுக்கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

சம்பியன் ஆகும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் இரண்டாம் இடத்தினை பிடிக்கும் அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் 077 873 6912 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

# பொலிகண்டி சிமாட் போய்ஸ் வி.க. நடத்திய கிரிக்கெட் சுற்றுத்தொடர் தொண்டைமானாறு ஒற்றுமை சம்பியன்







பொலிகண்டி சிமாட் போய்ஸ் வி.க. அங்குரார்ப்பணத்தை முன்னிட்டு அண்மையில் நடத்தப்பட்ட அணிக்கு 9 நபர்கள், 6 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட மென்பந்தாட்டச்சுற்றுப்போட்டியில் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது. இரண்டாம் இடத்தை வல்வை விளையாட்டுக்கழகம் பெற்றுக்கொண்டது.

காலிறுதிப்போட்டியில் நெடியகாடு இளைஞர் வி.கழகத்தினை 6 இலக்குகளாலும் அரையிறுதிப்போட்டியில் கொம்மந்தறை வி.கழகத்தை 39 ஓட்டங்களாலும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது வல்வை விளையாட்டுக்கழகம்.

நடைபெற்ற இறுதிப்போட்டியில் தொண்டைமானாறு ஒற்றுமை வி. கழகத்தை எதிர் கொண்ட வி.க. 12 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தொடராட்ட நாயகனாக வல்லை அணியின் தலைவர் பிரணவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க)

# செல்வபுரம் சந்திரனை வீழ்த்தி சம்பியனாகியது முல்லை.சென்யூட்





சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் அண்மையில் நடைபெற்ற மாபெரும் இறுதி ஆட்டத்தில் முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழகம் மோதியது.

போட்டி முடிவில் சென்.யூட் விளையாட்டுக்கழகம் 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பெற்று சம்பியன் ஆகியது. (க)

## மாகாண மட்டத்தில் பங்கு கொள்ளும் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணி



கிளிநொச்சி மாவட்டம் சார்பில் மாகாண போட்டியில் விளையாடும் காற்பந்தாட்ட மகளிர் அணிக்கு இன்று சீருடைகள் மற்றும் சத்துணவுகள் வழங்கி வைக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் குறித்த பொருட்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டம் சார்பில் மாகாண மட்ட போட்டியில் பங்கு கொள்ளும் காற்பந்தாட்ட மகளிர் அணிக்கே இவ்வாறு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதன் போது குறித்த போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்களை அரசாங்க அதிபர் உற்சாகப்படுத்தியதுடன் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் வழங்கியிருந்தார்.

குறித்த நிகழ்வில் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், விளையாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் புதிதாக இரண்டு கிரிக்கெட் மைதானங்களை அமைக்கவுள்ள இலங்கை கிரிக்கெட் சபை, கிரிக்கெட் அதிகம் பரவியிருக்காத இலங்கையின் பகுதிகளில், கிரிக்கெட்டை வளர்ப்பதற்கு முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இரண்டு மைதானங்களும் அமைக்கப்படுவதற்கான அனுமதியை, இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுச் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அண்மைய, எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள மேற்படி திட்டங்களுக்கு, 200 மில்லியன் ரூபாய் செலவிடும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் டி சில்வா, யாழ்ப்பாணத்திலும் பொலநறுவையிலும் கிரிக்கெட் அரங்கை அமைப்பதற்கு, தலா 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளதோடு, இத்திட்டங்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.



முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பிரிவு அணிகளுக்கு இடையே நேற்று 5 ஆம் திகதி நடத்தப்பட்ட அணியில் 6 பேரை உள்ளடக்கிய ஐந்து பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் முள்ளியவளை பொலிஸ் பிரிவு அணி சம்பியனாகியது. இவ்விறுதிப் போட்டியானது முல்லைத்தீவு முற்றவெளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ் இறுதிப்போட்டியில் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவு அணியும் மாங்குளம் பொலிஸ் பிரிவு அணியும் மோதிக்கொண்டன. இதில் மாங்குளம் அணியினர் புதுக்குடியிருப்பு அணியினரை 2 இலக்குகளால் வெற்றி கொண்டனர். இப் போட்டியானது பொலிஸ் சேவையின் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டது. போட்டியில் கலந்து கொண்ட அனைத்து அணிகளிலும் பொலிஸாரும் சிவில் சமூகத்தினரும் இணைந்து போட்டியிட்டமை பொலிஸ் - பொதுமக்கள் உறவை வெளிப்படுத்தும் சிறப்பம்சமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் முதலில் நடைபெற்ற அரை இறுதியாட்டங்களில் மாங்குளம் பொலிஸ் அணியினரை வெற்றி கொண்டு முள்ளியவளை பொலிஸ் அணியினரும் மல்லாவி பொலிஸ் அணியினரை வெற்றி கொண்டு பதுக்குடியிருப்பு பொலிஸ் அணியினரும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தனர். (302)

## 28ஆவது தேசிய வலைப்பந்தாட்ட போட்டி-2016

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில் யா/மத்திய கல்லூரி மைதானத்தின் 28 ஆவது தேசிய மட்ட இருபாலாருக்குமான வலைப் பந்தாட்ட போட்டி நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு 10.09. 2016 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம் நடத்திய மாணவி...

அதிபரின் பதவிக்காலத்தை நீடிக்க கோரி தொடர் உண்ணா விரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் மற்றும் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் மீதும் பாதிரியாரும் ஆசிரியரும இணைந்து தாக்கியமையினால் கல்லூரி வளாகத்தில் நேற்றையதினம் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இதனால் பாடசாலைக்குள் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுரவரப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் பிரபல பெணகள் கல்லூரிகளில் ஒன்றான உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் கல்லூரி அதிபராக இதுவரை பதவி வகித்துவரும் சிராணி மில்ஸின் பதவிக்காலத்தை நீடிக்க வேண்டும் என வலியுறுத்தி தொடர் உண்ணா விரத போராட்டத்தை மேற்கொணடு வருகின்றனர்.

கடந்த 3ஆம் திகதி சனிக்கிழமை கல்லூரியின் மாணவிகள் ஆரம்பித்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதிபராகப் பதவி வகித்து வரும் சிராணி மில்ஸ் நேற்று முன்தினம் 6 ஆம் திகதி 60 வயதை எட்டியுள்ள நிலையில் அவரை எப்படியாவது பதவியிலிருந்து நீக்க வேண்டும் என கல்லூரியை முகாமைத்துவம் செய்து வரும் திருச்சபையினரும் சில ஆசிரியர்களும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனாலும், 192 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்தக் கல்லூரியில் ஏற்கெனவே பதவி வகித்த அதிபர்களில் எட்டுப்பேர் 65 வயதுக்கு மேல் பதவி வகித்துள்ளனர் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கல்லூரி மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்று 8ஆம் திகதியே கல்லூரி மீண்டும் ஆரம்பமாகும் என பாடசாலை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டு அதற்கு முன்னைய



நாட்களில் பாடசாலை வந்த மாணவிகளும் திருப்பி அனுப்பப்பட்டனர். பதவியிலிருக்கும் தற்போதைய அதிபரைக் கல்லூரி மாணவிகள் சநதித்து விடக் கூடாது எனும் நோக்கிலும் பதவியிலுள்ள கல்லூரி அதிபருக்கு மாணவிகள் பிரியாவிடை கூட நடத்தாமல் அவரைப் பதவியிலிருந்து நீக்கும் வகையிலுமே



இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

ஏற்கெனவே பதவியில் உள்ள அதிபரை தொடர்ந்தும் பதவி நீடிப்பு செய்யுமாறு தென்னிந்திய திருச்சபையின் அமெரிக்க தலைமைப் பீடம் அறிவுறுத்தியுள்ள போதிலும் அதனை இங்குள்ளவர்கள் புறந்தள்ளி புதிய அதிபரை கொண்டு வருவதற்கு ஏன் முயற்சிக்கின்றனர் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பில் வலிகாமம் வலய கல்வி பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் தலையிட்டும் இறுதிவரை மாணவிகள் தமது கோரிக்கைகளில் இருந்து பின்வாங்கவில்லை. இதனால் போராட்டம் நேற்றையதினம் ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்திருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் பாடசாலையின் புதிய அதிபராக தெரிவு செய்யப்பட்டவருக்கு வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபையின் ஆயர் இல்லத்தில் அதிபருக்கான நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த வைபவம் முடிவில் ஒரு சில ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோர் பஸ் ஒன்றில் நேற்று முற்பகல் பாடசாலைக்கு வந்த வேளை, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவிகள் அவர்களை பாடசாலைக்குள் நுழையவிடாது மறித்தனர்.

இதனால் மற்றைய வாயில் மூலமாக அவர்கள் செல்ல எத்தனித்த வேளை மாணவிகள் அனைவரும் தமது கைகளை பிடித்து செல்ல விடாது மறித்தனர். இதன் போது அங்கு வந்த பாதிரியார் ஒருவரும் ஆசிரியர் ஒருவரும் இணைந்து மாணவிகளை தாக்கினார்கள்.

இதனால் மாணவிகள் அனைவரும் கூக்குரலிட வெளியே நின்று கொண்டிருந்த இளைஞர்கள் சிலர் பாடசாலைக்குள் உள் நுழைந்து



மாணவிகள் தாக்கப்படுவதில் இருந்து பாதுகாத்தனர். இதன் போது குறிதத இளைஞர்களில் ஒருவரும் ஆசிரியரால் தாக்கப்பட்டதோடு, அதனை படம் பிடித்த ஊடகவியலாளரும் தாக்கப்பட்டார்.

இச்சம்பவத்தால் கல்லூரி வளாகம் அல்லோலகல்லோலமாக காணப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்திற்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதன் போது தற்போதுள்ள அதிபரை அவரது அறையில் வைத்து பாதுகாப்பாக மூடிய மாணவிகள் அவரை வெளியேற்ற முடியாதவாறு சூழ்ந்து நின்றனர்.

இதனால் அவ் அதிபரை வெளியேற்ற பாடசாலை நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இவ்வாறு தொடர்ச்சியாக மோதல்கள் நடைபெற்று கொண்டு இருக்க சம்பவ இடத்திற்கு வந்த யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெனிஸ்லஸ் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் ஆகியோர் போராட்ட நிலைமைகளை சுமுகமாக கொண்டு வருவார்கள் என எதிர்பார்த்த போதிலும், மாணவிகளின் போராட்டம் சுமுகமாக முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை.

நாங்கள் மூன்று தினங்களாக தொடச்சியான போராட்டம் மேற்கொண்டு வருகிறோம். கல்லூரியை முகாமைத்துவம் செய்து வரும் திருச்சபைக்குள் ஏற்பட்டுள்ள குழப்பகரமான நிலைமைக்காக எங்கள் கல்வியைப் பாழடிப்பது எந்த வகையில் நியாயம்? எனக் கேள்வியெழுப்பிய போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகள் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய கல்வியைப் பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. தற்போதைய கல்லூரி அதிபரின் பதவிக் காலத்தில் எமது கல்லூரி கல்வியிலும் விளையாட்டிலும் ஏனைய இணைப்பாடவிதானச்செயற்பாடுகளிலும் யாழ்ப்பாணத்தில் முன்னிலை வகித்து வருகிறது.

அதுமட்டுமல்லாமல் எமது அதிபர சிறந்த ஒழுக்கத்தையும் எமக்குக் கற்றுத் தந்த ஒருவர். ஆகவே எமது அதிபர் எமக்கு மீண்டும் வேண்டும எனவும் குரலெழுப்பினர்.

இந்த அதிபர் மாற்றத்திலும் அதன் பின்னரான போராட்டங்கள் மற்றும் குழப்பங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், அரசு தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மற்றும் தென்பகுதியைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் ஆகியோருடைய பின்னணி காணப்படுகின்றது எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை நேற்றையதினம் மயக்க மடைந்த மாணவிகள் மூவர் தெல்லிப்பழை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

# தமிழ் மக்...

க்குத் தீர்வுகாண்பதை காலம் தாழ்த்தும் கபடத்தனம் என்பவற்றைக் கண்டித்து இப் பேரணி நடைபெறவுள்ளது.

இப் பேரணிக்கு அனைத்துத் தரப்புகளையும் ஆதரவு தருமாறு தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை இப் பேரணிக்கு தமிழ் அமைப்புக்கள் பலவும் தமது ஆதரவைத் தெரிவித்தவண்ணமுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

# மோ.சைக்...

இதில் இளவாலையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான திலீப்குமார் (வயது 30) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த எஸ்.யதுசன் (வயது 25) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

உயரிழந்த குடும்பஸ்தரின் சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-30)

# தமிழர் மனோநிலை அறிந்த...

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்காவின் பிரதி தூதுவர், யூ.எஸ்.எயிட் நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர் அன்ருசிசன் மற்றும் ஜேம்ஸ் எல்.ரூசோ ஆகியோர் அடங்கிய குழுவினர் வடமாகாண முதலமைச்சரை அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்நிலையில் இக் கலந்துரையாடல்தொடர்பாக வட மாகாண முதலமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்ட விடயத்தை தாம் குறிப்பிட்டிருந்ததாக தெரிவித்திருந்தார்.

அந்தவகையில் இச் சந்திப்பு தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இச் சந்திப்பிலே நாம் முக்கியமாக எடுத்துரைத்த விடயமாவது, மத்தி எதனையும் எங்களோடு கலந்தாலோசித்து நடவடிக்கை எடுத்தால் நிர்வாகத்தை சீராக நடைமுறைப்படுத்தலாம். குறிப்பாக நிர்வாக ரீதியாக பார்க்கும் போது வடக்குக்கு நன்மை தரும் விடயம் எனறு கூறிக்கொண்டு அவ் விடயம் தொடர்பாக எம்மோடு எதுவும் பேசாது தீர்மானங்கள் அனைத்தையும் கொழும்பில் இருந்தே முடிவுகளை எடுத்துவிட்டு இறுதியாக வந்து எம்மிடம் அதற்கு ஒத்துழைப்பு கேட்பது எவ்விதத்திலும் நன்மை பயக்காது என்பதை எடுத்து கூறினேன்.

மேலும் அதிகார பரவலாக்கம் தொடர்பாக பேசும் போது இங்குள்ள பிரச்சினை போன்றே இந்தோனேசியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் காணப்படதை அவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

அதாவது இங்கு வந்திருந்தவர்களில் அன்ருசிசன் இந்தோனேசியாவிலே தாம் இருக்கும் போது, சில தனித்துவமான மக்கள் கூட்டம் வசிக்கும் இடங்களிலே தங்களை தாங்களே ஆளும் வண்ணமாக சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை அறிந்து கொண்டதாகவும் அவ்வாறு தான் அங்கு போர் முடிவடைந்தமையும் குறிப்பிட்டிருந்தார்.

2000 வருடங்களாக தனித்துவமான மொழி கலாசார பின்னணியோடே வடக்கு கிழக்கு இருந்ததை சுட்டிகாட்டி 1833 இல் பிரித்தானியர் தமது நிர்வாக இலகுவிற்காக வேறு வேறாக இருந்த மாகாணங்களை ஒருங்கிணைத்து ஒரு நாடாக உருவாக்கியமையும் அவர்களுக்கு சுட்டிக்காட்டியிருந்தேன் 1948ஆம் ஆண்டு எமக்கு தரவேண்டிய தனித்துவமான ஆட்சியைத் தராமல் முழு நாட்டையும் ஆங்கிலேயர் விட்டுச் சென்றனர்.

ஆனாலும் 29ஆம் உறுப்புரையின்படி சிறுபான்மையினருக்கு எதிராக சட்ட இயற்றமுடியாது என ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் 1972ஆம் ஆண்டு குடியரசு யாப்பானது சிறுபான்மையினரை பாதிப்பதாக அமைந்தமையாலேயே பின்னர போர இடம்பெறுவதற்கு காரணமாய் இருந்தமையும் அவரகளுக்கு எடுத்து கூறியிருந்தேன்.

அந்தவகையில் நாம் மத்திய அரசுக்கு தெளிவுபடுத்த அல்லது வலியுறுத்துவதுமாறு கோருவது என்னவெனில் தமிழ் மக்களது மனோநிலையை அவர்களது சரித்திர பின்னணியை நீண்டகால எதிர்பார்ப்பை மத்திய அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்தோடு அதனடிப்படையில் அரசியல் யாப்பு மாற்றங்கள் இடம் பெற வேண்டும் என்பதை [illegible] எனமுதல் அமைச்சர் மேலும் தெரிவித்திருந்தார். (செ-4)

# பாரத கொலை...

டும் என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணை, சுமார் ஒன்றரை வருடங்களாக இடம்பெற்றுவந்த நிலையில், பிரதிவாதிகளில் தலைமறைவாகியுள்ள கலகொட என்பவரைத் தவிர ஏனைய அனைத்து பிரதிவாதிகளும் சாட்சியமளித்துள்ளதால், வழக்கு விசாரணை நிறைவடைந்துள்ளது.

பாரத லக்ஸ்மன் பிரேசந்திர கொலை தொடர்பில் துமிந்த சில்வா உள்ளிட்ட 13 பேருக்கு எதிராக 17 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7605
021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனுடன்...

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன் றுக்கு அளித்துள்ள செவ்வியில் அவர், எனது தலைமையிலான 53 ஆவது டிவி சனே. புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், கடற்புலிகளின் தளபதி சூசை, தளபதி பானு உள்ளிட்டோரை கொன்றது.

2009 மே 19ஆம் திகதி காலை 9.30 மணியளவில் தொடங்கி 45 நிமிடங்கள் நீடித்த சண்டையில் தான். பிரபாகரன் 4ஆவது விஜயபாகு படைப்பிரிவினால் கொல்லப்பட்டார்.

நந்திக்கடலில், 2009 மே 19ஆம் திகதி பிரபாகரன் கொல்லப்படுவதற்கு முதல்நாள், பொட்டம்மான் கொல்லப்பட்டார். இதனை நான் நிச்சயமாக கூறுகிறேன்.

எனினும் புலிகளின் தலைவர் யாராவது இறுதிப்போரில் உயிர் தப்பி வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்தால் நிச்சயம் அவர்கள் வெளியே வந்திருப்பர். ஆனால் அவவாறு இதுவரை நடக்கவில்லை.

பிரபாகரனின் மூத்த மகன் சாள்ஸ் அன்ரனி, கெமுனுவோச் படைப்பிரிவுடனான சண்டையில். 2009 மே 18ஆம் திகதி கொல்லப்பட்டார். ஆனால், பிரபாகரனின் இரண்டாவது மகன் பாலச்சந்திரன் என்னவானார் என்பது எனக்குத் தெரியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தலைமையிலான 53ஆவது பிரிவிடம் சரணடைந்த நிலையிலேயே பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டார் என்று குற்றச்சாட்டுகள் சாவதேச ரீதியில் முன்வைக்கப்படடிருப்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# அநுரவுக்கு தொடர்...

நீடிக்கப்பட்டுள்ளது.

பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பிலான சாட்சிகளை மறைக்க முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த மே மாதம் 23ஆம் திகதி இவர்கள் இருவரும் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், வசீம் தாஜுதீனின் கொலை வழக்கு நேற்று புதன்கிழமை புதுக்கடை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு இடம்பெற்ற வசீம் தாஜுதீனின் மரணம் தொடர்பில் சர்ச்சைகள் நிலவி வந்த நிலையில், தற்போதைய அரசாங்கத்தின் மீள் விசாரணையில் வசீம் தாஜுதீன் கொலை செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (செ-11)

# முப்படைகள், பொலிஸ்...

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதில் வழங்கிய போது பிரதமர் இதனை அறிவித்தார்.

யுத்தம் ஆரம்பித்த பின்னர் அரச பாதுகாப்பு தரப்பில் கடமையாற்றிய தமிழ் அதிகாரிகள் விடுதலை புலிகளினால் கொலை செய்யப்பட்டதாக தெரிவித்த பிரதமர், இதன் காரணமாக தமிழர்கள் பாதுகாப்பு படைகளில் இணைவதற்கு தயக்கம் காட்டியதாக தெரிவித்தார்.

அதேபோன்று யுத்தம் இனவாத ரீதியில் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக தமிழர்கள் பாதுகாப்பு படைகளில் இணைவதற்கு முன்வரவில்லை என்றும் பிரதமர் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு 206 தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதாக தெரிவித்த பிரதமர் விக்கிரமசிங்க, இவர்கள் தற்போது வடகிழக்கு பிரதேசத்தில் கடமையாற்றி வருவதாக அறிவித்தார்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்த பிரதமர் விக்கிரமசிங்க, அரசாங்கம் அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமென்று மேலும் தெரிவித்தார். (செ-11)

# மாணவர்கள்...

சாட்டினார்.

தற்போதைய ஆட்சியின் கீழ் 107 மாணவர்களின் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், 57 மாணவர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டினார்.

கடந்த தினங்களில் பல்கலைகழக மாணவர்கள் நடத்திய பேரணிகள் மீது பொலிஸார் ஏழு தடவை கண்ணீர் புகைத் தாக்குதல் நடத்தியுள்ளதாக அவர் குற்றம்சாட்டினார்.

இந்த நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்க, பாதிக்கப்பட மாணவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு பதிலளித்த உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, பல்கலைக்கழக மாணவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக குற்றம்சாட்டினார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு சலுகைகளை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், மாணவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்வதன் மூலம் இப்பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ள முடியுமென்று மேலும் தெரிவித்தார். (செ-11)

# இணைந்த நேர...

டும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இறுதிநேரத்தில் சில தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கான காரணத்தை தெரியப்படுத்தும் முகமாக யாழ் குருநகரில் அமைந்துள்ள வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மாகாணத்தில் இணைந்த நேர அட்டவணை பின்பற்றப்படாமையினால் பல்வேறு அசௌகரியங்களை பொதுமக்களும் பிரயாணிகளும் எதிர்நோக்கியிருக்கின்றார்கள்.

எனவே போக்குவரத்து சேவைகளை சீர் செய்யும் நோக்குடன் எமது அமைச்சால் நியதிச்சட்டம் உருவாக்கப்பட்டதுடன் உச்ச நீதிமன்றின் தீர்ப்பில் உள்ளவாறு 60 க்கு 40 என்ற வீதத்தில் இலங்கை போக்குவரத்து சேவைக்கும் தனியார் போக்குவரத்து சேவைக்குமான இணைந்த நேர அட்டவணையை அமுல்படுத்துவதற்கு தீர்மானித்திருந்தோம்.

அந்த வகையில் பல மாதங்களாக இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இரு தரப்பினருடனும் பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவர்களின் சம்மதத்துடன் நேற்றைய தினம் முதல் வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களுக்கும் இடையிலான இணைந்த நேர அட்டவணையை அமுல்படுத்துவதாக அறிவித்திருந்தோம்.

அந்தவகையில் வடமாகாணத்தின் முக்கிய 21 இடங்களில் மேற்படி விடயத்தினை கண்காணிப்பதற்காக விசேட ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுநேரம் கண்காணிக்கப்படும் இடங்களில் இலங்கை போக்குவரத்து சபையின் நேரக்கணிப்பாளர்களும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் நேரக்கணிப்பாளர்களும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நேரக்கணிப்பாளர்களும் சேவையில் ஈடுபட பணித்திருந்தோம்

அந்தந்த இடங்களில் அவர்கள் கண்காணிப்பில் ஈடுபட்ட போது எம்மால் கொடுக்கப்பட்ட நேர அட்டவணைக்கும் நேரக் கட்டுப்பாட்டு அறிக்கைக்கும் இடையில் ஒரு சில வேறுபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. அதாவது பரந்தன், ஏ9 மற்றும் ஏ32 ஆகிய இடங்களில் இப் பிரச்சினை அறியப்பட்டுள்ளது. அவை சீர்செய்யப்படவேண்டியுள்ளது.

அத்துடன் 5 மாவட்டங்களில் இருந்தும் இலங்கை போக்குவரத்து சபைக்கும் தனியார் போக்குவரத்து சபையினர் கோரிக்கைகளை தெரியப்படுத்தினார்கள் அவையும் சரிசெய்யப்படவுள்ளன. அவை ஒரு சில தினங்களில் பூர்த்தி செய்யப்பட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த இணைந்த நேர அட்டவணை அமுல்படுத்துவதற்கு தனியார் போக்குவரத்து சபையினர் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். அத்துடன் இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய முகாமையாளர் பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ள போதிலும் ஒரு சில சாலை முகாமையாளர்கள் இறுதி நேரத்தில் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என தெரிவித்திருந்தார்.

அவரின் நிர்வாகத்துக்கு கீழ் உள்ள சாலை முகாமையாளர்களை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு வடபிராந்திய முகாமையாளருக்கு உள்ளது. எனவே அவர் அதை சரிசெய்ய வேண்டும் இல்லாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சில தினங்களில் இந்த இணைந்த நேர அட்டவணை அனுப்படவுள்ளது. எமது பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு சேவை வழங்குநர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

இணைந்த நேர அட்டவணை அமுல்படுத்தப்படும் பொழுது சட்டத்தை கடைப்பிடிக்காமல் தன்னிச்சையாக நடப்பவர்கள் தமது தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலுக்கு செல்வது நன்மையாக இருக்கும். ஏனெனில் இதற்கு மேலும் பொறுமை காப்பதில் அர்த்தமில்லை. இதை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளேன் என என அமைச்சர் டெனீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (செ-9)

# மஹாகும்பாபிஷேகம்



திருநெல்வேலி தெற்கு பிள்ளையார் வீதி திருவருள்மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய மஹாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா இன்று வியாழக்கிழமை காலை 6.48 மணிமுதல் 8.43 மணிவரையுள்ள சுபமூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தான பிரதமகுரு ஸ்ரீவிஷ்ணு ஸ்ரீக.ச சோமஸ்கந்தக்குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக பொறுப்பேற்று மேற்படி மஹாகும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கவுள்ளார். (செ-11)


போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
வடமராட்சி மாணவர்களின் நன்மை கருதி
சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள்
08.09.2016 தொடக்கம் 17.09.2016 வரை
ஆசிரியர் சேவைக்கான வகுப்புக்கள்
பிரதி சனிக்கிழமை தோறும் காலை 08.30 - 12.30
பொது உளச்சார்பு பொது அறிவு
உயர்கல்லூரி
T.P No : 077 876 0992 077 344 3962

V2 TRAVELS 11/09/2016
வெளிநாட்டுக்கு பார்சல் அனுப்பப்போறீங்களா?
விமானப்பயணச்சீட்டு எடுக்கப்போறீங்களா?
UK - 550/=Kg
DELIVERY IN 3-5 DAYS
முற்பதிவுகளுக்கு - 0768226240

ACS Technology System (Pvt) Ltd.
1st Mile post Junction, Point Pedro.
Computer courses
Microsoft Office
Computer Application
DeskTop Publishing
Internet & E-mail
Hardware
Web Designing
After A/L Exam
Programming Languages
JAVA, C/C++, C#, PYHON, HTML, PHP
English Class
Spoken & Grammer
Kids Programe
சிறுவர்களுக்கான கணனிக் கற்கை நெறி
Sinhala Class
ACS, 1ம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. T.P : 0783035181

கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
GUNA BEST PC 0779086737
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்றல் வாங்குதல்
COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
50/12 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம். 522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World wide Express No.401 Clock tower road, Jaffna.
அழையுங்கள் - 077 29 31 062

வடக்கின் 1 வது ஹொட்டேல் பயிற்சிக் கல்லூரி
SIKARAM ACADEMY school of hospitality
இப்போது... 175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி). யாழ்ப்பாணம்
Modern Front Office Set Up • Room Division with 8 Rooms • Kitchen with Modern Equipments • Library, IT Lab with Wi-Fi • Modern Lecture Hall
Jaffna Traditional Healthy Food Court
Diploma in Hospitality Management
Front Office - Restaurant - Housekeeping - Culinary Art
புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch 077 3616 798 021 222 0011
www.sikaram.lk Sikaram Academy

பணிப்பெண் தேவை
கொழும்பில் தங்கி நின்று பணிபுரியக் கூடிய வீட்டுப் பணிப் பெண் தேவை.
தொடர்புகளுக்கு:0774809019

வேலையாள் தேவை
கொழும்பில் கோயில், வீட்டு வேலைகள் செய்வதற்கு சைவ போசன பழக்கமுள்ள ஆண் வேலையாள் தேவை.
தொடர்பு:0772935509


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org